உதயன்
விலை ரூபா 15.00
www.uthayan.com
சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 13 புதன்கிழமை (29.09.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 307

# புலிகள் தோற்றுவிட்டதால் அரசியல் தீர்வு தேவையில்லையா?

## ஐ.தே.கட்சியின் கருத்தால் கொதிக்கின்றன தமிழ்க் கட்சிகள்!



கொழும்பு, செப். 29

தமிழர் பிரச்சினை தொடர் பாக ஐ.தே.கட்சி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க பி.பி.ஸியின் 'சந்தேஷய' சேவைக்கு வழங்கிய செவ்வி தமிழ்க் கட்சிகள் மத்தியில் கடும் கொதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

யுத்தத்தில் புலிகள் தோற்கடிக்கப்பட்டு விட்டதால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டிய தேவை இப்போது இல்லை என்று பி.பி.ஸி. சிங்களச் சேவையான 'சந்தேஷய'வுக்கு அளித்த பேட்டியில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்திருந்திருக்கிறார். அது குறித்து தமிழ்க் கட்சிகள் கொதிப்படைந்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட எம்.பியுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்:

''ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். ஆயுதம் ஏந்திப் போராடினால் மட்டுமே தமிழ் மக்களுக்கு ஏதாவது தருவோம் என்ற நிலைப்பாட்டில் பெரும்பான்மைக் கட்சிகள் இருக்கின்றன என்பதையே ஐ.தே.கட்சிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவின் கூற்று நிரூபிக்கின்றது'' என்று தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு (24ஆம் பக்கம் பார்க்க)

ஐ.தே.க. செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க 'சந்தேஷய'வுக்கு வழங்கிய செவ்வியின் விவரம் 5 ஆம் பக்கத்தில்

## பொன்சேகாவுக்கு எதிராக மற்றொரு வழக்கு

கொழும்பு, செப்.29

சரத் பொன்சேகாவுக்கு எதிராக மற்றுமொரு குற்றப்பத்திரிகை தாககல் செய்யப்பட்டுள்ளது.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற 10 உறுப்பினர்களைத் தம்முடன் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா மற்றும் அவரின் செயலாளர் சேனக டி சில்வா ஆகியோருக்கு எதிராக இந்தக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நேற்று இதற்கான குற்றப்பத்திரிகை சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜனாதிபதித் தேர்தலின் போது சரத் பொன்சேகா, தப்பிச்சென்ற படையினரைத் (24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா மீதான விசாரணை 4ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு , செப். 29

இறுதிக் கட்ட வன்னிப் போரின் போது வெள்ளைக் கொடிகளுடன் சரணடையச் சென்ற புலிகளின் தலைவர்கள் சுடப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையை கொழும்பு மேல் நீதிமன்றம் எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளது.

வெள்ளைக் கொடிகளை ஏந்தி படையினரிடம் சரணடைய வந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்களைச் (03ஆம் பக்கம் பார்க்க)

## 450 ஏக்கர் வயல் நிலம் விடுவிக்கப்பட்டு அரியாலை கிழக்கில் நேற்று ஏர்பூட்டு விழா

அரியாலை கிழக்கில் 450 ஏக்கர் நிலத்தை பாதுகாப்பு வலயத்தில் இருந்து விடுவித்து அங்கு வடபகுதியின் பெரும் போக நெற்செய்கைக்கான ஏர்பூட்டும் நிகழ்வுகள் நேற்று சிறப்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பாரம்பரிய மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அமைச்சர் கே. என்.டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஆகியோர் இணைந்து இந்த நிலப்பரப்பைக் கையளித்த பின்னர் ஏர்பூட்டு விழாவை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

கமநல சேவைகள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்க, விவ (24ஆம் பக்கம் பார்க்க)



அரியாலை கிழக்கு ஏர்பூட்டு விழாவில்...

## அறிவித்தபடி பஸில் வரவில்லை

யாழ்ப்பாணம், செப்.29

யாழ்.மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொள்ளவதாக இருந்த, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தவிர்க்க முடியாத காரணத்தால் குறித்த நிகழ்வுகளில் கலந்து கொள்ள முடியவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயக் கையளிப்பு, அரியர்லை கிழக்கில் நடைபெற்ற ஏர்பூட்டும் விழா ஆகியவற்றில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கலந்துகொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் தவிர்க்க முடியாத காரணங்களால் அவரால் சமுக மளிக்க முடியவில்லையென அரச தரப்பு தகவல்கள் தெரிவித்தன. (ஒ-9)

## விடுதலைப் புலிகள் சார்பில் வைகோ ஆஜராக முடியாது

### நடுவர் மன்றம் தீர்ப்பு

சென்னை, செப். 29

இந்தியாவில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீடிக்க வேண்டுமா என்பது தொடர்பான அரசாணை குறித்து நடுவர் மன்றத்தில் நடைபெறும் விசாரணையில் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ, புலிகள் சார்பில் ஆஜராக முடியாது என்று நடுவர் மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது, (03ஆம் பக்கம் பார்க்க)




## அமைச்சரவை விஸ்தரிப்பு நவம்பரில் 2 அமைச்சர்கள், 5 பிரதி அமைச்சர்கள்

கொழும்பு, செப்.29

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ இரண்டாவது ஜனாதிபதி பதவிக்காலத்துக்காக சத்தியப்பிர மாணம் செய்த பின்னர் அமைச் சரவை மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியின் இரண்டாவது பதவிக் காலம் நவம்பர் 17ஆம் திகதி ஆரம்பமாகின்றது. அப்போது அமைச்சர்கள் மீண்டும் சத் தியப்பிரமாணம் செய்து கொள்வர்.

18ஆவது அரசமைப்புத் திருத் தத்துக்கு ஆதரவாக வாக்களித்த ஐ.தே.கட்சி (24ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று மணி நேரமாக மங்களவிடம் விசாரணை

கொழும்பு, செப்.29

18ஆவது திருத்தச்சட்டத் துக்கு எதிராக விநியோகிப்பதற்கென நுகேகொடவில் உள்ள அச்சகம் ஒன்றில் சுவரொட்டிகளை அச்சிட்டது தொடர்பாக ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமர வீரவிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்று மூன்று மணித்தியாலங்கள் விசாரணை நடத்தியுள்ளனர். (ஒ-சி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் மீளவும் பாடசாலை நிர்வாகத்திடம் நேற்று கையளிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாடசாலை பெயர்ப் பலகையைத் திரை நீக்கம் செய்வதையும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க பாடசாலையின் நூலகத்துக்கென புத்தகங்களை ஆசிரியை ஒருவரிடம் கையளிப்பதையும் பாடசாலை அதிபர். த.கனகராஜா நன்றியுரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட வடமாகாணக் கல்விப் பணிப்பாளர், யாழ். அரசாங்க அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர் உட்பட்ப் பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் பார்வையாளர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: கவிநேசன்)

# சொந்த மண்ணை கைவிட்டு 20 வருட காத்திருப்பின் பின் மீண்டும் கால் பதித்து திளைக்கிறது வயாவிளான் ம.ம.வி



''வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் மாண்பினை உயர்த்தும் கொடி பறக்குதுபார்...!''

கடந்த 20 வருடங்களின் பின்னர் நேற்று இந்தப் பாடசாலைக் கீதம் தனது சொந்த இடத்தில் ஒலித்திருக்கிறது. பூனை தன் குட்டிகளைத் தூக்கிக் கொண்டு ஏழு இடங்களுக்கு செல்வது போல கடந்த 20 வருடங்களாக மாணவர்களை அங்கும் இங்கும் கொண்டு திரிந்து அலைந்து களைத்துப்போய் உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு முன்பாக தனியார் கட்டடத்தில் இயங்கி வந்த வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துக்கு நேற்றுடன் விடிவு காலம் கிடைத்துள்ளது.

இலவசக் கல்வி என வர்ணிக்கப்படும் டபிள்யூ டபிள்யூ கன்னங்கரவின் சிந்தனையின் அடிப்படையில் 11.06.1946 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை தரம் 5 முதல் உயர்தர வகுப்பு வரை ஆரம்பிக்கப்பட்டு விடுதி வசதிகள், கற்றல் கற்பித்தலுக்கான வசதிகள் யாவும் சிறந்த முறையில் ஏற்படுத்தப்பட்டு, பல கல்வி மான்களை உருவாக்கிய பெருமைக்குரிய நிறுவனமாக மிளிர்ந்து கொண்டிருந்தது.

**தொகுப்பு: கவிநேசன்**

இந்த நிலையில் 1990 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது இந்தப் பாடசாலையும் முழுமையாக இடம்பெயர்ந்தது. இருப்பினும் ஆயிரத்து 350 மாணவர்களை தன்னகத்தே கொண்டு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் எந்தவித சோர்வும் இன்றி சாதனைகளை படைத்து வலி. வடக்கு மண்ணில் கல்விப் பாரம்பரியத்தினை நிலைநிறுத்தி வைத்திருக்கும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலத்தின் எதிர்காலம் நேற்று முதல் தனது சொந்த இடத்தில் புதிய அத்தியாயத்தை தொடங்கியுள்ளது.

உரும்பிராயில் இருந்து பஸ் மூலம் மாணவர்கள் நேற்று முற்பகல் 9 மணியளவில் வயாவிளான் மத்திய மகா வித்தியாலத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

நீண்ட நாள்களாக தொலைத்த ஒரு பொருளை மீண்டும் பெற்றுக்கொள்ளும் போது ஏற்படுகின்றன மகிழ்ச்சிப் பிரவாகம் அந்த மாணவர்களின் மனங்களில் ஏற்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

20 வருடங்களாக வெறிச்சோடிக் கிடந்த அந்த வித்தியாயலம் தனது மாணவச் செல்வங்களை கண்ட சந்தோசத்தில் பிரமித்துப் போயிருந்ததை அவதானிக்க முடிந்தது.

வித்தியால வளாகத்தில் மாணவர்கள், பழைய மாணவர்கள், வயாவிளான் பகுதியைச் சேர்ந்த மக்கள் என ஏராளமானவர்கள் குழுமிஇருந்தனர்.

ஆனால் வித்தியாலயத்தின் தோற்றம் எல்லோர் மனங்களிலும் வேதனையை உண்டு பண்ணிக்கொண்டிருந்தது.

'' என்ன மாதிரிக் கிடந்த பள்ளிக்கூடம் என்னவோ மாதிரிக் கிடக்குது'' முதியவர் ஒருவர் முணுமுணுத்துக் கொண்டிருந்தார்.

ஒரே ஒரு கட்டடம் மட்டும் பாவிக்கக் கூடிய வகையில் இருக்கிறது. ஏனைய மூன்று கட்டடங்களும் தலையிழந்த முண்டங்களாக கூரைகளற்று காணப்படுகின்றன.

வகுப்பறைக் கட்டடங்கள் அனைத்தும் சிதைந்து சின்னாபின்னாமாகிக் கிடந்தன. இத்தகைய சோகம் கவிந்த சூழல் அங்கு காணப்பட்டாலும் எதோ எமது சொந்தப் பாடசாலைக்கு மீண்டும் வந்துள்ளோம் என்ற ஆத்ம திருப்தி எல்லோரது முகங்களிலும் அப்பட்டமாக தெரிந்தது. தம் சொந்த பாடசாலையில் காலடி வைத்த மாணவர்களின் மகிழ்வைப் பகிர்ந்துகொள்ளும் பொருட்டு அவர்களோடு அளவளாவினோம்.

## தி.சத்தியவேணி

(தரம் 10 மாணவி)



'' எங்களது சொந்த இடம் தெல்லிப்பழை ஆனால் இன்னும் அங்கு இருக்க விடவில்லை இருப்பினும் எங்கட சொந்தப் பள்ளிக்கூடத்துக்கு போய் படிக்கப்போறோம் என்று நினைக்கின்றபொழுது சந்தோசமாய் இருக்கு.

இருப்பினும் அங்கு மக்களையும் குடியேற்றினால் ஊரோடு இருந்து எவ்வளவு சந்தோசமாய் படிக்கலாம். இவ்வளவு காலமும் பல்வேறு இடர்களுக்கு மத்தியில் கல்வி கற்றோம். இனிமேலும் அத்தகைய நிலை வராது. எங்களுக்கு நிறைவான வசதிகளை உரியவர்கள் ஏற்படுத்தித் தரவேண்டும்.

## துளசி செல்வக்குமார்

(உயர்தர மாணவி)



'' எங்களுடைய கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் எல்லாம் இதுவரை காலமும் பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலே நடைபெற்று வந்தன.

இப்போது எங்களுடைய பள்ளிக்கூடத்தில் படிக்கப் போகிறோம் என்று தகவல் கிடைத்தவுடன் பெரும் மகிழ்ச்சி அடைந்தோம். எங்களுக்கு போக்குவரத்து வசதிகள் மற்றும் பாடசாலையில் கற்றல் சார்ந்த [illegible]ம்.

## மகாலிங்கம் ஜெசிந்தன்

(தரம் 8 மாணவன்)



எங்கட சொந்த இடம் பலாலி என்று அம்மா, அப்பா சொல்லித்தான் தெரியும். எங்கட பள்ளிக்கூடத்துக்கு நாங்கள் இன்றைக்குப் போறம் என்று அதிபர் நேற்றுச் சொன்னார். அதைக் கேட்டவுடனேயே சந்தோசமாக இருந்தது. இதுவரையும் எங்கட பள்ளிக்கூடத்தை எனக்குத் தெரியாது. புதுப் பள்ளிக்கூடத்துக்குப் போகிறோம் என்ற உணர்வு தான் ஏற்பட்டது.


பள்ளிக்கூடத்தினை சுற்றி சனத்தையும் மீள்குடியேற்றம் செய்தால் சந்தோசமாக இருக்கும். இல்லையென்றால் ஒரு காட்டுக்குள் போய் படிச்சிட்டு வாறம் என்ற அச்சம் மனதில் இருக்கும். எங்கட பள்ளிக்கூடத்துக்குவிட்டது போல எங்கட ஊரான பலாலிக்கு செல்ல விட்டார்கள் என்றால் எவ்வளவு நல்லது.

## கருணாகரன் துஷியந்தன்

(பழைய மாணவன்)



நான் எட்டு வயதில் இந்த பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறினேன். 22 வருடங்களின் பின்னர் மீண்டும் இண்டைக்குத்தான் வந்துள்ளேன். யாழ்ப்பாணத்தில் 25 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள பாடசாலை என்ற பெருமை எங்கள் பாடசாலைக்கு மட்டுமே உரியது. மீண்டும் எங்கள் சொந்த இடத்தில் பள்ளிக்கூடம் இயங்கப்போகிறது என்று சந்தோசப்பட்டாலும் கட்டடங்களைப் பார்க்கின்றபோது பெருங்கவலையாக இருக்கிறது. இதனை விரைவில் புனரமைத்து எங்கட ஊரிலையும் சனத்தை மீள்குடியமர்த்தி 85 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த வியாவிளானைப் போல் மாற்றித் தரவேண்டும்.



மீளவும் தனது சொந்த இடத்தில் முளை கொண்டுள்ள வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இன்னும் ஓரிரு வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சிதைந்து குற்றுயிராகக் கிடக்கும் அந்த வித்தியாலயத்தின் கட்டடங்களுக்கு புத்துயிர் கொடுக்க வேண்டிய பொறுப்பு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே புதுப் பொலிவுடன் வயாவிளான் மகா வித்தியாலயம் மீளும் காலம் வெகு தூரத்தில் இல்லை. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயாவிளான் பாடசாலை திறப்பு வலி.வடக்கு மக்களின் மீள்குடியேற்றத்தின் 'வசந்த வாசலாக' அமையட்டும்

## நேற்றைய நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், செப். 29

ஏ-9 பாதை திறப்பு வடக்கின் சொர்க்க வாசலாக அமைந்தது போல வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் திறப்பு வலி. வடக்கு மக்களின் மீள்குடியேற்றத்தின் 'வசந்த வாசலாக' அமையட்டும்.

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் திறப்பு விழா நேற்று நடைபெற்றபோது அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பாடசாலையைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதியுடன் இங்கு எதுவுமே நடக்காது என்ற நிலையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்படுத்தியுள்ளார்.

உயர்பாதுகாப்பு வலயங்கள் படிப்படியாகத் தளர்த்தப்பட்டு மக்களைச் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துவது என்பதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியாக உள்ளார்.

மீண்டும் 20 வருடங்களின் பின்னர் வயாவிளான் மத்திய மகா வித்தியாலத்தின் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்து வைக்கின்றோம். இந்நிகழ்வு வலி.வடக்கு மீள்குடியேற்றத்தின் வசந்த விழாவாக அமையட்டும் - என்றார்.


இந்நிகழ்வில் முன்னராக விருந்தினர்கள் பாடசாலை மாணவர்களின் 'பாண்ட்' வாத்திய அணி வகுப்புடன் விழா மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

அங்கு தேசியக் கொடியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பாடசாலைக் கொடியை பாடசாலை அதிபர் த.கனகராஜாவும் ஏற்றினர்.

அமைச்சர் டக்ளஸ் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க ஆகியோர் பாடசாலைப் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள், கணனிகள், நூலகப் பயன்பாட்டுக்குரிய புத்தகங்கள் என்பனவும் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மற்றும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தி.செல்வரத்தினம், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உட்பட மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், வயாவிளான் பகுதி யைச் சேர்ந்த மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஒ-9)



யாழ்.மாவட்டத்தின் பெரும்போக நெற்செய்கைக்கான ஏர்பூட்டும் விழா அரியாலை கிழக்கில் நேற்று நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் ஏர்பூட்டி சம்பிரதாயபூர்வமாக உழுவதையும் - யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, ஆளுநர், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், யாழ்.மாவட்ட அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: கவிநேசன்)*

# வயாவிளான் ம.ம.வியின் ஒரு கட்டடம் படையினரின் நிதியில் புனரமைக்கப்படும்

## தளபதி ஹத்துருசிங்க நேற்றைய நிகழ்வில் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 29

இராணுவ வீரர்களின் நிதி உதவியுடன் வயாவிளன் மத்திய மகா வித்தியாலயத்தின் ஒரு கட்டடத்தை நவீன வசதிகளுடன் புனரமைத்துத் தர ஏற்பாடுகளைச் செய்து தருவேன் என்று யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் சுமார் 20 வருடங்களாக முடங்கியிருந்த வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தின் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

30 வருடங்களாக இடம்பெற்ற யுத்தம் உங்களையும் எங்களையும் பிரித்து வைத்திருந்தது. தற்போது நாம் அனைவரும் இன, மத வேறுபாடுகளின்றி இணைந்துள்ளோம்.

பாரம்பரியம் மிக்க கல்விச்சாலையை உங்களிடம் கையளிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் பாடசாலையின் சுற்றுப்புறங்களில் கண்ணிவெடிகள், மிதிவெடிகள் என்பன உள்ளனவா என்பதை மீண்டும் ஒரு தடவை பரிசோதித்து விட்டு இன்னும் ஓர் இரு தினங்களில் உங்களை கற்றல் செயற்பாடுகளுக்காக இங்கு அழைத்து வருவேன்.

இலவசக் கல்வியின் தந்தை என்று வர்ணிக்கப்பட்ட டபிள்யூ டபிள்யூ என்.கன்னங்கராவின் சிந்தனையில் உருவான இந்தப் பாடசாலை நீண்டதொரு வரலாற்றுப் பாதையில் வெற்றிநடை போட்டு வருகிறது. அத்துடன் பல கல்விமான்களையும் உருவாக்கிவருகிறது.

இந்தப் பாடசாலையில் உள்ள கட்டடம் ஒன்றை இராணுவ வீரர்களின் நிதி உதவியுடன் முழுமையாகப் புனரமைத்துத் தருகிறேன் - என்றார். (ஒ-9)

### கொழும்பு மாநகர சபையை

# அதிகார சபையாக மாற்றுவது சீன ஆக்கிரமிப்புக்கு வழிவகுக்கும்

## ஐ.தே. கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.29

கொழும்பு மாநகரசபைத் தேர்தலை நடத்தாது அதை அதிகார சபையாக மாற்றுவதன் மூலம் கொழும்பை சீனா ஆக்கிரமிப்பு செய்வதற்கு மஹிந்த ராஜபக்ஷவின் அரசு வழியேற்படுத்திக் கொடுத்துள்ளது. - இப்படி ஐ.தே.க. எம்.பியும் அக்கட்சியின் பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுக் கூறினார்.

அதேபோல் நாட்டின் பல முக்கிய பிரதேசங்களை சீனாவிடம் ஒப்படைக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்றும் அவர் கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அடுத்த வருடம் ஜனவரி மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த அரசு தீர்மானித்துள்ளது. ஆனால், கொழும்பு மாநகரசபைத் தேர்தலை நடத்தாது அதை அதிகார சபையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதை அதிகாரசபையாக மாற்றுவதன் மூலம் சீன அரசு கொழும்பை ஆக்கிரமிக்க ஏற்பாடு செய்யப்படுகின்றது. அதேபோல், நாட்டில் உள்ள பல முக்கிய பிரதேசங்களும் சீனாவிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

மக்கள் செல்வாக்கையும் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவையும் கொண்ட அரசு ஏன் கொழும்பு மாநகரசபைத் தேர்தலை நடத்துவதற்குத் தயங்கவேண்டும்.

கொழும்பு மாநகரசபைத் தேர்தலை நடத்தக்கோரி அடுத்த மாதம் 6ஆம் திகதி கொழும்பு மக்களிடம் கையெழுத்துகளைத் திரட்டி தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைக்க உள்ளோம்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததில் இருந்து இப்போது வரை மக்கள் பெரும் துன்பத்தை எதிர்நோக்குகின்றனர். இந்த மக்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்க நாம் நடவடிக்கை எடுப்போம் - என்றார். (ஒ-சி)

# 'கொலோஸியம்' அரங்கில் ரஜினிகாந்தின் 'எந்திரன்'

ஐரோப்பாவிலேயே மிகப் பெரிய கொலோஸியம் கினோ (Colosseum) திரையரங்கில் சுப்பர் ஸ்டார் ரஜினியின் எந்திரன் சிறப்புக் காட்சி திரையிடப்படுகிறது.

கடந்த 10 ஆண்டுகளில் இங்கு வெளியாகும் முதல் இந்தியப் படம் ரஜினியின் எந்திரன் மட்டுமே. இந்தக் காட்சிக்கான ரிக்கெட்டுகள் வேகமாக விற்பனையாகி வருகின்றன.

நோர்வேயில் உள்ள தமிழரான வசீகரன் சிவலிங்கத்தின் வி.என் மியூசிக் ட்ரீம்ஸ் நிறுவனமும், அபிராமி கேஷ் அன்ட்கேரி நிறுவனமும் இணைந்து இந்த சிறப்புக் காட்சிக்கு ஏற்பாடு செய்துள்ளன.

எந்திரன் படத்துக்கான வரவேற்பு எப்படி உள்ளது என்று கேட்டபோது, ''பிரமிக்கத்தக்க வகையில் உள்ளது. நோர்வேயில் மொத்தம் 14,000 தமிழர்கள் வாழ்கிறார்கள். இவர்களில் அதிகபட்சம் 20 சதவீதத்தினர்தான் திரையரங்குகளுக்குப் போய் படம் பார்ப்பார்கள்.

''மிகக் குறுகிய நேரத்தில் 75 சதவீதம் ரிக்கெட்டுகளை விற்றுவிட்டோம். சில நோர்வே மக்கள் கூட எந்திரனுக்கு ரிக்கெட் வாங்கியுள்ளார்கள் என்றால் பெருமையாக உள்ளது. நோர்வேயைப் பொறுத்தவரை இது முன்னெப்போதும் நிகழாத சாதனை'' என்றனர்.

எந்திரன் படம் குறித்து வசீகரன் கூறுகையில், நிச்சயம் இந்தப் படத்தால் தமிழ் சினிமாவுக்குப் பெருமை. சூப்பர் ஸ்டார் ரஜினியின் மேஜிக் குறிப்பட்ட எல்லைக்குட்பட்டதல்ல. உலகம் முழுவதையும் வசீகரப்படுத்தும் சக்தி கொண்டது. இந்தப் படம் மிகச் சிறந்த படைப்பாக வந்திருக்கிறது. நிச்சயம் உலக சினிமாவில் எந்திரன் புதிய சாதனை படைக்கும் என்பதில் சந்தேகமே இல்லை என்றார்.

# மன்னார் கடற்கரையில் ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, செப். 29

மன்னார்மாவட்டத்தின்பேசாலை நடுக்குடா கடற்கரையில் இருந்து ஆணின் சடலம் ஒன்று உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இச்சடலம் நேற்றுமுன்தினம் பேசாலை பொலிஸ் நிலைய பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சடலத்தின் தலை மற்றும் கால்கள் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளன. பொலிஸார் சடலத்தை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். சடலம் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. (ஓ-சி)

## பொன்சேகா மீதான... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டுக் கொல்லுமாறு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு பாதுகாப்புச் செயலாளர் உத்தரவிட்டார் என நாடாளுமன்ற உறுப்பினர் சரத்பொன்சேகா தெரிவித்ததுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் மூலம் சரத் பொன்சேகா, பொய்யான தகவலைப் பரப்பியுள்ளார் என்றும், இனக் குரோதத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும் சட்டமா அதிபரால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்காக சரத் பொன்சேகா ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது கருத்துரைத்த பிரதிவாதியின் சட்டத்தரணி தமது கட்சிக்காரர் (சரத் பொன்சேகா) சுகவீனமடைந்துள்ளமையால், விசாரணையைத் தாமதப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார். எனினும் மனுதாரர் சட்டத்தரணி இதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்த நிலையில் அடுத்த விசாரணையை மூவரைக் கொண்ட நீதிபதிகள் குழு எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது. (ஒ-சி)

## விடுதலைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 1992 ஆம் ஆண்டு முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்திய அரசு தடை நீடிப்புச் செய்து வருகிறது.

அதன்படி, கடந்த மே 14 ஆம் திகதி இது தொடர்பான அரசாணை வெளியிடப்பட்டது. அந்த ஆணை, நடுவர் மன்றத்தில் உறுதி செய்யப்பட வேண்டும் என்பது நடைமுறை.

அதற்காக, கடந்த 21 ஆம் திகதி நடந்த விசாரணையில் வைகோ ஆஜரானார். அதற்கு தமிழக அரச சட்டத்தரணி தனஞ்ஜயன் ஆட்சேபம் தெரிவித்தார். அதையடுத்து முறைப்படி சட்டத்தரணி மூலம் ஆஜராகுமாறு நீதிபதி விக்ரம்ஜித் சென் வைகோவுக்கு உத்தரவிட்டார்.

அதையடுத்து, கடந்த 24 ஆம் திகதி விசாரணை நடந்தபோது, வைகோ முறைப்படி மனுத்தாக்கல் செய்தார். ஆனால், தனியான சட்டத்தரணியை வைக்காமல் அவரே வாதாடினார்.

ஆனால், விடுதலைப் புலிகளின் இயக்கத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தத் தடையை எதிர்க்கிறீர்களா என்று கேட்டு அந்த இயக்கத்துக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்ட நிலையில், அந்த இயக்கத்தின் தலைவரோ, செயலாளரோ நிர்வாகியோ இல்லாத வைகோ, இங்கு வாதாட முடியாது என்று தமிழக அரச சட்டத்தரணி தனஞ்ஜயன், மத்திய அரசின் கூடுதல் சொலிஸிட்டர் ஜெனரல் சந்திஹோக் ஆகியோர் வாதிட்டார்கள்.

அதையடுத்து, புலிகள் சார்பாக வைகோ ஆஜராக முடியுமா என்பது குறித்த தீர்ப்பை ஒத்திவைப்பதாகத் தெரிவித்த நீதிபதி விக்ரம்ஜித் சென், நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அந்த உத்தரை வழங்கினார்.

அதன்படி, சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ், விடுதலைப் புலிகள் சார்பில் ஆஜராக வைகோவுக்கு உரிமையில்லை எனறு தீர்ப்பளித்துள்ளார்.

அதே நேரத்தில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீடிப்பது தொடர்பான அரசாணை குறித்த அடுத்த விசாரணை சென்னையில் ஒக்டோபர் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் கு.நிஷாந்தன் அவர்களின் அன்புத் தந்தை

### சரவணமுத்து குமாரசாமி

இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிளி/இரணைதீவு றோ.க.த.க.வித்தியாலய அதிபர், ஆசிரியர், ஒன்றியம் மாணவர்கள்.

(103930)


## மீண்டும் யாழ் நகரில்



இலங்கை முழுவதும் பல நூற்றுக் கணக்கான Phone திருத்துணர்களை உருவாக்கிய பிரபல ஆசிரியர் **M.R.M. Rizvi** அவர்களின்

**Diploma in Mobile Phone Repairing**



**Hardware**

- அறிமுகம் (Spares / ICs / Tools / Faults / Web sites)
- தவறுகளை கண்டுபிடிக்க Trouble Shooting ஒழுங்கு முறைகள்
- Ic/Ribbon/Spares மாற்றுதல் / ஒட்டுதல் போன்ற பயிற்சி (All brand)
- Phone கலற்றும் முறை (சகலவிதமான), Ribbon/Slide / Touch....Etc.
- Hotgun / Multumeter / Power supply / U S cleaner. உபயோகம்
- விசேட Hardware குறிப்புகள்
- Forum மூலம் தீர்வுகாணல் (Jumper System)

**Free!** Study Packs (Faults Solutions) Schematics Diagram Cd's Applications Software codes Special Web Site

**Rs.8750/=**

**Software** Setup Installation, Unlocking, Flashing

Jaf, P-Key, SE tool, NSpro, Infinity, Pin Finder, Spiderman, MX-Key.

வகுப்பு நடைபெறும் இடம்
SDC
No: 102-2/2, Navalar Road,
(Luxman Plaza Building)
Jaffna.
CALL : 071-4241873

**4 DAYS COURSE**

| MON | TUE | WED | THU |
|---|---|---|---|
| 4 | 5 | 6 | 7 |
| THU | FRI | SAT | SUN |

10.00 AM - 3.00 PM

**SDC** No: 1, Perera Lane, Wellawatha, Colombo-6. TEL : 011-7539075


## தமிழில் வீடியோ மூலம் சாதாரணதர, உயர்தர, கணனி மற்றும் ஆங்கில பாடங்களை முழுநேரமாகவோ, பகுதிநேரமாகவோ கற்பிக்கக் கூடிய திறமையுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தேவை.

புதிதாக வெளிவர இருக்கும் இணையத்தளம் ஒன்றிற்கு தமிழில் வீடியோ மூலம் சாதாரணதர, உயர்தர பாடங்கள், கணனி, தொழில்நுட்பம், ஆங்கிலம் என்பவற்றை கற்பிக்கக் கூடியவர்கள் முழுநேரமாகவோ அல்லது பகுதிநேரமாகவோ தேவை. ஏற்கனவே அரச, தனியார் நிறுவனங்களில் கல்வி கற்பித்த அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. திறமையுள்ள பல்கலைக்கழக மாணவர்களும் எம்முடன் இணைந்து பணிபுரியலாம். மேலும் கணனி, தொழில்நுட்பம் தொடர்பாக தொடர்ந்து ஆக்கங்களை எழுதக்கூடியவர்களையும் எதிர்பார்க்கின்றோம்.

**தங்களின் சுயவிவரக் கோவையினை edonetwork@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

(103935)


**PAN ASIA BANK** *At Your Service*

## பான் ஏஷியா வங்கி

570, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
(வேம்படிச் சந்திக்கு அருகாமை)

### தங்க நகை அடகுச்சேவை

- வரிசையில் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை
- அதிகூடிய கடன் தொகை **34500/=**
- எந்நேரத்திலும் மீளப் பெறும் வசதி
- பகுதிக் கொடுப்பனவு வசதிகள்
- சனிக்கிழமைகளில் அடகுச் சேவை
- தொகைக்கேற்பக் குறைந்த வட்டி வீதம்

அதி உயர் வட்டி வீதம்

- நிலையான வைப்பிற்கு
- சிறுவர் சேமிப்புக் கணக்கிற்கு வட்டி **9%**
- **3000/=** க்கு மேல் வைப்பில் இடுபவர்களுக்கு பெறுமதிக்க பரிசில்களும் உண்டு

பாதுகாப்புப் பெட்டக வசதிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவு உள்ளதால்,பதிவுகளுக்கு முந்துங்கள்.

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

PAN ASIA BANK *At Your Service*


## அழகியல் பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்தல் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

* இன்று புதன் ஒரு மணி
* இன்றிலிருந்து ஒவ்வொருநாளும் ஒரு மணி தொடக்கம் 5 மணிவரை நடைபெறும்.

24 மணித்தியாலம் கட்டணம் 800 ரூபா

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.போதனா வைத்தியசாலை எதிரே)

## அறைகள் வாடகைக்கு

(ஆண் மாணவர்களுக்கு)

பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கையில் உணவு வசதியுடன் கூடிய தங்கும் அறைகள் ஆண் மாணவர்களுக்கும், அலுவலர்களுக்கும் வழங்கப்படும்.

தொடர்பு : மாலை 3 மணிக்குப் பின்
0779578244, 0213734306

## வாடகைக்கு

கஸ்தூரியார் வீதியிலும் நாவலர் வீதியிலும் வீடும் கடையும் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு கொள்ள : 021 222 3479
0215670313

## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு விளையாட்டரங்க வீதியில் G.P.S.வாசிகசாலைக்கும் விளையாட்டரங்கிற்கும் இடையில் 3½ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு : 0711276747, 0212228203

## வீடும் காணியும் விற்பனைக்கு

கல்வியங்காடு, விளையாட்டு அரங்கு வீதிக்கு அருகில் வீடு வளவு 2¼ பரப்பும், அதனுடன் சேர்ந்த காணி 2¾ பரப்பும் சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ விற்பனைக்குண்டு

தொடர்பு : 0771984902

## காணி விற்பனை

சரசாலை தெற்கு, கமலாசினி பாடசாலைக்கு அருகில் 10 பரப்பு, 9 பரப்பு, 7 பரப்பு, 4½ பரப்பு நான்கு காணிகள் விற்பனைக்கு உள்ளன.

தரகர் தேவையில்லை.

தொடர்பு : திருமதி R. சிவஞானம்,
தொ.பே.இல. : 0773544319

## மரண அறிவித்தல்



### விநாசித்தம்பி இராமநாதன் (V.R.M)

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ். மணிக்கூட்டு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் தற்பொழுது கொழும்பு வெள்ளவத்தையில் வசித்தவருமாகிய விநாசித்தம்பி இராமநாதன் நேற்று (28.09.2010) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், தம்பையா - பொன்னம்மா தம்பதியரின் ஆசை மருமகனும் காலஞ்சென்ற புஸ்பமணியின் பாசமிகு கணவரும் சசிகலா, சசிமலர், கிருபானந்தன், வளர்மதி, சசிவதனி, சசிமாலா, சுரேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுந்தரலிங்கம் (CUSTOMS), குருபரநாதன் மாலினி சிவசேகரம், பிரபாகரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற அன்னப்பிள்ளை மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி, மீனாட்சி, சண்முகநாதன், பரராசசிங்கம், சிவசோதி மற்றும் கனகலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவபாக்கியம், நேசமலர், பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 30, ரோகினி வீதி, வெள்ளவத்தை இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**தகவல் : குடும்பத்தினர்.**
30, Rohini Road,
COLOMBO-06.
[illegible]
[illegible]


## சாருகா உடற்பயிற்சி நிலையம்

அனைத்து உறுப்புகளின் சிறந்த தொழிற்பாட்டுக்கும், குருதிச் சுற்றோட்டத்தை அதிகரிப்பதற்கும் மலச்சிக்கல் மற்றும் தூக்க ஒழுங்கின்மை உட்பட பல மன உடல் சிக்கல்களுக்கும் குறுகிய நேரத்தில் சிறந்த நிவாரணத்தைப் பெறக்கூடிய குருதிச் சுற்றோட்ட உடற்பயிற்சி (மஸாஜ்) மூலம் சிறந்த சிகிச்சையைப் பெற நாடவேண்டிய இடம்

### சாருகா உடற்பயிற்சி நிலையம்

கலைமகள் வீதி, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.
தொ.பே.இல. 078913560


## முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

**விரிவுரைகள் ஆரம்பம்**

மேற்படி பீடத்தின் புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கும் விரிவுரையும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். ஏனைய மாணவர்களுக்கான விரிவுரைகள் பின்வரும் ஒழுங்கில் ஆரம்பமாகும்

* இரண்டாம் வருட முதலாம் அரையாண்டு - 18.10.2010
* இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு - 11.10.2010
* மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டு - 11.10.2010
* நான்காம் வருட இரண்டாம் அரையாண்டு - 11.10.2010

பதிவாளர்.

(சி/571427)

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு சின்னத்தம்பி பொன்னுத்துரை

(இளைப்பாறிய உள்ளூராட்சி உத்தியோகத்தர் - கொழும்பு)



தெல்லிப்பழை கிழக்கைப் பிறப்பிடமாகவும் 35, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு சின்னத்தம்பி பொன்னுத்துரை நேற்று (28.09.2010) செவ்வாய்க்கிழமை காலமானர்.

அன்னாரின் பூதவுடல் அவரது விருப்பத்துக்கு அமைய யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்குக் கையளிக்கப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
மைத்துனி : அ.நாகாம்பிகை (லண்டன்)
ஜோர்ச் சைமன் (பேரமகன்)

35, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(103936)

### நாதஸ்வர மேதை M.S.சண்முகநாதன்

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட நாதஸ்வர மேதை M.S.சண்முகநாதன் நேற்றுமுன்தினம் (27.09.2010) திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் சதாசிவம் - இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பவதியின் அன்புக் கணவரும் ரமணன், இராகவன் (AUSTRALIA), கல்யாணி, சபேசன் (HOLAND), லதாங்கி (INDIA), உதயணன் (LONDON) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
அன்பு மகன் S.ரமணன்,
பேரப்பிள்ளைகள் -
ஆரபி, சாஹித்யா.

(சி/571437)

### தர்மலிங்கம் சந்திரசேகரர்

செட்டியார்மடம், அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சந்திரசேகரர் நேற்று (28.09.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் இளைய மகனும் தவமணி தேவியின் அன்புக் கணவரும், கிருஸ்ணவேணி (ப.நோ.கூ. சங்கம், சங்கானை), கரன் (கனடா), றஜினி, கீரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கோபால கிருஸ்ணனின் (ப.நோ.கூ. சங்கம்,சங்கானை) மாமனாரும், நடராசா, மகேந்திரன் காலஞ்சென்ற தியாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதி தம்பதியினரின் மருமகனும் ஜெயறஞ்சிதம் (பிரான்ஸ்), ராஜேந்திரன் (சவுதி அரேபியா), வசந்தகுமாரி ஆகியோரின் மைத்துனரும், மாதங்கி, பிரியங்கி, விஷ்ணுபிரியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2010) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரின் இல் லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வடக்கு,
செட்டியார் மடம்,
வட்டுக்கோட்டை.

(சி/571440)

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நன்றே செய்மின், இன்றே செய்மின்!

அடுத்த மாதத்தில் முன்னாள் போராளிகள் இரண்டாயிரம் பேர் விடுவிக்கப்பட உள்ளனர் என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் சீர்திருத்தத்துக்கான பிரதி அமைச்சர் விஜேமுனி சொய்சா தெரிவித்திருக்கிறார்.

விடுவிக்கப்பட உள்ள முன்னாள் போராளிகளில் 418 பேருக்கு வவுனியாவில் பம்பைமடுவில் உள்ள புனர்வாழ்வு நிலையத்தில் வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்படும். அதன் பின்னர் அவர்கள் தங்கள் குடும்பங்களுடன் இணைக்கப்படுவர் என்றும் அவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

அவர் கூறியதன் பிரகாரம் இரண்டு காரியங்களும் நடைபெறவேண்டும். அவை செயலுருப்பெற்றால் அதிக மகிழ்ச்சி கொள்பவர்கள் விடுவிக்கப்படுபவர்களின் உறவுகளாகவே இருப்பர். குடும்ப உறுப்பினர்களாகவே இருப்பர். சம்பந்தப்பட்ட முன்னாள் போராளிகள் அனுபவித்த துன்ப, துயரங்கள், மனத்தாக்கங்களைப் போன்று, ஏன் அதனையும் விட அதிக தாக்கத்துக்கு ஆளானவர்கள் குடும்ப உறவுகளே, இரத்த உறவுகளே.

தடுத்துவைக்கப்பட்டவர்களின் உறவுகள் ஒவ்வொரு கணமும், முகாம்களில் உள்ள தம்மைச் சேர்ந்தவர்கள் உண்டார்களோ, உறங்கினார்களோ, என்னென்ன சித்திரவதைக்கு ஆளானார்களோ, தடுப்பு முகாம் அதிகாரிகள் கம்புகளால் அடித்தார்களோ, இரும்புச் சங்கிலியால் அடித்தார்களோ, காயம் ஏற்பட்டால் சிகிச்சை அளித்திருப்பார்களோ என்று தூர இருந்து நினைந்து நினைந்து மனம் நொந்து வாடியிருப்பார்கள். நிச்சயமாக அந்த உறவுகள் ஒவ்வொருவரும் உளவியல் ரீதியாகச் சிதைக்கப்பட்டிருப்பார்கள். அதனாலேயே சொல்கிறோம், முன்னாள் போராளிகள் அறிவிக்கப்பட்டிருப்பது போன்று தமது சொந்தங்களுடன் சேர்ந்து வாழ அனுமதிக்கப்பட்டால் முதலில் பெரும் நிம்மதி அடைபவர்கள் புனர்வாழ்வு முகாமில் அல்லது சிறையில் உத்தரித்தவர்களைவிட அவர்களது இரத்தத்தின் இரத்தங்கள் மற்றும் உறவுகளே.

புனர்வாழ்வு முகாம்கள் அங்கு அடைத்து வைக்கப்படும் எவருக்கும் சொந்த வீடுகள் போன்றோ, ஏன் தங்கு விடுதிகள் போன்றோ இருக்கமாட்டா. அவர்களது மனித சுதந்திரம் மட்டுமன்றி வாழ்வியல் சுதந்திரமும் வேரோடு சாய்க்கப்படுவது உண்டு. சிறைச்சாலைகளை விட ஒரு சில பாகைகள் மட்டுமே மெலிந்த கூம்புகளாக புனர்வாழ்வு முகாம்கள் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அங்கு தங்க வைக்கப்படுவோர் மனதால் மட்டுமன்றி உடலாலும் சோர்வுற்ற சீவன்களாக மாறிவிடுவது உண்டு.

மொத்தத்தில் பிரதி அமைச்சரின் அறிவிப்பு புனர்வாழ்வு முகாம்களில் தங்கியிருப்போரையும் அவர்களின் சொந்தங்களையும் மனத்திருப்திக்கு உள்ளாக்கும்.

அடித்தவரின் கைகள் அணைப்பதும் உண்டு. அந்த வகையில் புனர்வாழ்வு முகாம்களில் உள்ளவர்களை விடுவிப்பது போன்று -

சந்தேகத்தின் பேரில், குற்றப் பத்திரம் தானும் தாக்கல் செய்யப்படாமல் சிறைகளில் வருடக் கணக்காக தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள் குறித்தும் அரசாங்கமும் அமைச்சர்களும் அக்கறை காட்ட வேண்டும். இதுவும் பாரதூரமான மனிதாபிமான விவகாரம். எந்த மனிதனுக்கும் எந்த உயிருக்கும் மரணம் ஒரு நாளில்தான் வரும். ஆனால் அது இப்போது வந்துவிடுமோ, எப்போது வருமோ என்று ஏங்கித் தவித்து மனம் நிமிடத்துக்கு நிமிடம் வெதும்புவது, மனதை வெதும்பச் செய்வது மறைமுகமான சித்திரவதையே.

இந்த வகைச் சித்திரவதையை தடுப்பு முகாம்களிலும், சிறைச்சாலைகளிலும் வழக்குத் தாக்கல் செய்யப்படாமலும் விசாரணை எதுவும் இன்றியும் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் மீதும் பிரயோகிப்பது மிகப் பெரும் மனிதாபிமானமற்ற செயல்; மனித உரிமை மீறல். இது அரசாங்கத்துக்கும் அதன் அதிகாரிகளுக்கும் தெரியாத, புரியாத புதிய விடயமல்ல.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாக பிறநாடுகளும் அவற்றைக் காப்பதில் அக்கறை உள்ள சர்வதேச அமைப்புகளும் சுட்டிக்காட்டினால் கண்டித்தால் துள்ளிக் குதிக்கும் அரசாங்கமும் அமைச்சர்களும் தங்கள் மனதைத் தொட்டுப் பார்க்க வேண்டும். அரசியல் செய்வதற்காக, அதிகாரபீடத்தைத் தக்கவைப்பதற்காக அல்லது அரசுக்கு மாசு ஏற்படாது தடுப்பதற்காக தமக்குச் சொந்தத்தில் உள்ள மனிதாபிமானத்தை இழந்துவிடுகிறார்கள். இவர்களை - எமது நாட்டு அரசியவாதிகளைப் பீடித்துள்ள இந்த வினை நீங்கவேண்டும். தமிழ்மக்களின் வாக்குகளில் இவர்களின் அரசியல் வாழ்வு தங்கியிருக்கவில்லை என்பதால் மனிதாபிமானம், மனித உரிமை, மனிநேயத்தை மறப்பதும் மழுங்கடிக்கச் செய்வதும் தப்பிதமானது என்று இவர்கள் உணர்வார்களா? அது இனி எப்போது...? நன்றே செய்மின் அதனை இன்றே செய்மின்!

# சமஷ்டித் தீர்வு இனித் தேவையில்லை இப்போது நிராகரிக்கிறது ஐ.தே.கட்சி

கொழும்பு, செப்.29

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு தேவையில்லை என நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளுடன் ஒஸ்லோவில் நடத்திய பேச்சுக்களில் சமஷ்டித் தீர்வுக்கு உடன்பட்டிருந்த ஐ.தே.க., ஆயுதக் குழுக்கள்- குறிப்பாக விடுதலைப் புலிகள் அமைப்பு தற்போது இல்லாத காரணத்தினால் மத்தியில் குவிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பிராந்தியங்களுக்குப் பகிர வேண்டிய அவசியமே இல்லை எனத் தெரிவித்துள்ளது.

ஐ.தே.க.வின் அரசாங்கத்தினாலும் விடுதலைப்புலிகளாலும் உடன்பாடு காணப்பட்ட ஒஸ்லோ தீர்மானத்தில், ''ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையில் நிறுவப்படும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையின் ஊடாக அரசியல் தீர்வுபற்றி ஆராய்வதற்குத் தரப்புக்கள் இணங்கியுள்ளன'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்குப் பதிலாக இன்று வடக்குக் கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே இன்றைய அவசரத் தேவையாகும் என ஐ.தே.க வின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

எனினும், மாகாணசபைகள் உருவாக்கப்படுவதற்குக் காரணமாக அமைந்த அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை நீக்குவதற்கான நகர்வுகளுக்கு ஐ.தே.க. ஆதரவளிக்காது எனவும் அவர் தெரிவித்தார். (உ)

# கல்வியும் வியாபாரமாகும் ஆபத்து

## மூத்த விரிவுரையாளர் எச்சரிக்கை

வலி.வடக்கு,செப்.29

''கல்வி என்ற பெயரில் வெளிநாட்டு நிறுவனங்கள் பலவும் குடாநாட்டுக்குப் படையெடுக்க ஆரம்பித்துள்ளன. எதிர்காலத்தில் கல்வி வியாபாரமாக மாறி விடும் ஆபத்து ஏற்பட்டுள்ளது'' என எச்சரித்தார் யாழ்.பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் கே.சிவராசா. தனியார் பல்கலைக் கழகங்களை இயக்க அரசு அனுமதி வழங்கி உள்ளதைத் தொடர்ந்து இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

ஆனைக்கோட்டை குணபால வித்தியாலயத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டிய பொன் விழா அதிபர் என்.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கே.சிவராசா தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

இந்தப் பாடசாலையின் அதிபர், கடந்த காலங்களின் மிகவும் பின்தங்கிய பாடசாலைகளில் அதிபராக இருந்து பாடசாலைகளை முன்னேற்றியுள்ளார். அயலில் வேறு பாடசாலைகள் இருக்கக் கூடியதாக வீடு வீடாகச் சென்று பெற்றோர்களைச் சந்தித்து பிள்ளைகளைத் தனது பாடசாலையில் இணைத்துக் கொள்கின்றார்.

தேவதூதர்கள் காலத்திற்கு காலம் மீட்புகளுக்காக இம்மண்ணில் தோன்றுகிறார்கள் எனக் கூறுகின்றார்கள். இந்த வகையில் அதிபரும் இப்பாடசாலையின் ஒரு மீட்பவராகவே செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றார்.

கல்வியென்ற போர்வையில் வெளிநாட்டு நிறுவனங்கள் பலவும் இன்று இம் மண்ணில் படையெடுக்கத் தொடங்கி உள்ளன.

கல்வியென்ற போர்வையில் கட்டுப்பாடுகள் தராதரங்கள் இன்றி சான்றிதழ்கள் மட்டும் வழங்கி எமது பணத்தை அள்ளிச் செல்லவுள்ளார்கள்.

இதனையிட்டு கல்வியியலாளர்களும் சமூகவியலாளர்களும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். கல்வி பணத்திற்காக விற்கப்படும் நிலைமை சமூகத்தில் பாரிய தாக்கத்தை எதிர்காலத்தில் உண்டாக்க வாய்ப்பு உண்டு எனவும் தெரிவித்தார். (உ-86)

## ஊனமுற்றோருக்கு சக்கர நாற்காலிகள்

'யு.எஸ்.எய்ட்' நிறுவனத்தின் நிதியில் மோரிவேசன் லங்கா என்னும் நிறுவனத்தினால் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் வைத்து ஊனமுற்ற 6 பேருக்கு நேற்று செவ்வாய்க்கிழமை சக்கர காலிகள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம்,உடுவில்,கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த ஊனமுற்றோரே இவற்றைப் பெற்றுக் கொண்டனர்.

சக்கர நாற்காலிகள் தேவைப்படுவோரும் அவற்றினை திருத்தம் செய்ய விரும்புவோரும் பிரதேச செயலகப் பிரிவுகளுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-121)

## மாவட்டக் கண்காணிப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.29

யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரசசார்பற்ற நிறுவனங்களுக்குமான மாதாந்த மாவட்ட கண்காணிப்புக்குழுக் கூட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (204)

## நாளை

| | | |
|---|---|---|
| புரட்டாதி 14 | | 30.09.2010<br>வியாழக்கிழமை |
| திதி: | : | ஸப்தமி<br>மாலை 05.50 வரை |
| நட்சத்திரம் | : | மிருகசீரிடம்<br>மி.ப 05.37 வரை |
| சுபநேரம் | : | 07.32-09.02 வரை |
| ராகுகாலம் | : | 01.32-03.02 வரை |

# ஒரே மாதம்; ஒரே திகதி ஆண்டுதான் வெவ்வேறு

## பிறந்த நாள் கொண்டாடும் மூன்று சகோதரர்கள்



கொழும்பு,செப்.29

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள் ஒரே திகதியில் தமது பிறந்த நாளை கொண்டாடி மகிழ்ந் திருக்கிறார்கள். கடந்த 5 ஆம் திகதி இவர்கள் தமது பிறந்தநாளை குடும்பத்தாருடன் ஒன்றாகக் கொண்டாடியுள்ளனர்.

ஒரே நாளில் பிறந்தநாளைக் கொண்டாடினார்கள் என்பதற்காக அவர்கள் மூவரும் ஒரே வருடத்தில் ஒரே மாதத்தில் பிறந்தவர்கள் அல்லர்.

இவர்களில் மூத்தவர் 2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி பிறந்தவர் அவர் பெயர் முகம்மது ஒமார் இப்றாகிம், இரண்டாமவர் 2004 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி பிறந்தவர். இவர் பெயர் அப்துல் மாவிக் ரஷீத். மூன்றாமவர் அகமது அப்துல் ரகுமான். இவர் பிறந்த திகதி 2009செப்ரெம்பர் 5 ஆகும். இவர்கள் மூவரும் வர்த்தகரான முகம்மது இஷ்ராத் மற்றும் பாத்திமா ஷகீரா தம்பதியினரின் புத்திரர்கள் ஆவர். இவர்களின் குடும்பம் பேருவளையில் நளீம் ஹாஜியார் மாவத்த என்ற இடத்தில் வசிக்கின்றது.

இம்மாதிரி வெவ்வேறு வருடங்களில் ஒரே திகதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் பிறந்திருக்கும் சம்பவங்கள் மிகக்குறைவு. இங்கிலாந்திலும் நோர்வேயிலும் இம்மாதிரி சகோதரர்கள் பிறந்திருப்பதாக தகவல் இருக்கிறது. (ப)

# இரவு விடுதியில் குழப்பம் விளைவித்த நீதிவான் இடைக்கால பதவி நீக்கம்

## கொள்ளுப்பிட்டியில் வெள்ளி இரவு சம்பவம்

கொழும்பு,செப்.29

கொள்ளுப்பிட்டியிலுள்ள இரவு விடுதியொன்றில் பாதுகாப்பு அதிகாரி ஒருவரையும் பரிசாரகர்கள் இருவரையும் தாக்கிக் குழப்பம் விளைவித்தார் என்று கூறப்படும் நீதிவான் ஒருவர் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் இடைக்கால பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

திஸ்ஸமகாராம நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிவானுமாகிய எச்.அனுரா செனிவிரட்ணா என்பவர் கொள்ளுப்பிட்டியிலுள்ள இரவு விடுதியில் தனது சொந்தப் பாவனையில் உள்ள துப்பாக்கியை வான் நோக்கி சுட்டு அச்சுறுத்தியதன் பின்னர் பாதுகாப்பு அதிகாரியையும் விடுதி பரிசாரகர்கள் இருவரையும் தாக்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நீதிசேவைகள் ஆணைக்குழு அவர் மீது நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றதாகக் கூறப்படும் இச் சம்பவத்தின் போது சந்தேகநபர் தனது துப்பாக்கியைப் பயன்படுத்தி அங்கிருந்தவர்களை அச்சுறுத்தி குழப்பம் விளைவித்த பின்னர் அவ்விடத்தை விட்டு வெளியேறிவிட்டதாகக் கூறப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட நீதிவான் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு நீதிசேவைகள் ஆணைக்குழு ஏற்பாடு செய்துள்ள அதேவேளை கொள்ளுப்பிட்டி பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

''எந்த நபரும் சட்டத்துக்கு மேலானவர்கள் அன்று அவர் குற்றம் புரிந்திருக்கிறார் என்று கண்டால் பொலிஸார் அவர் மீது நடவடிக்கை எடுத்தாகவேண்டும்'' என்று நீதிச்சேவைகள் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'சிகரம் தொடு' சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.29

சிகரம் ஊடக இல்ல மாணவர்க ளின் இளையோர் மாதாந்த சஞ்சிகை யான 'சிகரம் தொடு' சஞ்சிகை வெளி யீடும் 'யாழ்ப்பாணம் இன்று' என்னும் இணைய ஊடக ஆரம்ப நிகழ்வும் எதிர் வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி புதிய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தி னராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவி ருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவும் கௌரவ விருந்தினராக வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும் கலந்து கொள்வர். (த-201-38)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் கு.நிஷாந்தன் அவர்களின் அன்புத் தந்தை

**சரவணமுத்து குமாரசாமி**

இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

கிளி/இரணைதீவு றோ.க.த.க.வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலைச் சமூகம்.



## யாழ்.பல்கலைக்கழகம்

இலங்கை.

உயர் பட்டப்படிப்புகள் பீடம்.

**விசேட மீள் பரீட்சை, முதுகலைமாணி கற்கைநெறிகள்**

யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தால் நடத்தப்படும் பின்வரும் முதுகலைமாணி கற்கை நெறிகளின் முதலாம் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைக்குத் தோற்றி குறித்த பாட அலகுகளில் சித்தியடையாத மாணவர்களுக்கும் கற்கை நெறியை பூர்த்திசெய்து முதலாம் இரண்டாம் அரையாண்டு பரீட்சைக்கு தோற்றத் தவறிய மாணவர்களுக்கும் விசேட மீள் பரீட்சை நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

1. அபிவிருத்தி முதுகலைமாணி கற்கை நெறி (MA in Development Studies)
2. குடித்தொகை அபிவிருத்தி முதுகலைமாணி கற்கைநெறி (MA in Population Development Studies)
3. பிராந்தியத் திட்டமிடல் முதுகலைமாணி (MA in Regional Planning)
4. பொது நிர்வாகத்தில் முதுகலைமாணி (MA in Public Administration)
5. பண்பாட்டியல் முதுகலைமாணி கற்கைநெறி (MA in Public Cultural Studies)

மேற்குறித்த விசேட பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தினை உயர் பட்டப்படிப்புக்கள் பீடம், யாழ்.பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பரீட்சைக் கட்டணம் ஒரு பாடத்திற்கு ரூபா 300/- வீதம் செலுத்தப்படல் வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை 30.10.2010 இற்கு முன்னர் உயர் பட்டப்படிப்புகள் பீடம் யாழ்.பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

கற்கைநெறிக்கான கட்டணங்கள் அனைத்தும் செலுத்தப்பட்டிருந்தால் மாத்திரமே பரீட்சைக்கான அனுமதி அட்டை உயர் பட்டப்படிப்புகள் பீடத்தால் வழங்கப்படும்.

மேற்குறித்த முதுகலைமாணி கற்கைநெறிகளுக்கான மீள் பரீட்சைகள் மீண்டும் நடத்தப்படமாட்டா என்பதனை கவனத்தில்கொள்ளவும்.

27.09.2010 பதிவாளர்



## மரண அறிவித்தல்



**திருமதி இரத்தினேஸ்வரி பாலச்சந்திரன் (தவம்)**

கோயிலாக்கண்டி மத்தி, கைதடியைப் பிறப்பிடமாகவும் 8/1, B.A. தம்பி லேன், வண்ணார்பண்ணையை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி இரத்தினேஸ்வரி பாலச்சந்திரன் (தவம்) கடந்த 25.09.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - பொன்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் ராசமணி (கனடா) தம்பதியரின் மருமகளும் கப்பல் வளவு, சுன்னாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற பாலச்சந்திரனின் அன்பு மனைவியும் யசிந்தா (கனடா), கிரிஷாந்தி (வைத்தீஸ்வராக் கல்லூரி, A/L 2009 விஞ்ஞானப் பிரிவு மாணவி) ஆகியோரின் அன்புத் தாயும் பத்மாவதியின் அன்புச் சகோ தரியும் ஸ்ரீஸ்கந்தராஜா, சுவாமிநாதர் சாரதாதேவி ஆகியோரின் மைத்துனியும் திருமதி கஜா முகுந்தன், மணிமாறன், சிவசுந்தர், பாலநாதன் ஆகியோரின் மாமியும் நிதர்ஷன், நிவேதன் ஆகியோரின் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2010) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8/1, B.A.தம்பி லேன்,
(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் அருகில்)
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்:
யசிந்தா (கனடா) 0019058289307
கிரிஷாந்தி 0775185533
(பிள்ளைகள்)

(103911)


## அதிபரின் விளக்கம்

யாழ்ப்பாணம், செப்.29

'வளங்களற்ற நிலையில் மயிலிட்டி பாடசாலை: கல்வியை விட்டு மாணவர் விலகும் அவலம்' என்ற தலைப்பில் உதயன் பத்திரிகையில் 27 ஆம் திகதி வெளியான செய்தி தொடர்பில் மயிலிட்டி றோ.க.த.க.பாடசாலை அதிபர் விளக்கக் குறிப்பொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

எமது பாடசாலைக்கு அரசும், சிறுவர் பாதுகாப்பு நிதியம், யுனிசெப், சோஆ, பி.ஆர்.சி போன்ற அரசசார்பற்ற நிறுவனங்களும் கடந்த காலங்களில் உதவிகளை வழங்கி உள்ளன. பாடசாலை யில் இருந்த நீர் இறைக்கும் மோட்டர் களவு போய்விட்டது. பாடசாலையில் தளபாட வசதி இருந்தபோது அது பொருத்தமானதாக இல்லை. எனவேதான் தெரிவித்திருந்தேன். என்று அதிபரின் விளக்கத்தில் கூறப்பட்டுள்ளது. (உ)


## 'Oriflame' மீண்டும் யாழ்ப்பாணத்தில்

**அன்பார்ந்த பொதுமக்களே...**

இதோ Oriflame மீண்டும் யாழ்ப்பாணத்தில் உங்களை நாடி வருகின்றது. உங்கள் கனவுகளை நனவாக்க -

கீழ்வரும் தினத்தில் உங்களை நேரடியாகச் சந்திக்கவுள்ளோம். இனியும் தாமதிக்காது எங்களுடன் இணையுங்கள்.

திகதி: 02.10.2010 (Saturday)

நேரம்: 2 pm

இடம்: 194/3, Brown Road, Jaffna.

தொடர்பு: 021 222 9832 (ராசாத்தி)

அன்றைய தினம் அழகுக்கலை காட்சி நடைபெறும். அத்துடன் மாதாந்தம் ரூபா 15,000/-க்கு மேல் வருமானம் உழைப்பது எப்படி என்பது பற்றிக் கலந்துரையாடப்படும்.

**Oriflame இல் இணைவதன் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய நன்மைகள்**

★ வரையறையற்ற வருமானம் உழைக்கலாம்
★ கனவுகளை நனவாக்கலாம்
★ அழகாகத் திகழலாம்
★ பலவினோதங்களை பெற்றுக் கொள்ளலாம்
★ உள்ளூர் மட்டும் அல்ல வெளியூர்களுக்கும் சென்று வரலாம்.
★ இன்னும் பல

அன்றைய தினம் எம்முடன் இணைபவர்களுக்கு பல வெகுமதிகள் காத்திருக்கின்றன.

இக்கருத்தரங்கு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

சுயாதீன பணிப்பாளர் திருமதி தமயந்தி

★ இக்கருத்தரங்கிற்கு Oriflame இல் அங்கத்தவராக இணைந்துள்ளவர்கள் பங்கேற்க முடியாது.



## கருணாகரனின் அரவணைப்பில் மூன்றாம் ஆண்டு நினைவுகள்



ஆசிரியமணி

**அருணாசலம் பஞ்சாட்சரம்**

பிறப்பு 13*11*1927

இறப்பு 02*10*2007

அத்தி முகனடி நித்தந் தொழுதீர்கள்
ஆசிரி யத்தொழில் அருளுடன் செய்தீர்கள்
எத்தனை வேலைகள் இடையறா திருப்பினும்
ஏமத்தில் சாமத்தில் இலகுவாய் முடிப்பீர்கள்
மெத்தக் கவனமாய் மேதினி போற்றிட
மேலான குருசேவை மேன்மையாய்க் கொண்டீர்கள்
நித்தமும் உம்பிரிவை எண்ணியெண்ணியே
நீங்காது துயரத்தால் வாடுகின்றோம் நாமெல்லாம்.

உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய். (103904)

வாசுகி குருபரன் (மகள்).



## ஜயோதா



உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 685 திகதி 27-09-2010

வெற்றி எண்கள்

15 26 43 50 W (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 16,156,240/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 16,156,240/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 16 | 2,000/= | 32,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 424 | 1,000/= | 424,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 663 | 1,000/= | 663,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 16899 | 60/= | 1,013,940/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8014 | 40/= | 320,560/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 198408 | 20/= | 3,968,160/= |
| | | மொத்தம் ரூ. | 7,221,660/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மொணராகலை | 600402292-0-10 |
| கேகாலை | 600410050-5-45 |
| குருநாகல் | 600400267-5-25 |
| கொழும்பு | 600412183-6-16 |
| நுவரேலியா | 600407367-0-10 |
| பொலன்னறுவை | 600414102-6-06 |
| கொழும்பு | 600408420-6-36 |
| காலி | 600416354-9-19 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 7,621,660/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூ. 16,694,260/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்

2010 செப்டம்பர் 30 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே. 2333546/7

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்



## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் இராசரத்தினம் இரத்தினவேல்**

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், கச்சேரி, யாழ்ப்பாணம்)

திதி: அபரபக்க சஷ்டி (29.09.2010)

மலர்வு: 05.09.1927

உதிர்வு: 12.10.2006

ஆண்டுகள் நான்கு ஆனபோதும் எம்மன
ஆலயத்தின் தெய்வம் நீங்கள்தான் அப்பா
அன்பு காட்டி அரவணைத்து வளர்த்தெடுத்தவரே உம் நினைவு
அகலாது ஒருபோதுமெம் மனதை விட்டு

உங்கள் ஆத்மா சாந்திபெற
கற்பகப் பிள்ளையார் தாள் பணிகின்றோம்

அரச வீதி, உரும்பிராய் கிழக்கு. குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகர எல்லைக்குள் ஆதன மதிப்பீடு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.29

யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காணி மற்றும் வீடுக்கான ஆதன மீள் மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த 6ஆம் திகதி முதல் இப்பணி இடம்பெற்று வருவதாக மாநகரசபை தெரிவித்தது.

ஆதன மதிப்பீடானது 5 வருடத்திற்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படுவது வழக்கமானது எனினும் போர் காரணமாக யாழ். மாநகரப் பகுதியில் கடந்த 20 வருடங்களாக இது நடைமுறைப் படுத்தப்படவில்லை. தற்பொழுது நடைபெற்று வரும் இந்த மதிப்பீடானது 3 மாதங்களுக்குத் தொடரும்.


கொழும்பிலிருக்கும் விசேட விலை மதிப்பீட்டுத் திணைக்களமானது 7பேர் கொண்ட குழுவை இதற்கென யாழ்ப்பாணத்திற்கு அனுப்பியுள்ளது. இன்னும் 10 பேர் கொண்ட குழுவும் வரவுள்ளது.

மாநகர எல்லைக்குள் 40,000 ஆதனங்கள் மதிப்பீடு செய்யப் படவுள்ளன. ஆதன உரிமையாளர் அனைவரும் மதிப்பீட்டு அலுவலர்கள் தங்கள் இடத்திற்கு வருகை தரும்போது பூரண ஆதரவை வழங்க வேண்டும் என யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார். இந்த மதிப்பீட்டுப் பணிகளால் மாநகர மக்களுக்குப்பல நன்மைகள் கிட்டும் எனவும் அவர் கூறினார். (உ-317-311)

# புல்லுக்குளத்தின் புனரமைப்புப் பணி ஒரு மாதமாக இடம்பெறவில்லை

யாழ்ப்பாணம்,செப்.29

யாழ்.முனீஸ்வரன் வீதியில் அமைந்துள்ள புல்லுக் குளத்தைப் புனரமைக்கும் பணிகள் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக நடைபெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.



சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் இந்தக் குளத்தையும் அதன் சுற்றாடல்களையும் அழகுறப் புனரமைக்கும் பணிகள் அண்மையில் துரிதகதியில் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் கடந்த ஒரு மாதகாலமாக எவ்வித புனரமைப்புப் பணிகளும் செய்யப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குளம் ஆழமாக்கப்பட்டு அதைச் சுற்றி அணைக் கட்டுக்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

குளத்தின் சுற்றுப்புறத்தைச் சூழ பயணிகளின் பொழுதுபோக்கிற்காக இருப்பிட மேடைகளும் அமைக்கப்பட்டுள்ளன. எனினும் தற்போது அந்தப் புனரமைப்புப் பணிகள் கைவிடப்பட்டுள்ளன.

குளத்தினுள் தாமரைக்கொடிகள் படர்ந்து வளர்ந்து காணப்படுகின்றது. (த-204-26)

# கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகளில் தகைமை அடிப்படையில் மாணவர் அனுமதி

## அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.29

கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகளில் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரத்தில் உயர்பிரிவு, சாதாரணபிரிவு மற்றும் கனிஷ்ட பிரிவுகளில் பயிற்சிபெற்று சித்தியடைந்தவர்களையே எதிர்காலத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பணித் தொகுதிக்கு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

குறித்த பயிற்சிநெறியினை கற்று சித்தியடைந்தவர்கள் உடனடியாக அவர்களது வதிவிட ரீதியாகப் பிரதேசங்களில் காணப்படும் கிளைகளிலும் பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களிலும் பயிலுநராகச் சேர்க்கப்படவுள்ளனர்.

குறித்த சில காலத்திற்கு அவர்களுக்குச் செயல்முறை ரீதியாக பயிற்சி வழங்கப்பட்டு அவர்களின் ஆற்றல், திறனுக்கேற்ப பொருத்தமான பதவிகளில் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இச்செயற்பாடு தொடர்பாக கூட்டுறவுப் பணியாளர் ஆணைக் குழுவுடன் தொடர்புகொண்டு விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றார் அவர். (த-204-318-313)

# நடமாடும் வியாபாரிகள் அதிகரிப்பு; போக்குவரத்துச் செய்வதில் சிரமம்

யாழ்ப்பாணம்,செப்.29

யாழ்.முற்றவெளிப் பகுதியில் நடமாடும் வியாபாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதால் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது.

தனியார் பஸ் தரிப்பிடத்திற்கு அருகாமையிலும் மற்றும் அதனை அண்மித்த பகுதியிலும் நடமாடும் வியாபாரிகளின் பிரசன்னம் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்த நடமாடும் வியாபாரிகளிடம் மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்கின்றபோது போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுவதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்பாகச் செல்லும் கே.கே.எஸ். வீதியிலும் நடமாடும் வியாபாரிகளால் போக்குவரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-204-26)

# வீதிகளில் கழிவுப் பொருள்கள்; சுகாதாரச் சீர்கேடு என முறைப்பாடு

யாழ்ப்பாணம்,செப்.29

நாயன்மார்க்கட்டுகுளம், ராசாவின் தோட்டம், பாணன்குளம் போன்ற வீதிகளில் சுகாதாரச் சீர்கேடுகளை விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருள்கள் வீசப்படுவதாகக் கூறப்படுகின்றது.

இந்த நடவடிக்கையை உடன் நிறுத்திக் கொள்ளுமாறும் மாறாக இதனை மேற்கொண்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாநகர சுகாதாரக் குழுவின் தலைவர் ம.மங்களநேசன் தெரிவித்துள்ளார்.

மழைகாலம் தொடங்கியுள்ளதால் வீதி வடிகால்கள் துப்புரவுக்கென 390 பேர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு தினமும் 68 உழவு இயந்திரங்கள் மூலம் கழிவுப் பொருள்கள் அகற்றப்படுகின்றன.

நெல்சிப் திட்டத்தில் வடிகால் புனரமைப்புப் பணிகள் இடம்பெறும் எனத் தெரிவித்துள்ளார்.

மாநகர முதல்வர் டெங்கு ஒழிப்புத் தொடர்பான செயற்பாடுகளில் கூடிய கவனம் செலுத்துகின்றார் எனவும் பொதுமக்கள் கழிவுப் பொருள்களை வீதிகளில் போடுவதைத் தவிர்க்க வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார். (த-204-07)

## கியூடெக் உதவி

யாழ்ப்பாணம், செப்.29

பொம்மைவெளிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு கியூடெக் மற்றும் யூ.என்.எச்.சி.ஆர் நிறுவனங்களால் உணவல்லாத பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இப்பகுதியின் பொதுமக்களின் அன்றாட தேவைகளுக்காக சமையல் உபகரணங்கள், தறப்பாள், கத்தி, மண்வெட்டி போன்ற அடிப்படைத் தேவைப் பொருள்களை ஏற்கனவே வழங்கியிருந்தன. (204-315-313)

## பால்நிலை வன்முறை தொடர்பான மாநாடு

பால்நிலை வன்முறை தொடர்பான மாநாடு நாளை வியாழக் கிழமை பிற்பகல் 2 மணி முதல் 4 மணிவரை யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலும் கடமையாற்றும் பெண்கள் அபிவிருத்தி அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர். (த-121)

# யாழ். நகர வெற்றிலைக் கடைகளை திடீரென முற்றுகையிடும் பொலிஸார்

யாழ்ப்பாணம், செப்.29

யாழ்.நகரில் உள்ள வெற்றிலை, பீடா விற்பனை நிலையங்களில் பொலிஸார் திடீர் சோதனையை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த விற்பனை நிலையங்களில் லேகியம் மற்றும் போதை கலந்த பாக்கு (பாபுல்)விற்பனை செய்யப்படுகின்றனவா என்பதைக் கண்டுபிடிப்பதற்காகவே இந்தத் திடீர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கடைகளுக்குள் பொலிஸார் புகுந்து தேடுதல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர் எனக் கூறப்படுகின்றது.

கடைகளைச் சூழவுள்ள பகுதிகளில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

நகரப் பகுதியில் உள்ள வெற்றிலைக் கடைகளில் லேகியம், பாபுல் பாக்கு என்பன அதிகளவில் விற்பனை செய்யப்படுவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்தே இந்த நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும், இவற்றை யாழ்ப்பாணம் எடுத்து வருபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (த-26)

## மாதாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.29

யாழ்.மாநகரசபையின் உறுப்பினர்களுக்கான மாதாந்தக் கூட்டம் நாளை வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு யாழ். மாநகராட்சிமன்ற மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெறும். (204-7)

## சிறுவர்கள் சுற்றுலா

யாழ்ப்பாணம், செப்.29

முதியோர் சிறுவர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாநகரசபை முன்பள்ளிச் சிறுவர்கள் குடாநாட்டின் முக்கிய பகுதிகளுக்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை சுற்றுலா செல்வதற்கு மாநகர சபை முன்பள்ளியினர் ஏற்பாடு செய்துள்ளனர். (த-204-7)



அண்மையில் நடைபெற்று முடிந்த நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு இந்து கலாசார அமைச்சினால் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தப்பட்ட இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வைப் படத்தில் காணலாம். (204)





# யாழ். நகர் உணவகங்களில் சுகாதாரப் பகுதியினர் சோதனை

யாழ்ப்பாணம்,செப்.29

யாழ்.நகரில் உள்ள உணவகங்களுக்குச் சுகாதாரப் பகுதியினர் திடீரெனச் சென்று சுகாதார நிலைமைகளைப் பார்வையிட்டு வருகின்றனர்.

உணவகங்களில் சுகாதார முறைப்படி உணவுப் பண்டங்களைத் தயாரிக்க வேண்டும். அவற்றை முடிய கண்ணாடிப் பெட்டிகளில் வைத்து விற்பனை செய்யப்பட வேண்டும் என்று உணவகங்களின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது மழைக்காலம் ஆரம்பித்துள்ளதால் தொடர்ந்து நோய்கள் பரவுவதைத் தடுக்கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேநீர்க்கடைகள், உணவகங்கள் போன்றவற்றில் சுகாதார வசதிகள் பின்பற்றப்படுகின்றனவா என சுகாதாரப் பகுதியினர் பார்வையிட்டு வருகின்றனர்.

சுகாதார வசதிகளற்ற உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (த-204-26)

# முதலில் வாடிக்கையாளருக்கான சேவை அதன் பின்னர்தான் எமது வருமானம்

## எல்.ஐ.சி.பிரதம அதிகாரி கூறுகிறார்

யாழ்ப்பாணம்,செப்.29

முதலில் வாடிக்கையாளர் சேவை. அதன் பின்னரே எமது வருமானம். இவ்வாறுதான் நாம் யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு வருகின்றோம்.

இப்படித் தெரிவித்துள்ளார் ஆயுட் காப்புறுதி நிறுவனத்தின் பிரதம அதிகாரி ஜெகன்நாத்.

ஆயுட் காப்புறுதி நிறுவனத்தின் புதிய கிளை அண்மையில் யாழ். மணிக்கூட்டு வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இப்படித் தெரிவித்துள்ளார்.

[illegible] கையில்:-

யாழ்ப்பாணக்கிளை கடந்த வருடங்களில் கன்னாதிட்டிச் சந்தியில் இங்கியபோது சிறப்பான சேவை புரிந்துள்ளது. யாழ்ப்பாணக் கிளையைப் பொறுத்தவரையில் ஆச்சரியப்படும் அளவிற்குச் சிறப்பாக வளர்ச்சி பெற்று வருகின்றது.

இந்தக் கிளையும் புதிய இடத்தில் இருந்து நன்றாகச் செயற்படும். யாழ்ப்பாண வாடிக்கையாளர்களை வளப்படுத்த இன்னும் வளர்ச்சி அடைவோம். அதற்குப் பொதுமக்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

ஆயுட் காப்புறுதி நிறுவனம் பல விருதுகளைப் பெற்றுள்ளது. இந்திய ஆயுட் காப்பீட்டு நிறுவனம் 27.87 கோடிவரை காப்புறுதி நிலுவையுள்ளது.

கடந்த ஆண்டு 13இற்கு மேல் விருதுகளைப் பெற்றுச் சாதனை படைத்த நிறுவனமாக உள்ளது. மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்க அனைத்து ஊழியர்களும் உழைக்க வேண்டும். இன்னும் வேகமாக செயலாற்றி வந்தால் இந்த நிறுவனத்தை இன்னும் வளர்க்க முடியும்-என்றார்.

இந்த நிகழ்வில் ஆயுட் காப்புறுதி நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் எஸ். கணேஸ்பாபு, சாவகச்சேரி கிளை மேலாளர் கோபிதாசன், கணனிப்பிரிவு மேலாளர் அனில் குமார் உட்படப் பலரும் கலந்து கொண்டு உரையாற்றினர். (த-204-319)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மக்கள் வங்கி

**1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச்சட்டத்தின் 29ட எனும் பிரிவின் கீழான தீர்மானம்**

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29ட என்னும் பிரிவின்கீழ் பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையினால் 2008.05.30ஆம் திகதி நடைபெற்ற அவர்களது கூட்டத்தில் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பிரதேச நொத்தாரிஸ் திருமதி லிங்கா துரைராஜா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004.10.19ஆம் திகதி கொண்ட இல.4668 இலக்கம் கொண்ட ஈட்டு முறியின் பிரகாரம் வங்கிக்குச் செலுத்த வேண்டிய வருமதி கொடுப்பனவில் திரு.பொன்னையா தவராசா, திருமதி தவராசா மதிவதனா தவணை தவறியுள்ளமையினாலும் குறிப்பிட்ட ஈட்டு முறியின் கீழ் தற்போது ரூபா பதினொரு லட்சத்து அறுபத்து ஐயாயிரத்து அறுநூற்றி தொண்ணூறு சதம் ஏழும் (1,165,690.07) பணத்தொகையை ஈட்டு முறி இல.4668 பிரகாரம், தற்போது மக்கள் வங்கிக்கு வருமதியாகச் சேரவேண்டியுள்ளது.

ஆகையால் மக்கள் வங்கி பணிப்பாளர் சபை அதன் 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் அண்டின் 29ஆம் இலக்க வங்கிச் சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ் இவ்வருமதி கொடுப்பனவுகளை அறவிடுவதற்காக மேற் குறிப்பிட்ட ஈட்டு முறி 4668இன் கீழ் வங்கிக்கு ஈடு செலுத்தப்பட்ட ஆதனம் யாழ்ப்பாணம் உத்தரவு பெற்ற ஏலதாரர் கார்த்திகேசு பொன்னையா பாலகிருஸ்ணன் அவர்களால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு வங்கிக்கு வருமதியாய் சேர வேண்டிய சொல்லப்பட்ட தொகை ரூபா பதினொரு லட்சத்து அறுபத்து ஐயாயிரத்து அறுநூற்று தொண்ணூறு சதம் ஏழும் (1,165,690.07) பதினொரு லட்சத்து ஐம்பத்தாறாயிரத்து எண்ணூற்று பதினேழும் சதம் தொண்ணூற்று ஆறுக்கும் (1,156, 817.96) 2006.12.13ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை 20.25வீதம் வருடாந்த வட்டியும் ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகையிருந்தால் அவை தவிர்த்து மக்கள் வங்கிச்சட்ட ''29எல்'' பிரகாரம் அறவிடப்படும். ஏனைய வரவுத் தொகைகளையும் அறவிட வேண்டும் என்பதைத் தீர்மானம் செய்துள்ளது.

ஈடு வைக்கப்பட்டுள்ள ஆதனத்தின் விவரம்

1. வடமாகாணம், யாழ்.மாவட்டம், வண்ணார்பண்ணை பரிஷ், வண்ணார்பண்ணை மேற்கு ''வெள்ளைச் சூரித்தரை'' நிலம் குழி 15.5/8 உறுதியின் படி ஆனால் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.நிர்மலேந்திரன் 2004.09.18ஆம் திகதி வரையப்பட்ட இல.398இன் பிரிவு ..இன் படி குளி 15.389, இரு மாடிக் கட்டடம், கிணறு, பயிரிட்டவை. குறிப்பிட்ட குளி 15.389 எல்லை கிழக்கு கந்தப்பிள்ளை சிற்றம்பலம் ஆதனம், வடக்கு செல்லத்துரை பெண் தெய்வானைப்பிள்ளை ஆதனம் மேற்கு சிவன்பண்ணை வீதியும் கிருஷ்ணன் பெண் ராஜலட்சுமியின் ஆதனம் தெற்கு முத்தையா குணரத்தினத்தின் ஆதனம் இலக்கம் டி 639/82இன் கீழ் யாழ்ப்பாண காணி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிளை சங்கானை,
மக்கள் வங்கி.

பணிப்பாளர் சபை கட்டளைப்படி
உதவிப் பொது முகாமையாளர்,
வடக்கு வலயம்.

(சி/571506)

## எம்மிடமுள்ள நிலங்களைப் பயன்படுத்தி வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்வோம்

### அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.29

நாம் எம்மிடமுள்ள நிலங்களைப் பயன்படுத்தி வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்வதோடு செய்யும் தொழிலில் முன்னேற்றம் அடைய வேண்டும் என யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினால் நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மக்களுக்கு சிறு தொழில் உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வு நல்லூர் திவ்வியஜீவன மண்டபத்தில் ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் திட்டமிடல் இணைப்பாளர் கு.திருக்குமரன்தலைமையில் இடம்பெற்றது. இதற்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

சுமார் 30 வருடங்களாகப் பலவற்றை இழந்துள்ள நாம் அவற்றை எமது உழைப்பினாலேயே உருவாக்கிக் கொள்ள வேண்டும். நாம் சில இடங்களுக்குச் சென்றபோது அங்கு நிலம் மட்டுமே எஞ்சியிருந்தது அந்த நிலங்களினைப் பயன்படுத்தி எம்மையும் நாட்டையும் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல முன்வர வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும் இந்நிகழ்வின்போது 21 பயனாளிகளுக்கு வழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ற)


**Uk யில் படிக்கவும் வேலை செய்யவும் ஓர் வாய்ப்பு !!**

2010 நவம்பர் மாதத்திற்கான வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன!
விரையுங்கள்!

குறைந்தபட்ச மாணவர்களே தெரிவு செய்யப்படுவர்.
உடனடியாக CAS கடிதம் கொடுக்கப்படும்.

டிப்ளோமா
- உயர்தர டிப்ளோமா
- பட்டதாரி டிப்ளோமா
- உயர்தர பட்டதாரி டிப்ளோமா
- கௌரவ பட்டதாரி டிப்ளோமா மற்றும் MSC / MBA பட்டதாரி படிப்பிற்காக

உங்கள் அருமையான, சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!!!

Tier 4, "A" தராதரத்திற்கு மேலான கல்லூரி, பல்கலைக்கழகங்களே தெரிவு செய்யப்பட்டுள்ளன. உடனே தொடர்பு கொள்ளவும்.

**COLLEGE OF MANAGEMENT STUDIES (CMS)**

Jaffna Branch
Mrs. P. Kokulan - Mob: 077 351 5552 Mr. Shethooran - Mob: 077 888 8616
No. 62, Vembadi Rd, Jaffna. Tel No :- 021 320 1043
Vavuniya
Mr. S. Kamaladasan - Mob: 077 605 9662


Head Office:
No.50, 2/11 Galle Road, Colombo Plaza, Colombo 6.
Ms. C. Indrarathna. Tel No: 0113158223
web: www.cmslk.com / email:chethi009@yahoo.com



புதுமைகளைப் புகுத்தும் திருநெல்வேலி யாழ். வைத்தியசாலையில்

**கண் கற்றாக் சத்திர சிகிச்சை புதிய முறையில்...**

கண்ணுக்கு கற்றாக் சத்திரசிகிச்சை இதுவரை காலமும்
கொழும்பு கண்டி போன்ற இடங்களில்
செய்யப்பட்ட சத்திர சிகிச்சை முறை
திருநெல்வேலி யாழ்.வைத்தியசாலையில்
இன்று (29.09.2010) முதல்
ஆரம்பிக்கப்படுகின்றது
என்பதை மகிழ்ச்சியுடன்
அறியத் தருகின்றோம்.



இச் சத்திர சிகிச்சை
ஊசி அல்லது
மயக்க மருந்து இன்றி
PHACO முறையில்
5 நிமிடங்களில்
செய்யப்படும்

கண் வைத்திய ஆலோசனைகள்
தினமும்
மதியம் 12 - 1 மணி வரை
மாலை 4.00 மணியில் இருந்து

**புதிய யாழ்.வைத்தியசாலை**
315, பலாலி வீதி, திருநெல்வேலி.

மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள:
021 222 3533, 0777781003,
0773107685.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி, மாங்குளம் பொலிஸ் நிலையங்களின் நிர்மாணப் பணிகள் அடுத்த மாதம் பூர்த்தியாகும்

## பொலிஸ் மா அதிபர் மகிந்த பாலசூரிய தகவல்

கிளிநொச்சி, செப்.29

கிளிநொச்சி மற்றும் மாங்குளம் பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பொலிஸ் நிலையங்களின் நிர்மாணப் பணிகள் அடுத்த மாத இறுதிக்குள் பூர்த்தியாகிவிடுமென பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, முல்லைத்தீவு, மல்லாவி, ஒட்டுசுட்டான் போன்ற இடங்களில் புதிய பொலிஸ் நிலையங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளதுடன் ஏற்கனவே இயங்கிவரும் பொலிஸ் நிலையங்களும் புனரமைக்கப்படவுள்ளன.

அதேபோல கிளிநொச்சி மற்றும் மாங்குளம் பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டுவரும் பொலிஸ் நிலையங்களின் நிர்மாணப் பணிகள் அடுத்தமாத இறுதிக்குள் பூர்த்தியாகவுள்ளன.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் நவம்பர் மாத முற்பகுதியில் அவற்றைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தமிழ், முஸ்லிம்களை பொலிஸில் இணைத்து அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

அத்துடன் தமிழில் கருமமாற்றுவதற்குரிய பயிற்சிகள் 5 மாதகாலம் வழங்கப்பட்ட 593 பொலிஸார் தயார் நிலையில் உள்ளனர். இவர்கள் வெகுவிரைவில் வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர் என்றார். (த-16)

# மன்னாரில் ஒத்திவைக்கப்பட்ட கண்காட்சி களியாட்ட நிகழ்ச்சியாக ஆரம்பமானது

மன்னார், செப்.29

மன்னாரில் ஆரம்பிக்கப்பட்ட தினமே ஒத்திவைக்கப்பட்ட கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சி மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

கைத்தொழில் வர்த்தக அமைச்சர் நிஷாத் பகியுதீனின் தலைமையின் கீழ் சிறிலங்கா இளைஞர் பேரவையின் உதவியுடன் கடந்த 14 ஆம் திகதி மன்னாரில் ஆரம்பிக்கப்பட்டு அன்றைய தினமே பல்வேறு காரணங்களால் ஒத்திவைக்கப்பட்ட கல்வி மற்றும் வர்த்தகக் கண்காட்சி மீண்டும் கடந்த சனிக்கிழமை ஆரம்பமானது.

மன்னார் அல் அஸ்நா நவோதயாக் கல்லூரி மைதானத்தில் இந்தக் கண்காட்சியையொட்டி மெரிக்கோ ரவுண்ட், சிறுவர் புகையிரதம், வண்ணத்துப்பூச்சி விமானம், பாதாளக் கிணற்றில் மோட்டார் சைக்கிள் ஓட்டம் என்பன அமைக்கப்பட்டுள்ளன. தினமும் புகழ்பெற்ற இசைக் குழுவினரின் இசை நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன. இவற்றைப் பார்க்கும்போது கண்காட்சிக்குப் பதிலாக களியாட்டம் நடைபெறுவதாகவே எண்ணத் தோன்றுகின்றது என மக்கள் கூறுகின்றனர்.

அனைத்து நிகழ்வுகளையும் கட்டணங்கள் செலுத்தியே பொது மக்கள் பார்வையிடலாம் என நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-80)

# ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்தாட்டப் போட்டிகள்

கிளிநொச்சி, செப்.29

ஜனாதிபதி தங்கக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் கிளிநொச்சியில் நடந்து முடிவடைந்துள்ளன.

சென்ற மாதம் 17,18 ஆம் திகதிகளில் 155ஆம் கட்டையில் அமைந்துள்ள இளைஞர் சேவை மன்ற வளாகத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. இதன் ஆரம்ப நிகழ்வுகள் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரி லலித் ஜெயசேகர தலைமையில் நடைபெற்றன. இதில் பிரதம விருந்தினராக வடமாகாண விளையாட்டுப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

போட்டிகளில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த ஆண், பெண் அணிகள் கலந்து கொண்டன.

இறுதிப் போட்டிகளில் கலந்து கொண்ட ஆண்கள் அணிகளில் கரைச்சி கிருஷ்ணபாரதி விளையாட்டுக்கழக அணி வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிச் சென்றது. கரைச்சி நியூஸ்ரார் அணி இரண்டாவது இடத்தைப் பிடித்தது. பெண்கள் அணிகளில் கரைச்சி புதிய பாரதி விளையாட்டுக்கழக அணி வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிச் செல்ல பளை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி இரண்டாவதாக வந்தது.

இறுதிநாள் நிகழ்வுகளுக்கு கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். வடமாகாண விளையாட்டுத்துறையினர் உதவிப் பணிப்பாளர் சு.கனகராசா, கிளிநொச்சி மாவட்ட திட்டப் பணிப்பாளர் மோகனபவன், கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்களான எஸ்.குமார், சி.ஜெயகுமார், வே.சிவநேசன், கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் சத்தியசீலன் ஆகியோரும் அரச உயர் அதிகாரிகளும், இளைஞர் சேவை மன்ற பணிப்பாளர், உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (க-80)



மீள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் விளையாட்டு உத்தியோகத்தர்கள் சி.ஜெயக்குமாருடன் நிற்பதைப் படத்தில் காணலாம்.
(படம்:- கிளிநொச்சி செய்தியாளர்)

# கிராம அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் இன்று

கிளிநொச்சி,செப்.29

கல்மடுநகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று பி.ப.4.30 மணியளவில் சங்கக் கட்டடத்தில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய கூட்டத்தில் முக்கியமான பல விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்களையும், பொது மக்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் இ.யோகநாதன் கேட்டுக் கொண்டுள்ளார். (க-405)

# மன்னாரில் இடியுடன் கடும் மழை வெள்ளநீர் தேங்கியதால் மக்கள் அவதி

மன்னார், செப்.29

மன்னாரில் நேற்று முன்தினம் மாலைவேளையில் பேரிடி முழக்கத்துடன் பெருமழை பெய்தது. சுமார் இரு மணிநேரம் பெய்த கடும் மழையினால் மக்களின் இயல்புநிலை பாதிப்படைந்தது.

மன்னாரில் நீண்ட வரட்சிக்குப் பின்னர் நேற்றுமுன்தினம் இடி முழக்கத்துடன் கடும் மழை பெய்ய ஆரம்பித்தது. இதன் விளைவாக மன்னார் நகரின் பிரதான வீதிகள் உட்பட பல இடங்களிலும் வெள்ள நீர் தேங்கியது. நீர் பாய்ந்தோட வழியின்றிப் பலரதும் வீடுகளுக்குள்ளும் வளவுகளுக்குள்ளும் நீர் தேங்கியது.

மன்னாரில் சுமார் 63 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டு முடிவுறாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நகர வடிகால் அமைப்புத் திட்டத்தினால் வெள்ள நீர் கடலுக்குள் பாய்ந்தோடாமல், குடியிருப்பாளர்களின் வளவுகளுக்குள் நிறையும் நிலையே காணப்படுவதாக மன்னார் நகர மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-80)

# தென்னங் கன்று விநியோகம்

வட்டக்கச்சி,செப்.29

கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 415 குடும்பங்களுக்கு தலா ஐந்து தென்னங்கன்றுகள் எப்.ஏ.ஓ.ஸ்தாபனத்தினரால் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-450)

# பழைய இடத்தில் உப-தபாலகம்

கிளிநொச்சி,செப்.29

கல்மடுநகர் உப-தபாலகம் பழைய இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்தப் பகுதியில் கடந்த மே மாதம் மக்கள் மீள்குடியேறிய போதும் உப-தபாலகம் இயங்காததால் அவர்கள் சிரமங்களுக்கு ஆளாகி வந்தனர். மீள்குடியேறிய மக்களுக்கான கொடுப்பனவுகள் இந்தப் பகுதியில் தபாலகங்களுக் கூடாகவே வழங்கப்படுவதால் இராமநாதபுரம் தபாலகத்துக்குச் சென்றே இந்த மக்கள் அவற்றைப் பெற்று வந்தனர்.

தற்போது கல்மடுநகரிலேயே உப-தபாலகம் இயங்குவதால் இங்கு வாழும் மக்கள் தமது தேவைகளை இதனூடாக நிறைவேற்றிக் கொள்வதற்கு வாய்ப்பாக உள்ளது. (க-405)

# கவனிப்பாரற்று இன்னல்படும் கெங்காதரன் குடியிருப்பு மக்கள்

கிளிநொச்சி, செப்.29

அக்கராயன் கெங்காதரன் குடியிருப்புக் கிராமத்தில் மீள் குடியேறிய மக்கள் பெரும் இன்னல்களுக்கு மத்தியில் இருப்பதாக அந்த மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மக்கள் ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி மீள் குடியேற்றப்பட்டனர். ஆனால் இவர்களை எவரும் இதுவரை சென்று பார்வையிடவில்லையென இவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மழை பெய்யும் போது பாடசாலைகள், கோவில்கள் போன்ற இடங்களை நோக்கி இவர்கள் செல்ல வேண்டிய பரிதாபகரமான நிலையில் உள்ளனர். இவர்களுக்கு இதுவரை எந்தவித நிவாரணமும் வழங்கப்படவில்லையென இந்த மக்கள் தெரிவிக் கின்றனர்.

தமது நிலையை உரியவர்கள் நேரில் பார்வையிட்டு தமக்கு உதவ வேண்டுமென்பதே இந்த மக்களின் வேண்டுகோளாகும். (க)

# சுகாதாரத் தொண்டர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்றும், நாளையும்

மன்னார், செப்.29

மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்படவுள்ள சுகாதாரத் தொண்டர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

மன்னார் சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு ஆயிரம் பேர் வரையில் கலந்து கொள்ள விண்ணப்பித்துள்ளனர்.

மன்னார் நகர், முசலிப்பிரதேசம், நானாட்டான் பிரதேசம், மடு உதவி அரசாங்க அதிபர் மற்றும் மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை உள்ளடக்கிய ஐந்து பிரிவுகளிலுமிருந்து இவர்கள் விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் சுமார் நூறு விண்ணப்பதாரிகள் மட்டுமே தெரிவு செய்யப்படவுள்ளனர் என மன்னார் சுகாதாரப் பணிப்பாளர் திருமதி யூட்.எதினி அறிவித்துள்ளார்.




இன்றும், நாளையும் காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும். (க-80)

# மன்னாரில் மத்தியஸ்த சபையை உடன் நிறுவ மக்கள் கோரிக்கை

மன்னார்,செப்.29

மன்னாரில் விரைவில் மத்தியஸ்தர் சபைகள் அமைக்கப்படும் என்ற குறித்த அமைச்சின் அறிவிப்பு மன்னார் மக்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் நடைபெற்று வந்த வேளையிலும் நாடுபூராவும் இந்தச் சபைகள் வெற்றிகரமாக இயங்கி வந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இவற்றின் செயற்பாடுகள் சிறப்பாக உள்ளன. ஆனால் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு பல மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் மன்னார் மாவட்டத்தில் மட்டும் இந்த மத்தியஸ்த சபைகள் அமைக்கப்படாது உள்ளமை இங்குவாழும் மக்களிடையே வேதனையைத் தோற்றுவித்துள்ளது.

ஏற்கனவே மன்னார் மாவட்டத்திலிருந்து மத்தியஸ்த சபையை நிறுவுவதற்கான விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்ட போதும் இவை கவனத்திற் கொள்ளப்படவில்லையென இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

ஆகவே அமைச்சின் தற்போதைய அறிவிப்பு வெறும் கண்துடைப்புத்தானாவென இந்த மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

ஆகவே வெறும் சொற்களுடன் மட்டும் நின்றுவிடாது செயலிலும் இறங்கி மன்னார் மாவட்ட மக்களின் முக்கிய தேவையான மத்தியஸ்த சபையை தாமதமின்றி நிறுவுவதற்கு உரியவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்பதே மக்களின் வேண்டுகோளாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-80)

# கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் ஆங்கில தினப் போட்டிகளின் முடிவுகள்

கிளிநொச்சி,செப்.29

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே வலய மட்டத்தில் நடத்தப் பட்ட இந்த ஆண்டுக்கான ஆங்கில தினப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியரின் விவரங்கள்.

பார்த்து எழுதுதல் (தொடர்ச்சி)

தரம் -09

கே.தூரிகா - முழங்காவில் மகா வித்தியாலயம், கே.சோபிகா - கிளிநொச்சி மகாவித்தியால யம், எம்.வினித்தா -முழங்காவில் மகா வித்தியாலயம்.

தரம் -10

எஸ்.அஜித்தா- புனித திரேசா மகளிர் கல்லூரி, எ.கமில்ஷா - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கே.லூசினி - பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம்.

சொல்வதெழுதல்

தரம் 6

எஸ்.டிலுசிகா - கிளிநொச்சி மகாவித்தியாலயம், பி.கிந்துஜா - முழங்காவில் மகாவித்தியாலயம், எ.குணலிசா - புனித திரேசா மகா வித்தியாலயம்.

தரம் -7

கே.கிருத்திகா - கிளிநொச்சி மகா வித்தியாலயம், எம்.டினோஜிதா - கிளிநொச்சி மகா வித்தியாலயம், என்.அகல்யா - முழங்காவில் மகா வித்தியாலயம்.

தரம்-8

ஏ.ஏ.நிலுர்னா - பழை மத்திய கல்லூரி, ஜே.ஜே.கலுஸ்கா - இரமநாதபுர மேற்கு அரசினர் த.க.பாடசாலை, என்.காயத்திரி - இராமநாதபுரம் மேற்கு அரசினர் த.க.பாடசாலை.

தரம்-9

எஸ்.திலக்சிகா - கிளிநொச்சி மகாவித்தியாலயம், கே.சோபிகா- கிளிநொச்சி மகா வித்தியாலயம், கே.துர்க்கா - கன்னிமடம் தமிழ் கலவன் பாடசாலை.

தரம்-10

ஆர்.ஜெனாத் -கிளிநொச்சி மகாவித்தியாலயம், ஐ.இந்திரஜித் - கிளிநொச்சி மகா வித்தியாலயம், வி.துவாரபாலகி - பூநகரி மகா வித்தியாலயம்.

தரம் -11

ஆர்.தர்சினி - கிளிநொச்சி மகாவித்தியாலயம், எஸ்.மகிஷா - ஜெயபுரம் மகா வித்தி யாலயம், கீர்த்தனன் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

தரம் -12

ஏ.ஜெனனி - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கே.கோமினா - கண்டாவளை மகா வித்தியால யம், என்.நிக்ஷன் - முழங்காவில் மகா வித்தியாலயம்.

தரம் -13

தர்ஷா -கிளிநொச்சி மத்திய கல்லூரி, கே.திவானுஜா- கனகபுரம் மகாவித்தியாலயம், பி.சிவசாந்தி- ஜெயபுரம் மகா வித்தியாலயம்.

# கல்மடு நகரில் சங்கக் கிளை

கிளிநொச்சி, செப்.29

கரைச்சி வடக்கு ப. நோ.கூ.ச கல்மடுநகர் கிளை கடந்த 10 ஆம் திகதி முதல் கல்மடுநகர் மாதா சொரூபச் சந்தியில் இயங்கி வருகிறது.

இந்தக் கிளை முன்னர் 10ஏக்கர் பகுதியில் இயங்கி வந்தது. தற்போது கல்மடுநகரில் அதிக மக்கள் வசிப்பதால் இந்தக் கிளை இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (க-80)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

STUDYING UK
நொவம்பர் மாதம் 28ஆம் திகதி கல்லூரி ஆரம்பம்
லண்டனில் கல்விகற்க விசாக்கள்
ENGLAND
மிகக்குறைந்த செலவில் குறுகிய நாட்களில் UK செல்ல!
மூன்று நாட்களில் CAS (College Admission) வழங்கப்படும்.
IELTS தேவையில்லை, ஆங்கிலத்தோடு இணைந்த கற்கை வீசா.
Vitoria College of London.
London Richmond College.
Thames College of London.
100% வீசா உத்தரவாதம்
15 வருட அனுபவமிக்க ஆலோசகர்களால் சட்டத்தரணிகளின் வழிகாட்டலில் மிகச்சிறந்தமுறையில் ஆவணமுறைப்படுத்தப்பட்டு விண்ணப்பிக்கப்படும்.
WESTMINSTER INSTITUTE OF HIGHER STUDIES
No. 03, Ramanathan Road, Kalatti Junction, Jaffna.
Call: 0213207778 - 0771919192 - 0772229286

## கேள்விப் பத்திரம் கோரல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களிலுள்ள பனை அபிவிருத்திச் சபையின் அலுவலகக் கட்டடங்கள் அமைத்தல், வேலி அமைத்தல், மலசலகூடம் திருத்தல், சுற்றுலா விடுதி திருத்தம் போன்ற வேலைகளுக்கு கேள்விப் பத்திரம் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. வவுனியா மாவட்டத்திலுள்ள புளியங்குளத்தில் அமைந்துள்ள சபையின் 10 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட மாதிரிப் பண்ணைக்குச் சுற்றிவர வேலி அமைத்தல்.
02. மேற்படி பண்ணையில் 20'X30' அளவுடைய கட்டடம் அமைத்தல்.
03. கிளிநொச்சி மாவட்டத்தில் பிராந்திய அலுவலகக் கட்டடத்தை புனருத்தாரணம் செய்தல்.
04. யாழ்ப்பாணம் தலைமை அலுவலக மலசலகூடம் திருத்தம், சுற்றுலா விடுதி திருத்தம் செய்தல்.

மேற்படி வேலைகள் தொடர்பான விவரங்களை எதிர்வரும் 06.10.2010ஆம் திகதிக்கு முன்னர் தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்தில் வந்து பெற்று, 15.10.2010ஆம் திகதிக்கு முன்னர் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பொது முகாமையாளர்,
பனை அபிவிருத்திச் சபை.
(சி/570403)
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

## மூன்றாம் ஆண்டு நினைவுகள்



ஆசிரியமணி
**அருணாசலம் பஞ்சாட்சரம்**
(முன்னாள் அதிபர், உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்)

தோற்றம் 13★11★1927
மறைவு 02★10★2007

உரும்பையூர் பெற்றெடுத்த உத்தமப் புதல்வனாம் ஆசிரியமணி
உன் நினைவுகள் இன்றும் உள்ளத்தை வருடுதையா
ஊண் உறக்கமின்றி ஊர்பல சுற்றி ஊழியம் பலசெய்தாய்
உன் சேவையை உலகம் உவப்புடன் பார்க்குதையா
கருணைக் கடவுளாம் கருணாகரன் புதுத் தேரேறிவரும் காட்சியை
கண்குளிரக் கண்டு நீங்கள் கண்ணீர் மழை சொரிந்திருப்பீர்கள்
மூன்றாண்டுகள் என்ன முந்நூறு ஆண்டுகள் சென்றாலும்
முத்தான உன் சேவையை முழு உலகமும் மறந்திடுமோ
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"ஆசிரியமணி இல்லம்"
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.
குடும்பத்தினர்.
(103917)

## கலைஞர்களின் கண்ணீர் அஞ்சலி



நீர்வேலி கந்தசுவாமி ஆலய பொருளாளரும் ராசா அண்ணை என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படுபவருமான **சரவணமுத்து இராசரத்தினம்** அவர்களின் திடீர் மறைவுச் செய்திகேட்டு உறைந்திருக்கும் இவ்வேளையில் அன்னாரின் பிரிவால் துயர் உற்றிருக்கும் குடும்பத்தினர் மற்றும் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் கலைஞர்கள் நம் கண்ணீர் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரது ஆத்மா இறைபதம் அடைய எல்லாம் வல்ல நீர்வைக் கந்தவேள் பெருமானை வேண்டி இறைஞ்சுகின்றோம்.
(வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்).

ஆஸ்தான வித்துவான்கள்: K.முகுந்தன், R.சுதா
நீர்வைக் கந்தன் தேவஸ்தானம், நீர்வேலி.
(103920)

## நெடுந்தீவில் பாம்புத் தொல்லை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,செப்.29

நெடுந்தீவில் தற்சமயம் பாம்புக் கடிக்குச் சிகிச்சைபெற கூடுதலான அளவில் மக்கள் வருகின்றனர் என நெடுந்தீவு வைத்திய அதிகாரி செல்வி மகேஸ்வரி நன்னித்தம்பி கூறினார்.

நெடுந்தீவில் கடமைக்கெனத் தான் வந்த பின்னர் சுமார் 15 பேர் வரை பாம்புக்கடிக்கு உள்ளாகிச் சிகிச்சை பெற்றுள்ளனர் என அவர் கூறினார். அதில் சுமார் 10 பேர்கள் வரை மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் எனவும் கூறிய வைத் திய அதிகாரி, ஆஸ்பத்திரி வளவுகளில் கூட பாம்புகளின் நடமாட்டம் இருப்பதாகவும் தனது விடுதியில் இதுவரை நான்கு பாம்புகள் காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

சுருட்டைப் பாம்புகளின் நடமாட்டமே கூடுதலாகக் காணப்படுவதாகவும் வைத்தியர் சுட்டிக்காட்டினார். (உ-7)

## முதியோர் சிறுவர் கௌரவிப்பு விழா

யாழ்ப்பாணம்,செப்.29

முதியோர், சிறுவர் தினத்தை முன்னிட்டு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை மண்டபத்தில் முதியோர், சிறுவர் கௌரவிப்பு விழா நடைபெறவுள்ளது.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எம்.மரியதாஸ் தலைமையில் காலை 9 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி அ.கேதீஸ்வரன், யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ. சரவணபவ, யாழ்ப்பாணம் தாய் சேய் நல வைத்திய அதிகாரி திருமதி எஸ்.திருமகள் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வைத்திய கலாநிதி யே.யதுநந்தன், மாநகரசபை செயலாளர் இ.இரத்தின சிங்கம் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

இந்தநிகழ்வில் கலை நிகழ்வுகள் சிறுவர் முதியோர் கௌரவிப்புக்கள் இடம்பெறும். (204-07)

### விற்பனைக்கு

G.C.E. (O/L) மாணவர்களுக்கான எதிர்பார்க்கப்படும் 05 Model Papers (English Language) கொண்ட By.K.Karan ஆசிரியருடையது. சகல புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகப் பெற விரும்புபவர்கள்
தொடர்பு:- தொ.பே: 0771372280

### வாடகைக்கு

கையேஸ் A/C வாகனம் கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய இடங்களுக்கும் குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு விடப்படும்.விவரங்களுக்கு:- 0779064755.

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 32 வயது 5' உயரமுடைய ரோகினி 2 ஆம் பாதம் 5 கிரகபாவமுடைய M.Sc படித்து வேலை பார்க்கும் மணமகளுக்கு படித்த உள்நாட்டில் தொழில்புரியும் மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்புகளுக்கு: 0719840199

### THE ROYAL COLLEGE OF JAFFNA

3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப்பயில.By.ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.
பிளாக் வீதி, சங்கானை. தொ.பே:- 0776751649

### காணி தேவை

யாழ்.நகரை அண்டிய பகுதியில் இரண்டு பரப்புக்கு மேல் விஸ்தீரணம் கொண்ட காணி தேவை.
தொடர்பு:- 0728953098

### வீடு வாடகைக்குண்டு

யாழ்.கந்தர்மடத்தில் 3 படுக்கை அறைகள், ஒருசமையல் அறை, விசாலமான வரவேற்பறை மற்றும் 25 வாகனங்கள் தரிப்பிட வசதிகொண்ட வீடு வாடகைக்குண்டு.
இல.283/2, பலாலி வீதி, (கெற்ற போல் சந்தி)
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0777769260, 0772328684
(ராஜ்விஜயன் தொடர்
காலை 9-மாலை 6 மணிவரை).

### விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும் உயர்தர விதிமுறைகளுக்கு அமைந்த கோயில் கலசங்கள், தீபங்கள், குத்துவிளக்குகள், சரவிளக்குகள், கெண்டிவகை, பட்டுக் குடைகள், ஆலவட்டக் குடைகள், கும்பக் குடைகள், திருவாசிகள், வெண்சாமரை, சோட உபசார செற்றுகள், கும்பதீபங்கள், பஞ்சாலாத்திகள், அடுக்குத் தீபங்கள் இன்னும் பல தீபங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

பிள்ளையார் ஹொட்டல்
இல.64, வைரவர் கோயில் வீதி,
வைரவப் புளியங்குளம், வவுனியா.
தொ.பே: 024 222 2097
024 222 0129

### விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5 கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- சுப்பிரமணியம் சரவணபவன்
சிற்ப ஆசாரி 14BA, தம்பி லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி-021 490 0085
077 411 2049

### விற்பனைக்கு

எம்மிடம் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெங்கல மணிகள் 5 கிலோ தொடக்கம் 1000 கிலோ வரை மற்றும் கோயில் பொருள்கள், தீப வகைகள், பட்டுக் குடை, திருவாசிகள் என்பனவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- சி.சிவானந்தம்
கந்தசாமி கோயில் முன்பாக
சுபாஜினி ரேட்டேர்ஸ்
A.09 வீதி, கிளிநொச்சி.
தொ.பே:- 0779779726

## ஈரவிழிகளுடன் முதலாமாண்டு நினைவலைகள்



அமரர் சின்னத்தம்பி
**சண்முகநாதன்**
திதி: (ஷஷ்டி-29.09.2010)

அன்னை மடியில் 27★04★1938
ஆண்டவன் அடியில் 09★10★2009

அன்பு அப்பா!
இன்னும் சிலகாலம் இப்புவிதனில்
எம்முடன் வாழ்ந்திடாது
எமைவிட்டுப் பிரிந்திட்டாலும்
எம் உயிருள்ளவரை
தங்கள் நினைவிருக்கும்.

இல.88, யாழ்.வீதி,
யாழ்ப்பாணம். (103919)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி சூசைப்பிள்ளை லோறன்சியா (தங்கம்)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சூசைப்பிள்ளை லோறன்சியா (தங்கம்) நேற்று முன்தினம் (27.09.2010) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ்-திரேசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம், சூசைப்பிள்ளை (பொன்ராசா) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம்-எலிசபேத் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை, மேரி இமெல்டா (ராணி), கெலன் (ராசம்மா), பிறக்சீடா (லில்லி) ஆகியோரின் அருமைச் சகோதரியும் டேவிற் அன்ரன் தவறாஜா (பாபு-சுவிஸ்), அன்ரனிற்ரா ஜெயந்தினி (கொழும்பு), விமலா றாஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் விக்ரோறியா, டிமானி (சுவிஸ்), பிரான்சிஸ் பிறமியல் பிறகேஸ்வரன் (லைவ் ஸ்ருடியோ-கொழும்பு), யஸ்ரின் (C.T.B)ஆகியோரின் அருமை மாமியும் யோசவ் திலிபன், ஜேக்கப் ராம்குமார், மைக்கல் றாஜா, ஜெனிவர் திரேஸ் லின்சி, அன்ரோ லைவ்ரன், ஜெல்றி, கறோலின் யஸ்மி, தஸ்நேஸ் நிஸ்மி ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி நிகழ்வுகளுக்காக சில்லாலையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து இன்று (29.09.2010) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கதிரை மாதா ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சில்லாலை,பண்டத்தரிப்பு (103918) விமலா (மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலி குடிதண்ணீர் விநியோகத் திட்டம் இவ்வருட இறுதிக்குள் முடிவடைய வேண்டும்

## அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்புரை

யாழ்ப்பாணம், செப்.29

அராலிப் பகுதியில் மக்களுக்கான குடிதண்ணீர் வழங்கும் வேலைத்திட்டத்தை விரைவில் ஆரம்பித்து இவ்வருட இறுதிக்குள் நிறைவுசெய்ய வேண்டும் என வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். மேலும் 28 இலட்சம் ரூபா நிதி மதிப்பீட்டில் மேற்படி வேலைத் திட்டத்தை மேற்கொள்ளுமாறு அவர் கூறியுள்ளார்.

1958இல் வலி.மேற்கு பிரதேச சபை பாரிய நீர்த்தாங்கி மூலம் அராலிப்பகுதி மக்களுக்கான குடிதண்ணீரை முழுமையாக வழங்கி வந்தது. ஆனால் மேற்படி நீர்த்தாங்கி தற்போது அழிவடைந்துள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளர் அ.புத்திசிகாமணி மேற்கொண்ட முயற்சியால் "உலக தரிசனம்" நிறுவனம் மேற்படி புனரமைப்புப் பணிகளை நிறைவேற்றத் திட்டங்களைக் கோரி அதற்கான நிதிப்பங்களிப்பினைச் செய்யவும் முன்வந்தது.

இதனையடுத்து 7ஆயிரம் கலன் கொள்ளக்கூடிய அராலி குடிதண்ணீர் விநியோகத்திட்டத்தை வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, வடக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் தி.இராசநாயகம், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு செயலாளர் திருமதி ரமேஷ் ராஜலட்சுமி, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன், யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார், பிரதேசசபை செயலாளர் சு.புத்திரசிகாமணி, உலகதரிசன நிறுவன உதவிப் பணிப்பாளர் ஏ.எம்.வசந்தநாயகம் ஆகியோர் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

மேற்படி புனரமைப்புப் பணிகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப் படவுள்ளதாக உலகதரிசன நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

(த-201-302)

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் துரித மீட்சித்திட்ட அபிவிருத்தி

யாழ்ப்பாணம், செப்.29

வடமராட்சி கிழக்கில் அண்மையில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இடங்களில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுப்பதற்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதிதிட்டமிடற் பணிப்பாளர் ச.குகதாஸ் தெரிவித்தார்.

இந்தத்திட்டத்தின் கீழ் ப.நோ.கூ.சங்கத்தின் தலைமைக் கட்டடம் 4 கிளை அலுவலகங்கள் மற்றும் உடுத்துறை மகாவித்தியாலயம், ஆழியவளை சி.சி.ரி. எம்.எஸ்., மருதங்கேணி எச்.ரி. எம்.எஸ், செம்பியன்பற்று ஜி.ரி. எம்.எஸ்., செம்பியன்பற்று ஆர்.சி.ரி.எம்.எஸ் ஆகிய பாடசாலைகளின் கூரைகள் முதல் கட்டமாகப் புனரமைக்கப்படவுள்ளன என பிரதித்திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மேலும் மருதுங்கேணியில் உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் உள்ளடங்கும் 24 வீதிகளின் திருத்தத்துக்கு 80 மில்லியன் ரூபா ஆரம்பக் கட்டமாக ஒதுக்கியுள்ளதாகவும் பிரதித் திட்டப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

(த-201-15)

# மேலதிகப் பதிவாளர் நாயகமாக சதாசிவ ஐயருக்கு பதவி உயர்வு

யாழ்ப்பாணம், செப்.29



பதிவாளர் திணைக்களத்தின் பிரதிப்பதிவாளர் நாயகம் ந.சதா சிவ ஐயா அமைச்சரவையால் மேலதிகப் பதிவாளர் நாயகமாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் ஒருசில தமிழர்களே உள்ள நிலையில் சதாசிவ ஐயர் உயர்பதவி ஒன்றுக்கு அதுவும் பொதுமக்களுக்கு மிகவும் வேண்டிய திணைக்களத்துக்கு நியமிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் 36 வருடங்களாகக கடமையாற்றும் சதாசிவ ஐயர் கிளிநொச்சியிலும் யாழ்ப்பாணத்திலும் மாவட்டப் பதிவாளராகவும் வடக்குக் கிழக்கு உதவிப்பதிவாளர் நாயகமாகவும் இருந்து போராலும் சுனாமியாலும் இன்னலுற்ற மக்களுக்கு அரும்சேவை செய்துள்ளார். வடக்கு, கிழக்கு அலுவலகங்களைக் கட்டி எழுப்புவதிலும் பதியப்படாத பிறப்புகளைப் பதிவதிலும் இவர் பெரும் பங்காற்றியதுடன், போரினால் அழிந்துபோன கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அலுவலகங்களைப் புனரமைத்துக் கணனி மூலம் சான்று வழங்கும் நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளார்.

வடக்குக் கிழக்குடன் நின்று விடாது பிரதிப்பதிவாளர் நாயகமாக நிர்வாகப் பொறுப்பை ஏற்றது முதல் மலையக மக்களுக்கான பிரதிகள், சான்றிதழ் வழங்குதல் என்பவற்றில் அக்கறையுடன் செயற்பட்டார். இன, மத, மொழி பேதமின்றி இலங்கை முழுவதுமுள்ள காணிப் பதிவகங்களை நவீனமயப்படுத்தி மேம்படுத்தும் முயற்சியில் வெற்றியும் கண்டுள்ளார்.

இந்தியா, பாங்கொக், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குச் சென்று பதிவுமுறைகளை ஆராய்ந்து இலங்கையில் ஐ.சி.ரி.ஏ. நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் இலத்திரனியல் பிறப்புப்பதிவு, இலத்திரனியல் காணிப்பதிவு முறைகளை ஆரம்பித்துத் தொடர்ந்து திணைக்களத்தின் சார்பில் பங்காற்றி வருவதுடன் நீதி அமைச்சின் ரி.ஏ.ஏ.ஆர்.பி திட்டம், தேசிய மொழிகள் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சின் ஐ.நா. அபிவிருத் தித்திட்டத்தின் சமமான நிதித்திட்டம் என்பவற்றுடன் இணைந்து வடக்குக் கிழக்கிலும், மலைநாட்டிலும் சிவில் பதிவு முறைகளை முன்னெடுப்பதிலும் இவர் பெரும் பங்காற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (த)

# தீவகப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம்


## நாடாளுமன்ற உறுப்பினர் உரை

யாழ்ப்பாணம், செப்.29

கல்வி, பொருளாதாரத் துறைகளில் ஏனைய பிரதேசங்களைப் போன்று தீவகப் பிரதேசமும் வளர்ச்சியடைய வேண்டும். அதற்கான அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம். இவ்வாறு தெரிவித்தார் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின்.

கடந்த வெள்ளிக்கிழமை வேலணைப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்ற சமுர்த்தி உதவிக் கருத்திட்டத்தின் கீழ் வாழ்வாதார உதவிகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு :-



மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவர்களின் இரத்ததான நிகழ்வில் எடுக்கப்பட்ட படம். பாடசாலை மாணவர்கள் இரத்ததானம் செய்வதை அருகில் பாடசாலை அதிபர் திருமதி எஸ்.ஜெயவீரசிங்கம் நிற்பதையும் காணலாம். (த-204)

தீவகத்தைப் பொறுத்தவரை எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் ஏனைய உறுப்பினர்களும் அப்பிரதேச வளர்ச்சிக்காகக் கூடிய பங்களிப்பை வழங்கி வருவதைத் தீவக மக்கள் மறக்க மாட்டார்கள். தீவகத்தின் வளர்ச் சிக்காக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி வருவதுடன் இன்னல்களுக்கு உட்பட்டுத் தமது வாழ்வாதாரத்தை இழந்து கஷ்டப்படும் மக்களின் பொருளாதார வளத்தைக் கட்டியெழுப்பவென சுயதொழில் முயற்சிக்குரிய அடிப்படைத் தேவைகளையும் வழங்கி வருகின்றோம்.

மாணவர்கள் மற்றும் இளம் தலைமுறையினரின் எதிர்காலத்திற்காக கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களைச் சிறப்பான முறையில் அவர்கள் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.

இதேவேளை வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் உரையாற் றுகையில் :-

தீவுப்பகுதியின் வளர்ச்சியில் விசேட கவனம் செலுத்தி இப்பகுதி மக்களின் சுபீட்சமான வாழ்வுக்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் எடுத்துவரும் முயற்சிகள் தீவகப்பகுதியை வளம்மிக்க பிரதேசமாக வளர்ச்சி பெறச்செய்யும் என்பதில் எல்லோருக்கும் நம்பிக்கை உள்ளது - என்றார்.

தையல் இயந்திரங்கள், சைக்கிள்கள், நீரிறைக்கும் இயந்திரங்கள், தெளிகருவிகள், மீனவர்களுக்கான வலைகள் என்பன இதன்போது பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. (த-201-7)

# வாய்ப்புலன், செவிப்புலனற்றோருக்கு விசேட அடையாள அட்டைகள்

நாவற்குழி, செப்.29

முற்றிலும் வாய்ப்புலன், செவிப்புலன் அற்றோருக்கான விசேட அடையாள அட்டை யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் வழங்கப்பட்டு வருகின்றன.

கொழும்பிலுள்ள சமூகசேவைகள் திணைக்களம் இந்த அடையாள அட்டை விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

முற்றிலும் வாய்பேசாத, காது கேளாத ஒருவர் காது, மூக்கு, தொண்டை மருத்துவ நிபுணரிடம் மருத்துவச் சான்றிதழ் பெற்று பிரதேச செயலக சமூகசேவைகள் பிரிவில் உரிய படிவத்தைப் பெற்று பூரணப்படுத்த வேண்டும்.

பூரணப்படுத்திய படிவத்துடன் முத்திரையளவு 3 புகைப் படங்களில் கிராம சேவகரின் ஒப்பம் பெறல் வேண்டும்.

மேற்படி விண்ணப்பப் படிவங்கள் கொழும்பிலுள்ள சமூக சேவைகள் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு விசேட அடையாள அட்டைகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

பாதுகாப்புப் படையினரின் சோதனை, அடையாளப்படுத்தல் போன்ற தேவைகளின்போது இந்த அடையாள அட்டை மிகுந்த பயனுடையதானக அமையும். எனவே இதனைப் பெறுவதில் முற்றிலும் வாய்பேசாதோர், காது கேளாதோர் ஆர்வம் காட்டுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

(த-201-121)

# நெடுந்தீவு மேற்கு மருத்துவமனையை 30 வருடங்களின் பின் இயக்க முயற்சி

யாழ்ப்பாணம், செப்.29

30 ஆண்டுகளாக இயங்காதிருந்த நெடுந்தீவு மேற்கு வைத்தியசாலையை மீளவும் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என நெடுந்தீவு வைத்தியசாலை வைத்திய அதிகாரி செல்வி மகேஸ்வரி நன்னித்தம்பி தெரிவித்தார்.

நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற போர் காரணமாக இந்த வைத்தியசாலை செயலிழந்திருந்தது. முன்னர் இந்த வைத்தியசாலை செயற்பட்டுவந்தபோது வாரத்தில் இரண்டு நாள்கள் வைத்தியசேவை இடம்பெற்று வந்தது.

இதனால், நெடுந்தீவு மேற்குப் பகுதி மக்களுக்கு வைத்திய சேவை இலகுவாகக் கிடைத்துவந்தது. இப்போது மிக நீண்டதூரம் பயணம் செய்தே அவர்கள் நெடுந்தீவு வைத்தியசாலைக்கு வரவேண்டி உள்ளது.

(உ-7)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# ஞானவைரவர் ஆலயம் புனரமைக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், செப்.29

நீர்வேலி தெற்கு ஞானவைரவர் ஆலயத்துக்கு அண்மையில் பாலஸ்தானம் செய்யப்பட்டு ஆலயத்தின் புனர்நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஆலயத்துக்குப் புதிய மண்டபம் மற்றும் அலங்காரப் பணிகள் போன்றவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புனர்நிர்மாணப் பணிகள் நிறைவுற்றதும் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் மகாகும்பாபிஷேகத்தை நடத்திவைக்க ஆலய பரிபாலன சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (201-26)

# உலருணவு நிவாரணத்தை வழங்குமாறு மக்கள் கோரிக்கை

கொழும்புத்துறை, செப்.29

யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்குக் கடந்த 3 மாதங்களாக உலர் உணவு நிவாரணம் வழங்கப் படவில்லை எனத்தெரிவிக்கப் படுகிறது.

இடம்பெயர்ந்த முத்திரையை வைத்திருக்கும் பயனாளிகளுக்குக் கடந்த ஜூலை, ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களுக்கான உலருணவுப் பொருள்கள் இதுவரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி விநியோகங்கள் காலந்தாழ்த்தி வழங்கப்படுவதால் தாம் பல்வேறு வாழ்க்கைச் சிரமங்களை எதிர்நோக்குவதாக கூறும் மக்கள் நிவாரணத்தை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

(201-1[illegible])

# மீள்குடியேறிய மீனவர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், செப்.29

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த 1000 குடும்பங்களுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்களை வழங்க அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளதாகக் கடற்றொழில் நீரியல் வளப்பிரதிப் பணிப்பாளர் க.தர்மலிங்கம் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலணியின் அனுமதி பெற்ற அரச சார்பற்ற நிறுவனங்களும், அரச நிறுவனங்களும் மீளக்குடியேறிய இம்மக்களின் வாழ்வாதாரத் தொழிலாகிய கடற்றொழிலை மேம்படுத்துவதற்காக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இதற்காகப் பயனாளிகளின்தெரிவுகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவுகள் முடிவடைந்த பின்னர் அவர்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (201-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேஷம்:**
இனிய மாற்றங்களைச் சந்திக்கும் நாள். உறவினர்களின் பாச மழையில் நனைவீர்கள். வழக்கமான வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களை எதிர்கொள்ளலாம். பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். பால்ய நண்பர்கள் சிலர் மூலம் புதிய நண்பர்களின் அறிமுகம் கிட்டும்

**இடபம்:**
கவலைகள், குழப்பங்கள் தீர்ந்து எதிலும் தெளிவான முடிவு எடுக்கும் நாள். கடனாக வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுப்பீர்கள். நாடி வந்த உறவினர் ஒருவருக்கு உதவி செய்வீர்கள். சகோதரர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் நல்ல விதமாக முடிவுக்கு வரும். கொடுக்கல் வாங்கல்களில் சுமூகமான நிலைமை காணப்படும்.

**மிதுனம்:**
வீட்டுக்கு தேவையானதை வாங்க கணிசமாகச் செலவு செய்யலாம். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி தொந்தரவு கொடுக்கலாம். நண்பர்களுடன் ஏற்பட்ட பகை விலகி பாசம் அதிகரிக்கும். மறதியால் அவதிகளுக்கு ஆள்படலாம். உறவினர்கள் வழியில் முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். அடுத்தவர் விவகாரங்களில் தலையிட வேண்டாம்.

**கடகம்:**
நினைத்தது நடப்பதால், உற்சாகமான அனுபவங்களைச் சந்திக்கலாம். விருந்து,விசேடஷகளால் மகிழ்ச்சி அடைவீர்கள். எதிர்ப்புகள் போட்டிகள் விலகும். லாபகரமான பணவரவுகளுக்கு வாய்ப்புகள் உண்டு. நண்பர்கள் வட்டம் விரிவடையும். நீண்ட நாள்களாகச் சந்திக்காத மாமன், மைத்துனர்களைச் சந்திக்கலாம்.

**சிங்கம்:**
சிலர் கேட்காமலேயே உதவிகள் செய்வீர்கள். குடும்ப உறுப்பனர்கள் உங்களின் யோசனையை கேட்டு செயற்படுவர். நண்பர் ஒருவரை நம்பி உறவினர்களுக்கு வாக்குறுதி கொடுக்கலாம். அலைச்சல் குறைந்து ஆதாயம் கிட்டும். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். மற்றவர்கள் பாராட்டும் வகையில் நடந்து கொள்வீர்கள்.

**கன்னி:**
வாயு, வயிறு உபாதைகளைச் சந்திக்கலாம். யாருடைய பணமாவது உங்களின் கைகளில் புரளலாம். நாளை நடக்கும் என நினைத்த காரியம் ஒன்று இன்றே நடந்து விடலாம். உங்கள் மூலம் ஒருவர் காரியம் சாதிக்க முற்படலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். இறை வழிபாடு அமைதி தரும்.

**துலாம்:**
தண்டச் செலவுகளால் கையிருப்பு கரையலாம். குடும்ப உறுப்பினர்களின் ஏச்சு, விமர்சனங்களுக்கு ஆளாகலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். பெரிய மனிதர்கள் சிலரை பார்க்க முற்பட்டு அது முடியாமல் போகலாம். மதிப்பு, கௌரவத்துக்கு பாதிப்பு வரும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

**விருச்சிகம்:**
வீட்டில், வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும் நாள். நீண்ட நாள் நண்பர்கள் மூலம் முக்கிய காரியம் ஒன்றை சாதித்துக் கொள்வீர்கள். வாகனங்களால், பெண்களால் செலவுகள் ஏற்படலாம். விமர்சித்தவர்களே உங்களைப் பாராட்டும் சூழ்நிலை உருவாகும். காலை முதல் மாலை வரை பல வேலைகளைத் திட்டமிட்டு செய்வீர்கள்.

**தனுசு:**
எதிலும் தாமதமில்லாத வெற்றி காணும் நாள். குடும்ப முன்னேற்றத்திற்காக சில திட்டங்கள் போடு வீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். நீங்கள் எதிர்பாராத உறவினர் ஒருவர் உங்களை தொடர்பு கொண்டு பேசலாம். கடந்த கால அனுபவம் ஒன்றை நினைத் துப் பார்ப்பீர்கள். மனதில் உற்சாகம் குடிகொள்ளும் நாள்

**மகரம்:**
நெஞ்சை விட்டு அகலாத நிகழ்ச்சிகள் நடக்கும். உறவினர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, கௌரவம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். முன்பின் தெரியாதவர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். பயணங்களால் அலுப்பு, சலிப்பு ஆள்கொள்ளும். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம்.

**கும்பம்:**
நண்பர்களின் தொல்லைகளுக்கு ஆள்படலாம். பணவரவுகள் வருவது போல் தோன்றினாலும் வராமல் போகலாம். சில வேலைகளை ஏற்றுக் கொள்வதால் கடினமான நிலைமையைச் சந்திக்கலாம். தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் நபர்களை அடையாளம் காண்பீர்கள்.

**மீனம்:**
உயர்வான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைக்கும் நாள். அரசியல்வாதிகள் நினைத்ததை சாதிப்பதில் தடைகள் ஏற்படும். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். கடன் மிகுதிகளை கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்ட வேண்டும். சோர்வின்றி சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள். சிறு வரவு உண்டு.

# அரசியின் பரிசு



பிரபலமான பியானோ கலைஞரும், இசைக் கலைஞருமான ஒருவர் முற்காலத்தில் வியன்னா நாட்டில் இருந்தார்.

அக்காலத்தில் இங்கிலாந்து நாட்டு மகாராணி அவரது சங்கீதத்தைக் கேட்கவேண்டும் என ஆசைப்பட்டு அரண்மனைக்கு அழைத்து வாசிக்கச் சொன்னார். உடனே கலைஞரும் வாசித்தார். அதன்பின்அவருக்குப் பாராட்டி பரிசு கொடுத்து அனுப் பினார்கள்.

அந்த இசையைக் கேட்பதில் இங்கிலாந்து நாட்டு அரசி அதிக ஆர்வம் கொண்டு கலைஞரை அடிக்கடி அரண்மனைக்கு அழைத்தார். இப்படியிருந்த வேளையில் ஒருநாள் அரசி, கலைஞரைப்பார்த்து ''உங்களது நாட்டின் தேசிய கீதத்தைப் பாடுங்கள்'' என்று கேட்டார். உடனே அவர் தனது நாட்டின் தேசிய கீதத்தைப் பாடத் தொடங்கினார். அப்படி அவர் பாடத்தொடங்கியவுடன் அரசி அப்பாட்டுக்கு மரியாதை செலுத்தும் நோக்கில் பாடல் முடியும் வரைக்கும் அப்படியே எழுந்து நின்றார்.

அக்கலைஞரின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அதன்பின் அக்கலைஞர் தன் நண்பரொருவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது நண்பரிடம் ''அரசி எனக்கு எவ்வளவோ பரிசுகள் தந்திருக்கிறார். ஆனால் அவை எல்லாவற்றையும் விட விலைமதிக்க முடியாத ஒரு பரிசையும் தந்திருந்தார். அது என்ன தெரியுமா? எங்களது நாட்டின் தேசிய கீதத்தை நான் பாடும் போது அவர் எழுந்து நின்று மரியாதை செலுத்தினாரே! அதுதான் பெரிய பரிசு'' என்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்.

# கஷ்டங்களை கஷ்டப்படுத்துவோம்



வாழ்க்கையில் கஷ்டங்களே வரக் கூடாது என்று சிலர் எதிர்பார்ப்பார்கள். இந்த நினைப்பு, குழந்தைத் தனமானது. தினந்தோறும் தீபாவளியாகவே இருக்காதா? என்று ஏங்குகின்ற, எதிர்பார்க்கின்ற மத்தாப்பூ மனசுக் காரர்கள் சின்னப்பிள்ளைகள்தான். கஷ்டமே இல்லாத வாழ்க்கை என்பது யாருக்குமே அமைந்ததில்லை.

ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள்தான் இன்பமும் துன்பமும். துன்பம் வாழ்வின் ஒரு நிலை.... ஒரு நிகழ்ச்சி.... ஒரு நேரக் கட்டாயம். அதாவது விதிப்படியும் இயற்கை நியதிப்படியும் இவை நடக்க வேண்டிய விடயங்களேயாகும். அந்தக் கஷ்டங்களை எதிர்கொள்வதும் வெல்வதும்தான் வாழ்வின் சுவை... சுகம்... சுவாரஸ்யம். சவால்களை... வாழ்க்கையை வளப்படுத்தும் வழிவகைகள் என்றே கூறலாம்.

கஷ்டம் என்ற ஒன்று வராவிட்டால் கடவுளை யார் நினைக்கப் போகிறார்கள்! பத்து மணி பஸ்ஸுக்கு பதைபதைக்க ஓடி வருகிறோம். பஸ் கிடைத்தால் கடவுள் நினைப்பு வருவதில்லை. ''இப்பதான் பஸ் போனது'' என்று ஒருவர் சொன்னால் ''அடக் கடவுளே... எப்படி வேலைக்குப் போறது'' என்று வேலைசெய்யும் அலுவலகம் வரை கடவுளை கூட்டிச் செல்கின்றோம். கஷ்டங்கள்தான் கடவுளை ஞாபகப்படுத்துகின்றன. கஷ்டத்துக்கான காரணங்களை ஆராய்ந்தால் நமக்கு அறிவுத் தெளிவு வரும். உலக வாழ்வின் உன்னதமான உண்மைகள் புலப்படும்.

சுகி.சிவம்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

நாவற்குழி,செப்.29

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் (பெண்) பதவிக்கு விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன. இவ்விண்ணப்பபங்கள் மூலம் பணிப்பெண் பராமரிப்பாளர் மற்றும் வீட்டுப் பணிகள் சாராத பயிற்சிகளுக்கே தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இப்பயிற்சிக்கு விண்ணப்பிப்பவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தங்களின் மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்களுடன் 4 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேலும் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் மனையியல் பாடத்தில் சித்தியடைந்திருத்தல், உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் அல்லது உயர்கல்வி கற்றிருத்தல் சுற்றிருப்பதோடு அழகியற் பாடக்கலை, பராமரிப்பாளர் சேவை ஆகியன மேலதிக தகைமயாகக் கொள்ளப்படும்.

மேலும் சிங்களம் மற்றும் தமிழ் மொழியில் கற்பிக்கும் ஆற்றல், அரபிக், கிரேக்கம், ஈப்ரு, ஆங்கிலம் மற்றும் ஹிந்தி ஆகிய மொழிகளில் உரையாடுதல் அல்லது கற்பிப்பதும் சிறப்பாகக் கொள்ளப்படும்.

இவ்விண்ணப்பங்கள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் பத்தரமுல்லையில் உள்ள 234 டென்சில் கொப்பேக்கவே மாவத்தை கொஸ்வத்தயில் உள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்குப் பிரதிப் பொது முகாமையாளர் என்னும் முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக தொடர்புகளுக்கு 011 2864132 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் (ற-121)

# புலமைப் பரிசில் பரீட்சையில் 70 இற்கு மேல் புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்கள்

கொழும்பு, செப்.29

2010ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் இரு வினாத்தாள்களிலும் 70 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் ஒரு மாத காலத்தினுள் 'தேர்ச்சிச் சான்றிதழ்கள்' வழங்க ஏற்பாடாகியுள்ளதெனக் கல்வி அமைச்சு கடந்த 26ஆம் திகதி தெரிவித்துள்ளது.

இவ்வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 85 வீதத்தினர் இரு வினாத்தாள்களுக்கும் 70 புள்ளிகளைப் பெற்றிருந்த அதேவேளையில் 70 வீதத்தினர் இரு வினாத்தாள்களிற்கும் 100 புள்ளிகளைப் பெற்றுள்ளனரெனக் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறியிருக்கிறார்.

இவ் வருடம் 148 வெட்டுப்புள்ளிக்கு மேல் 10 வீதமான ஆன மாணவர்களேதான் பெற்றுள்ளனர். முன்னைய வருடங்களிலும் இது போன்ற நிலையிலிருந்தது. எனவே இத்தகைய சான்றிதழ் வழங்குவதால் மாணவர்கள் மேலும் முயற்சியடையக் கூடியதாக அமையும் என அமைச்சர் கூறியுள்ளார். வழங்கப்படும் சான்றிதழ்களில் குறித்த மாணவர்களின் புள்ளிகளும் தரப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ரி)

Nestle NESPRAY சர்வதேச சிறுவர் தினம் 2010

நெஸ்லே நிறுவனம்

யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியம், வலயக் கல்வி அலுவலகங்கள், மாநகரசபை, உள்ளூராட்சித் திணைக்களம் மற் றும் சிறிலங்கா காவல்துறை ஆகியவற்றுடன் இணைந்து நடாத்தும் நெஸ்பிறே சிறுவர் உலகம்.

எதிர்வரும் ஒக்டோபர் 2 ஆம் 3 ஆம் திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில்....

உங்கள் குழந்தையின் அறிவு, மகிழ்வு மற்றும் வினோதம்

★ மெரிகோ ரவுண்ட் ★வினோத விளையாட்டுக்கள் ★ பவுன்சர் ★பலூன் மாடி
★ பால்வீடு ★குழந்தைகள் சினிமா ★ சிறுவர் இசைநிகழ்ச்சி
★ மேலும் விசேட அம்சங்கள் பல
★ விசேட வைத்திய சந்திப்பிற்கு குழந்தையை இலவசமாக பங்குபற்ற வைக்க முடிவதுடன் தொலைக்காட்சி நாடகக் கலைஞர்களுடன் களிப்படையவும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.
★ குழந்தைக்கான சேமிப்புக் கணக்கை வெல்லவும் வாய்ப்பு

களிப்படையுங்கள்.... பரிசை வெல்லுங்கள்....!

நெஸ்பிறே என்றிட்ச் 400 கிராம் பைக்கற்றின் மேல் அட்டையை கொண்டு வர மறக்க வேண்டாம்.

காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

யாழ்.மத்திய கல்லூரிக்கும் சுப்பிரமணியம் பூங்காவிற்கும் இடைப் பட்ட வீதியில் குழந்தைகளின் ஊர்வலம் ஆரம்பமாகி சிறுவர்களின் அலங்கரிப்புடன் துரையப்பா விளையாட்டரங்கை வந்தடையும்.

நெஸ்பிறே சிறுவர் உலகைக் காண வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வாரீர் சிறுவர் உலகை கண்டு களித்திட....

மகிழ்வீர் உங்கள் பிள்ளைகளின் திறமையைக் கண்டு.

(103785)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு ஒற்றைத் தலைவலி

## மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை



தலைவலி மற்றும் ஒற்றைத் தலைவலிப் பிரச்சினைகளால் பள்ளிக் குழந்தைகள் பாதிக்கப்படுவது அதிகரித்து வருகிறது. இதனால் அவர்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும் என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.

குடும்பச்சுமை, வேலைப்பளு போன்றவற்றால், பெரியவர்களுக்குத் தலைவலி மற்றும் ஒற்றைத் தலைவலிப் பிரச்சினை ஏற்படுவதாகக் கருதப்படுகிறது. ஆனால் இந்தப் பிரச்சினைகளால் தற்போது பள்ளிக் குழந்தைகள் பாதிக்கப்படுவதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து குழந்தைகள் மற்றும் மூளை நரம்பியல் மருத்துவ நிபுணர் ஆண்ட்ரூ ஹெர்சி மேலும் கூறியதாவது:

தற்போதைய காலகட்டத்தில் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்காக அதிகாலையிலேயே எழுந்து விடுகின்றனர். பள்ளியில் நீண்ட நேரம் பாடங்களைக் கூர்ந்து கவனிக்கின்றனர். மேலும் வீடு திரும்பும் அவர்கள் வீட்டுப் பாடங்களை முடித்துவிட்டு வெகுநேரம் கழித்துத் தூங்கச் செல்கின்றனர். இதுதவிர காலையில் பள்ளிக்குச் செல்லும் பதட்டத்தில் அவர்கள் சாப்பிடுவதில்லை. போதிய தண்ணீர் குடிப்பதில்லை. இதனால் அவர்களுக்கு அடிக்கடி தலைவலி ஏற்படுகிறது. ஒற்றைத் தலைவலி பரம்பரையாக வரக்கூடிய பிரச்சினை. அடிக்கடி ஏற்படும் தலைவலியும் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியது. ஹார்மோன்களில் மாற்றும், இரத்த நாளங்களை விரிவடையச் செய்வது உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தும். தற்போது 10 சதவீத குழந்தைகளுக்கும், 28 சதவீத பெரியவர்களுக்கும் இந்தப் பிரச்சினை உள்ளது. பெரியவர்களுக்கு 4 மணி நேரமும், குழந்தைகளுக்கு ஒரு மணி நேரம் முதல் 72 மணி நேரம் வரைகூட ஒற்றைத் தலைவலி தொடர்ந்து இருக்கும். பெரியவர்களுக்கு தலையின் ஒரு பகுதியிலும் குழந்தைகளுக்கு நெற்றியிலும் ஒற்றைத் தலைவலி ஏற்படுகிறது. மூன்று வயதுக் குழந்தைகளுக்குக்கூட ஒற்றைத் தலைவலி தாக்குகிறது. காலநிலை மாற்றங்களாலும் இப்பிரச்சினை ஏற்படுவதாக ஆண்ட்ரூ ஹெர்சி கூறுகிறார்.

நன்றி : மருத்துவ இணையம்.




# சூரிய சக்தி உளவு விமானம் ஐந்து ஆண்டுகள் ஓயாமல் பறக்கும்



ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பறக்கும் வகையில் சூரியசக்தி உளவு விமானம் ஒன்றை போயிங் நிறுவனம் தயார் செய்துள்ளது.

சூரிய சக்தியில் இயங்கும் உளவு விமானம் தயாரிக்கப் போயிங் நிறுவனத்திடம் அமெரிக்க இராணுவத்தினரின் உத்தரவுக்கமைய சோலார் ஈகிள் என்ற பெயரில் உளவு விமானத்தைத் தயாரித்துள்ள போயிங் விமான நிறுவனம் அதைப் பரிசோதித்து வருகிறது. இந்த விமானம் நிற்காமல் விண்ணில் தொடர்ந்து 5 ஆண்டுகள் பறக்குமாம்.

இந்த விமானத்தின் இறக்கையில் உள்ள சோலார் தகடுகள், பகல் நேரத்தில் மின்சாரம் உற்பத்தி செய்யும். இதன் மூலம் விமானத்தின் எலக்ட்ரிக் மோட்டர்கள் மற்றும் புரொப்பிலர்கள் இயங்கும். வானில் மிக உயரத்தில் தொடர்ச்சியாகப் பறந்து, படங்கள் மற்றும் உளவுத் தகவலை தரையிலுள்ள கட்டுப்பாட்டு மையத்துக்கு இந்த விமானம் அனுப்பிக் கொண்டிருக்கும்.

முதல் முறையாகச் சோதனை ஓட்டத்துக்கு விடப்படும் விமானம், 30 நாள் நிற்காமல் பறக்கவுள்ளது. இந்தச் சோலார் ஈகிள் விமானம் 2014ஆம் ஆண்டு, அமெரிக்க இராணுவத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

நன்றி : தொழில்நுட்ப இணையம்.

# செவ்வாய் மற்றும் நிலவில் விவசாயம் செய்யலாம்



செவ்வாய் மற்றும் நிலவில் பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பயிரிட முடியுமா என்ற ஆராய்ச்சியில், அமெரிக்காவின் அரிசோனா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஈடுபட்டனர். பல்கலை வளாகத்தில் நிலவின் வெப்பத்தை ஒத்த சூழலில் ஒரு பரிசோதனைக்கூடம் உருவாக்கப்பட்டு செடிகள் பராமரிக்கப்பட்டதில் இந்தத் தகவல் தெரியவந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஆராய்ச்சியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பூமியில் இருந்து செடிகளை இரு கிரகங்களுக்கும் எடுத்துச் சென்று வளர்க்க முடியும். இதன் முதல் கட்டமாக உருளைக்கிழங்கு, தக்காளி, மிளகு உள்ளிட்ட சில காய்கறிகளை உற்பத்தி செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிலவில் இவற்றைப் புதைத்துவைத்தால் போதும் செடிகள் துளிர்க்கத் துவங்கிவிடும். அதிக அளவு தண்ணீர் தேவைப்படாது. விதை மற்றும் குழல் வடிவத் தாவரங்களின் கிளைகளில் உள்ள ஈரப்பதமே அவற்றின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரியும். 30 நாள்களில் காய்த்துக் குலுங்கத் துவங்கும். ஓர் இயந்திர மனிதனை பூமியில் இருந்து ரிமோட் மூலம் இயக்கி, நிலவு மற்றும் செவ்வாய்க் கிரகங்களில் தோட்டத்தைப் பராமரிக்க முடியும். இவ்வாறு ஆராய்ச்சி முடிவுகளை அடுக்குகிறார்கள் விஞ்ஞானிகள்.

# இன்னமும் வாழ்வேன்

உள்ளதும் கெட்டு உடுதுணியோடு
ஊரினை விட்டு தேடி வந்தேன்
பள்ளமும் மேடும் பகடையுந் தாண்டி
பாழினில் மூழ்கி மீண்டு வந்தேன்!

நாற்றொழில் தேடி நிகரினில் சேர்ந்
நாரெென இன்று வாடி வந்தேன்
புற்றுறை தேரை படுதுயர் வாழ்வில்
பேறென இங்கு ஏதுகண்டேன்!

நித்தமும் நோகும் வயிறினுக்காக
நேர்வதைச் செய்து வாழுகின்றேன்
மத்தெனை ஆட்டி மடிநிறைத்தாரும்
மானிடப் பணியைத் தேர்வதில்லை!

கு.சிந்துஜன்,
கொழும்புத்துறை.

# சூரிய சக்தியில் இயங்கும் உளவு விமானம்

## அமெரிக்கா தயாரிக்கிறது



பாதுகாப்புக் காரணங்களுக்காக அமெரிக்க இராணுவம் பல புதிய கண்டு பிடிப்புகளை உருவாக்கி வருகிறது. அந்த வகையில் தற்போது வானில் பறந்தபடியே உளவு பார்ப்பதற்காக அதிநவீன விமானத்தைத் தயாரித்து வருகிறது.

அது போயிங் ரக விமானத்தை போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த விமானம் ரூ.440 கோடி செலவில் தயார் செய்யப்படுகிறது.

இது ஆளில்லாமல் சூரியசக்தி மூலம் தானாக இயங்கக் கூடியது. இதற்கு சூரிய கழுகு எனப் பெயரிடப்பட்டுள்ளது. பகல் நேரத்தில் இது சூரிய ஒளியை உறிஞ்சி சேமித்து வைத்துக்கொள்ளும். அதன் மூலம் இரவு நேரத்திலும் கூட தொடர்ந்து பறக்கும். விமானத்தில் பொருத்தப்பட்டுள்ள அதிநவீன கருவிகள் போட்டோ எடுத்து அதன் மூலம் தகவல்களை அமெரிக்க இராணுவத்துக்கு அனுப்பும்.

விமானத்தில் சக்தி வாய்ந்த மின்சார மோட்டர்கள் மற்றும் உந்து விசைக் கருவிகள் பொருத்தப்பட உள்ளன. இதை ஆளில்லா விமானம் ஆகவும், போர்க்காலங்களில் இதைப் பயன்படுத்தவும் முடியும். 2011ஆம் ஆண்டு இது பயன்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நன்றி : தொழில்நுட்ப இணையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# O/L மாணவர்களே!

## உதயன் வழங்கும் ஒரு நற்செய்தி...

## மாவட்ட வலம் - 2010

உதயன் பரீட்சையில் வெற்றிபெற வைக்கும்

நாட்டின் எப்பகுதியில் இருந்தும் நாடு முழுவதும் உள்ள பிரபல ஆசிரியர்களின் வினாத்தாள்களைப் பயிற்சி செய்ய

உதயன் கல்விச்சுடர் வழங்கும் அரிய வாய்ப்பு

யாழ்ப்பாணம்
கொழும்பு
திருமலை
வவுனியா
கிளிநொச்சி
மன்னார்
மட்டக்களப்பு
அம்பாறை
கண்டி
பதுளை
நுவரெலியா
புத்தளம்
குருநாகல்

### இறுதி எதிர்பார்ப்பு மாதிரி வினாத்தாள்களும் விடைகளும்

கணிதம்
விஞ்ஞானம்
தமிழ்
ஆங்கிலம்
வணிகக்கல்வியும் கணக்கீடும்
வரலாறு

இவ்வருடம் பரீட்சை எழுதும் மாணவர்களுக்காக மாவட்ட ரீதியிலான பிரபல ஆசிரியர்களினது பல்வேறு நுட்பமான மாதிரி வினாத்தாள்கள் வாரம் ஒரு மாவட்டமாக உங்கள் உதயன் நாளிதழில்

**01.10.2010**

முதல் வெளிவர உள்ளன.

முதல் வாரம் அம்பாறை மாவட்ட பிரபல ஆசிரியர்களின் மாதிரி வினாத்தாள்கள்....

பிரதிகளுக்கு: அருகில் உள்ள உதயன் முகவரிடம் பதிவுசெய்யவும்.

தொலைபேசி: 0115738855, 0714273035


# 31 ஆம் நாள் நினைவு அழைப்பும் நன்றி நவில்தலும்

மண்ணில் 12.01.1958

விண்ணில் 30.08.2010



## திருமதி இஸ்ரெலா பராசக்தி அரியநாயகம்

(முன்னாள் முகாமையாளர், கிராமிய வங்கி...)

**"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்
என் ஓட்டத்தை முடித்து விட்டேன்
விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்
இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய
வாழ்வுக்கான வெற்றி வாகையே"**

**(2 திமொ 4:7-8)**

எமது இதயத் தெய்வம் இறைவனடி எய்திய செய்திகேட்டு எமது துயரத்தில் பங்கேற்று இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் தொலைபேசி, தந்தி, கடிதம் மூலம் தொடர்பு கொண்டவர்களுக்கும் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும், நேரில் சமுகமளித்தவர்களுக்கும் சிறப்பாக தென் இந்திய திருச்சபை ஆயர் மேதகு பேரருட் கலாநிதி D.S. தியாகராசா அவர்களுக்கும் அவர்தம் பாரியார், தென் இந்திய திருச்சபை ஓய்வு நிலை பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன், குருமார்கள், யாழ்.புனித அடைக்கல நாயகி (O.L.R) பங்குத்தந்தை அருட்பணி றெஜிராஜேஸ்வரன் அடிகளார், திருகோணமலை புனித மரியாள் பேராலயப் பங்குத் தந்தை அருட்பணி ஜோஜ் திசநாயக்கா அடிகளார், ஆன்ம இளைப்பாற்றிக்கான திருப்பலி ஒப்புக்கொடுத்த அருட்பணி ஜெறோம் லம்பேட் O.M.I அடிகளார், அருட்பணி ஞானேந்திரன், அருட்பணி எ.ஜெயசேகரம், அருட்பணி பிலிப், அருட்பணி ம.பத்திநாதர், அருட்பணி ஆ.யஸ்ரின் அடிகளார் மற்றும் அருட் தந்தையர்கள், திருமலை-மட்டுநகர் அன்புச் சகோதரர் சபையைச் சேர்ந்த அருட் சகோதரர்கள், முன்னாள் திருக்குடும்ப மாகாணசபைத் தலைவி அருட் சகோதரி G.M. புஸ்பம் அவர்கள், திருக்குடும்ப கன்னியர் சபை, கார்மேல் கன்னியர் சபை அருட் சகோதரிகள், திருமலை, யாழ்ப்பாண பக்திசபை உறுப்பினர்களுக்கும், சிறுகைத்தொழில் மற்றும் பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் மாண்புமிகு டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு.முருகேசு சந்திரகுமார் (தோழர்-அசோக்), நா.உ.திரு.சில்வெஸ்திரி அலன்ரின், யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி.அமைப்பாளர் திரு.க.கமலேந்திரன் (தோழர் கமல்), ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் அனைவருக்கும் யாழ். மாநகர சபை உறுப்பினர் திரு.N.கனகரத்தினம் (விந்தன்) அவர்களுக்கும் ஐவன் சத்திய பால் (நோர்வே) அவர்களுக்கும் மலர்வளையம் வைத்து, மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியவர்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்கள், இறுதி அஞ்சலி உரை நிகழ்த்தியவர்கள் அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

31ஆம் நாள் ஆன்ம சாந்திக்காக இறைவழிபாடு இன்று (29.09.2010) புதன் கிழமை மு.ப. 10.30 மணியளவில் எமது இல்லத்திலும் மு.ப.11 மணிக்கு புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கும் ஆன்ம இளைப்பாற்றிற்கான திருப்பலியிலும், அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

36, 5ஆம் குறுக்குத்தெரு,
[illegible] தொ.பே:- 0718665418

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தினபுரி,கேகாலை மாவட்டங்களுக்கு புதியதாக நான்கு பிரதேச செயலகங்கள்

கொழும்பு,செப்.29

இரத்தினபுரி மாவட்டத்தில் உடவளவை மற்றும் வேல்வத்த பம்பரகொட்டுவ எனும் பெயர்களில் இரு புதிய பிரதேசசபைக் காரியாலயங்களும் -

கேகாலை மாவட்டத்தில் ஹெம்மாத்தகம மற்றும் தெடிகம எனும் பெயர்களில் இரு காரியாலயங்களும் அமைக்கப்படவுள்ளன என அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

எம்பிலிபிட்டிய பிரதேசத்தில் 15 கிராமசேவையாளர்கள் பிரிவுகளை உள்ளடக்கி உடவளவை எனும் பெயரிலும் -

இரத்தினபுரி பிரதேசத்தில் 16 கிராம சேவையாளர்கள் பிரிவுகளை உள்ளடக்கி வேவல்வத்த பம்பரகொட்டுவ எனும் பெயரில் இரு புதிய காரியாலயங்களும் -

மாவனல்லை பிரதேசத்தில் 22 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி ஒரு காரியாலயமும்-

அரணாயக்க பிரதேசத்தில் நான்கு கிராமசேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி மற்றுமொரு காரியாலயமும் திறக்கப்படும்.

வரக்காபொலவில் 35 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி தெடிகம எனும் பெயரில் புதிய பிரதேச செயலாளர் காரியாலயம் அமைக்கப்படும்.

இப்புதிய காரியாலயங்களின் நிர்மாணத்துக்கான அமைச் சரவை அங்கீகாரத்துக்கான பிரேரணையை அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச் சர் டபிள்யூ. டீ.ஜே. செனவிரத்ன அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார். (ஸ்ரீ)

# உற்பத்தி செய்த தானியங்களை தீயிட்டு அழித்த விவசாயிகள்

கொழும்பு, செப்.29

தம்புள்ள பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் தாம் உற்பத்தி செய்த தானியங்களைத் தீயிட்டு அழித்த சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது.

குறிப்பாக கௌபி மூடைகள் பெருமளவில் எரிக்கப்பட்டன.

''நாம் பல சிரமங்களுக்கு மத்தியில் உற்பத்தி செய்த கௌபி தானியத்திற்குள் பெருமளவு மூலதனம் முடங்கிக் கிடக் கின்றது. எனினும், இதன் அடிப்படை உற்பத்திச் செலவையேனும் எம்மால் பெற்றுக் கொள்ள முடியவில்லை.'' எனத் தெரிவித்தே அவர்கள் ஆத்திரத்துடன் தானியங்களைத் தீயிலிட்டனர். கௌபி உட்பட்ட தானியவகைகளை இனியும் பாதுகாக்கும் பட்சத்தில் எமக்கு மேலும் செலவுகள் அதிகரிக்கும்.

எனவே, இவ்வாறு எரித்து விடுவதால் இடைத்தரகர்கள் லாபமீட்ட முடியாது போவதுடன் எமக்கு அவற்றைப் பாதுகாக்கும் செலவும் இல்லாமல் போகும் - என விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஸ்ரீ)




# செல்வந்த வீடொன்றில் 23 வருடங்களாக அடிமைகளாக இருந்த இளைஞர் - யுவதி மீட்பு

கொழும்பு,செப்.29

இரண்டு வயதில் தத்தெடுப்பதாகக் கூறிக் கொண்டு செல்லப்பட்டு சுமார் 23, 17 வருடங்களுக்கு மேலாக அடிமைப்பட்டிருந்த யுவதி ஒருவரும் இளைஞர் ஒருவரும் பொலிஸாரால் மீட்கப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட நெஞ்சை உருக்கும் சம்பவம் நேற்றுமுன்தினம் கலகெதர பொலிஸ் நிலையத்தில் நடந்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு:-

அம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த கே.ஜீ.கே.நதிகா (தற்போது வயது - 25) எனும் யுவதியும், கட்டுகஸ்தோட்டையஹல தென்ன பிரதேசத்தைச் சேர்ந்த சம்பத் (தற்போது வயது - 19) ஆகிய இருவரும் இரண்டு வயதாக இருந்த போது கண்டி, மெதவல பிரதேசத்திலுள்ள செல்வந்தக் குடும்பமொன்றால் தத்தெடுக்கப்பட்டனர்.

அன்று தொடக்கம் இருவரும் வெளியுலகத்தைப் பாராமல் செல் வந்த வீட்டில் அடிமைகளாக நடத் தப்பட்டு வந்துள்ளனர். யுவதி வீட்டு வேலைகளிலும், இளைஞர் வீட்டாருக்கு சொந்தமான கற்கு வாரியொன்றிலும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இவர்கள் இருவரும் குறிப்பிட்ட வீட்டில் இம்சைப் படுத்தப் படுகின்றனர் என கலகெதர பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.டி சந்தரபாலவுக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து அவ்வீடு சுற்றி வளைக்கப்பட்டது. அச்சமயம் குறிப்பிட்ட யுவதியும், இளைஞரும் தங்கள் அவல நிலையை பொலிஸாருக்கு எடுத்துக் கூறி தங்களைக் காப்பாற்றுமாறு கதறி அழுதுள்ளனர்.

அவர்கள் இருவரையும் மீட்ட பொலிஸ் குழு வீட்டின் உரிமையாளரான 60 வயதுப் பெண்ணையும், 40 வயதான அவரது மகனையும் கைது செய்துள்ளனர். யுவதியிடமிருந்தும், இளைஞரிடமிருந்தும் திரட்டிய தகவல்களைக் கொண்டு அவர்களது உறவினர்கள் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டனர்.

யுவதிக்கு இரண்டரை வயதான போது அவரது பெற்றோர் வெவ்வேறு விவாகங்களைச் செய்து கொண்டனர். அநாதரவான சிறுமி அவரது பாட்டியிடம் ஒப்படைக்கப்பட்டார்.

வயதான காலத்தில் சிறுமியைப் பராமரிக்க முடியாத பாட்டி அவரை குறிப்பிட்ட வீட்டுக்குத் தத்துக் கொடுத்துள்ளார். அவ்வீட்டிலிருந்து கொண்டு நான்காம் வகுப்பு வரை பாடசாலை சென்ற சிறுமி அதன் பின்னர் வீட்டு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை,குறிப்பிட்ட இளைஞருக்கு இரண்டு வயதான போது இவ்வாறே அவரும் தத்தெடுக்கப்பட்டுள்ளார். பாடசாலையையே கண்டிராத சிறுவன் கடந்த 17 வருடங்களாக வீட்டாருக்குச் சொந்தமான கற்குவாரியில் வேலை செய்ததுடன், வீட்டு வேலைகளிலும் ஈடுபடுத்தப்பட்டார் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இத்தனை ஆண்டுகளாக இவ்விருவரும் செய்த வேலைக்கு எவ்வித சம்பளமும் கொடுக்கப்படவில்லை. அவர்கள் தமது உடைகளைக் காட்போட் பெட்டியொன்றில் வைத்துக் கொண்டே தங்கள் வாழ்க்கையை ஓட்டி வந்துள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

யுவதியின் உடலில் அவர் தாக்கப் பட்டதற்கான தழும்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட தாயையும், மகனையும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கலகெதர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஸ்ரீ)

# இளம்பெண்ணிடம் வல்லுறவு முயற்சி கான்ஸ்டபிள் கைது

கொழும்பு,செப். 29

விசாரணையொன்றை மேற்கொள்ளச் சென்றபோது வீட்டில் தனிமையிலிருந்த இளம்பெண் ஒருவரை வல்லுறவுக்குட்படுத்த முயற்சித்தார் எனக் கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை தவுலகல பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளார் என கண்டி பொலிஸ் நிலைய உயர் அதிகாரி தெரிவித்துள்ளார். கண்டி, தவுலகல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் திருமணமாகாத பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

தவுலகல பொலிஸ் பிரதேசத்திற்குட்பட்ட வீடொன்றில் இடம்பெற்ற குடும்பத் தகராறு குறித்து கடந்த சனிக்கிழமை தவுலகல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இம்முறைப்பாடு தொடர்பாக தவுலகல பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இளம் கான்ஸ்டபிள் அங்கு விசாரணைக்கு சென்ற வேளை வீட்டில் தனிமையி லிருந்த இளம் பெண்ணை வல்லுறவுக் குட்படுத்த முயற்சித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)

# சட்டவிரோதமாக ஆயுதங்கள் வைத்திருப்போரை பகுதி பள்ளிவாசல்களில் ஒப்படைக்க உத்தரவு

## பொறுப்பதிகாரி சிரான் பெரேரா அறிவிப்பு

மட்டக்களப்பு,செப்.29

கல்முனைப் பொலிஸ் நிலையத்துக்குட்பட்ட பிரதேசங்களில் சட்டவிரோதமாக ஆயுதங்கள் வைத்திருப்போரை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பகுதியிலுள்ள பள்ளிவாசல்களில் அவற்றை ஒப்படைத்து விடுமாறு கல்முனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிரான் பெரேரா கோரியுள்ளார்.

கல்முனைப் பொலிஸ் நிலையத்தில் கடந்த 24ஆம் திகதி உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் தலைமையில் கல்முனைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பள்ளிவாசல்களின் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கிணங்கவே அந்த அறிவித்தல் விடுக்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த திகதிக்கு முன்னர் சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்கத் தவறுவோருக்கு எதிராக அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோத துப்பாக்கிகளை வைத்திருந்தனர் எனக் குற்றம் சுமத்தப்படும், குற்றத்தைப் புரியும் ஒருவர் 20வருட கடூழியச் சிறைத் தண்டனைக்கு ஆளாக வேண்டிவரும் எனவும் கல்முனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தாம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ)

# பிரதிப் பொலிஸ் மா அதிபர் கல்முனையில் இரத்ததானம்

அம்பாறை, செப்.29

அம்பாறை மாவட்ட வரலாற்றில் முதல்முறையாகப் பிரதிப் பொலிஸ் மா அதிபரொருவர் பொது நிகழ்வொன்றில் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கிய நிகழ்வு கடந்த சனிக்கிழமை பெரியநீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட வடக்குப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரஞ்சித் வீரசூரியவே இவ்வாறு இரத்ததானம் வழங்கியவராவார்.

கல்முனைப் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் வடக்குப் பிரதேச மக்களுக்கான பொலிஸ் நடமாடும் சேவை சனிக்கிழமை பெரிய நீலாவணை புலவர்மணி ஷரிபுத்தீன் விதியாலயத்தில் நடைபெற்றது.

இதில் விசேட அதிதியாகக் கலந்துகொண்ட ரஞ்சித் வீரசூரிய இரத்ததானம் வழங்கினார். (ஸ்ரீ)

# சிறிய - நடுத்தர கைத்தொழில்களுக்கு ஏற்றுமதி அபிவிருத்திச் சபை பயிற்சிகள்

சம்மாந்துறை, செப்.29

கிழக்கு மாகாணத்தில் சிறிய, நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்காக இலவச பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தீர்மானித்துள்ளது.

இப்பயிற்சி வேலைத்திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் வாரமளவில் நடத்தப்படும்.

பயிற்சிபெற விரும்புபவர்கள் அம்பாறை மாவட்டத் திலுள்ள கிழக்கு மாகாண ஏற்றுமதி அபிவிருத்திச் சபையிலிருந்து மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அதன் உதவிப் பணிப்பாளர் மனோஜ் விபுலேவலதெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

# அம்பாறை நகர மண்டபத்தில் இளைஞர் விருது வழங்கல் விழா

அம்பாறை, செப்.29

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை மாவட்ட இளைஞர் விருது வழங்கல் விழா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி அம்பாறை நகர மண்டபத்தில் நடைபெறும்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் நாயகமும், தலைவருமான சட்டத்தரணி லலித் பியூம் பெரேராவின் ஆலோசனைக்கு இணங்க இதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

அம்பாறை மாவட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இளைஞர், யுவதிகள் இதில் விருது வழங்கிக் கௌரவிக்கப்படுவர் என அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் எல்.ஜி. நந்தலதா தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களான பி.தயாரத்ன, ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், மாவட்ட அரச அதிபர் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொள்வர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ)

# தேசிய மட்டத்தில் அல்மனார் மாணவர் முதலாம் இடம்

அம்பாறை, செப்.29

கல்வி அமைச்சு நடத்திய அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்க ஆறாம் பிரிவுப் போட்டியில் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி மாணவர் எம்.ஆர். எம்.அதீர், தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

நீர்கொழும்பு லோயலா கல்லூரி மண்டபத்தில் கடந்த வாரம் இப்போட்டி நடைபெற்றது.

தரம் - 9இல் கல்வி பயிலும் இம்மாணவரையும், பயிற்சி வழங்கிய உடற்கல்வி ஆசிரியர் களையும் அதிபர் டாக்டர் எஸ்.எம். எம்.எஸ்.உமர் மௌலானா வெகுவாகப் பாராட்டி வாழ்த்தியுள்ளார்.




# இறால் குழிப் பகுதியில் காட்டு யானைகள் அட்டகாசம்

திருகோணமலை, செப்.29

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்திலுள்ள இறால்குழிப் பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளன எனப் பகுதி தமிழ் மக்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

இந்தப் பகுதியில் வாழ்ந்து வரும் மக்களுக்கு காட்டு யானைகள் தொடர்ந்து தொல்லை கொடுக்கின்றன. சம்பந்தப்பட்ட வர்கள் இதை அறிந்திருந்தும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அவர்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

எனவே, இனிமேலாவது சம்பந்தப்பட்டவர்கள் இதற்குத் தீர்வு [illegible] அவர்கள் கோரியுள்ளனர். (ஸ்ரீ)

# வாழைச்சேனை வைத்தியசாலையில் ஊழியர்களுக்கு முதலுதவிப் பயிற்சி

மட்டக்களப்பு, செப்.29

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்புக் கிளையின் ஆதரவில் வாழைச்சேனை வைத்தியசாலை ஊழியர்களுக்கு கடந்த சனிக்கிழமை முதலுதவிப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க மட்டக்களப்பு கிளைத் தலைவர் த.வசந்தராஜா, வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி நிமால் அருமைநாயகம், மேற்படி சங்க நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

சங்கத்தின் பயிற்றுவிப்பாளர்களான ஏ.சோமசுந்தரம், வி.ஜீவரெத்தினம் ஆகியோர் பயிற்சி நெறியை நடத்தினர். பயிற்சி முடிவில் பயிலுநர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ஸ்ரீ)

# ஆசிரியர் தினத்தை முன்னிட்டு திருமலைப் பாடசாலைகளில் விசேட நிகழ்ச்சி

திருகோணமலை, செப்.29

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், திருகோணமலை, ஈச்சிலம்பற்று, தம்பலகாமம் ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் எதிர்வரும் ஒக்டோபர் 6ஆம் திகதி உலக ஆசிரியர் தினம் அனுஷ்டிக்கப்படும்.

கட்டுரை, கவிதை, சிறுகதை, பேச்சு, தனிநடிப்பு, நாடகம் ஆகியவை உள்ளிட்ட பல போட்டிகள் இத்தினத்தில் நடைபெறும். ஆசிரியர் சேவை பாராட்டுதல் திறமைகளுக்கான பரிசில், சான்றிதழ் வழங்கல் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறும். (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகில் பெரும் சவாலாக மாறிவரும் விலங்கு விசர் நோய்

**உலக விலங்கு விசர் நோய் தினம் நேற்று 28ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

இந்நோயினை விலங்கு விசர் நோய் இறேபிஸ் நோய், நீர் வெறுப்பு நோய் என பல பெயர் களில் அழைப்பர்.

உலகளாவிய ரீதியில் வருடம் ஒன்றிற்கு ஆசியாவில் 31000 பேரும், ஆபிரிக்காவில் 24000 பேருமாக மொத்தம் 55,000 பேர் இறக்கின்றனர். மணிக்கு 2000 பேர் நாயினால் கடியுறுகின்றனர். (அட்டவணை 1ஐப் பார்க்கவும்)

இலங்கையில் இறப்பு அட்டவணை் 1

| ஆண்டு | இலங்கை இறப்பு | யாழ்ப்பாணத்தில் இறப்பு |
|---|---|---|
| 2007 | 56 | 01 |
| 2008 | 51 | 00 |
| 2009 | 58 | 02 |
| 2010 இன்று வரை | 28 | 01 |

யாழ்மாவட்டத்தில் வருடமொன்றுக்கு நாயினால் கடியுறுவோர் தொகை சராசரியாக 12,000 தொடக்கம் 13,000பேராகும்.

எமது நாட்டினைப் பொறுத்தவரையில் இந்நோயினால் சராசரியாக ஆண்டு ஒன்றிற்கு 56 தொடக்கம் 60 பேர் வரை இறக்கின்றனர். அதுமட்டுமன்றி மருத்துவத் துறையில் மருந்துகளுக்கு செலவு செய்யும் தொகையில் இந்நோய்க்கு பாவிக்கப்படும் மருந்துச் செலவு இரண்டாம் இடத்தைப் பிடிக்கின்றது.

அத்துடன் பால் வேறுபாடின்றி சிறியோர் தொடக்கம் முதியோர் வரை இந்நோய்க்கு இலக்காகின்றனர். வருடம் தோறும் பரவலாக இந்நோய் ஏற்படுவதனால் இவற்றினைக்கட்டுப்படுத்த சுகாதாரப் பகுதியினர் தொடர்ந்து கண் காணிப்பில் இருக்கவேண்டியுள்ளது (Epidemjioloeical Surveillance). அல்லாமல் மக்களின் ஒன்றிணைந்த செயற்பாடும் அவசியமாகின்றது. (அட்டவணை 2ஐப் பார்க்கவும்)

மனிதருக்கு ஏற்படும் ஏனைய நோய்களைவிட இது மிகவும் ஆபத்தானது. இந்நோய் ஏற்பட்டால் நிச்சயம் மரணம் மட்டுமன்றி நோயாளிகள் இறக்கும் போது அணு அணுவாக சித்திரவதை உபாதையில் இறக்கின்றனர்.

**விசர்நாய்க்கடி நோய் என்பது**

பெரும்பாலும் காட்டு விலங்குகளில் காணப்படும் இந்நோய் வளர்ப்புப் பிராணிகளுக்கு கடத்தப்பட்டு அதன் மூலமாக மனிதருக்கு நோய்த்தொற்று ஏற்படுகின்றது. அதிகமாக நாய்கள் மூலமாகவும் அரிதாக பூனை, குரங்கு, கீரி, வெளவால், நரி போன்ற பாலூட்டும் பிராணிகளினாலும் மரணத்தையும் ஏற்படுத்துகின்றது.

**வைரஸ்**

Rhabdo வைரஸ் எனப்படும் ஒருவகை வைரஸ் கிருமியால் இந்நோய் ஏற்படுத்தப்படுகிறது.


**தொற்று ஏற்படுவது எப்படி?**

நோய்வாய்ப்பட்ட பிராணி மனிதரை (நோய் அறிகுறி வெளிக்காட்டாமலும் இருக்கலாம்) கடிக்கும் பொழுது அதன் எச்சில் அல்லது உமிழ்நீர் உடலில் மென்சவ்வுப் பிரதேசங்களில் அல்லது காயங்களில் பட்டால் நோய் பரப்பும் வைரஸ் உடம்பினுள் சென்று நோயை ஏற்படுத்தி நரம்புத் தொகுதியைத் தாக்கி மரணத்தை ஏற்படுத்துகின்றது.(படம் 1ஐப் பார்க்கவும்)

மனிதனில் இருந்து மனிதனுக்கு பரவுவது மிகவும் அரிது. (உறுப்பு மாற்ற சத்திர சிகிச்சை மூலம்)

**நோயரும்பு காலம்:**

1-3 மாதம். கடியின் தன்மையையும் கடிக்கப்பட்ட இடத்தினையும் பொறுத்து சிலவேளைகளில் இரண்டு வருடங்களும் செல்லலாம்.




## உரிய நேரத்தில் சிகிச்சைகளைப் பெற்றால் அதிலிருந்து தப்பிக் கொள்ள முடியும்

**விலங்கு விசர் நோய்க்கான ஆபத்தும் கடியின் தன்மையும்**

**ஆபத்துக்கூடிய நிலமைகள்:**

* தலை, முகம், கழுத்தில் கடி
* முதுகு அல்லது மார்பில் கடி
* பாலுறுப்புகளில் கடி
* ஒன்றிற்கு மேற்பட்ட
* உடலின் எப்பாகத்திலேனும் ஆழமான கடி
* மென்சவ்வு பிரதேசத்தில் நக்குதல் (கண், மூக்கு, உதடு)
* காட்டு விலங்குகளின் கடி
* கடித்த விலங்கை கண்டு பிடிக்க அல்லது அவதானிக்க முடியாத நிலை
* தொடர்சியாக 03 ஆண்டு கள் தடுப்பு மருந்தால் (ARV)பாதுகாக்கப்படாத விலங்குகளால் கடியுண்டால்
* கடித்த இரண்டு வாரங்களினுள் மாறுபாடான நடத்தையை விலங்கு காட்டுதல்.
* எந்தத் தூண்டலுமின்றி விலங்கு பலரைக் கடித்திருந்தால்.
* கடித்ததைத் தொடர்ந்து 14 நாள்களினுள் விலங்கு இறந்திருந்தால் அல்லது சுகவீனமுற்றிருத்தல்.



**ஆபத்து குறைவான நிலைமைகள்:**

* ஆரோக்கியமான வளர்ப்பு விலங்கு (தடுப்பு மருந்து ஏற்றப்படாவிட்டாலும் அவதானிக்கக் கூடிய விலங்கு)
* அறிந்த குணங் குறிகளற்ற விலங்கு கள்
* கடிக்கும் போது சுகவீன முற்றிருந்தாலும் ஒழுங்காக மூன்று வருடங்கள் தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட விலங்கு

**தடுப்பூசிக்கான நிபந்தனைகள்:**

ஆபத்து கூடிய நிலைமைகளின் போது உடனடியாக உரிய முதலுதவி செய்த பின் வைத்திய ஆலோசனையைப் பெற்று உரிய தடுப்பு மருந்தகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஆபத்துக் குறைவான நிலைமைகளின் போது உரிய முதலுதவியுடனும் வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதுடன் விலங்குகளை 14 நாள்கள் அவதானித்து மாறுபாடான அறிகுறிகள் தென்பட்டால் அல்லது சுகவீனமுற்றிருந்தால் உடனடியாக உரிய தடுப்பு மருந்துகள் பெற்றுக் கொள்ள வேண்டும்.


வி.கே.வருணநாதன்
சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர்
விலங்கு விசர்நோய் கட்டுப்பாட்டுப் பகுதிபிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணம்.


**மனிதரில் விலங்கு விசர் நோய் அறிகுறிகள்**

* அதிக காய்ச்சல்
* கண்களை மூடமுடியாத நிலை
* அதிகரித்த உமிழ்நீர் வெளியேற்றம்
* மூச்சுத் திணறுதல்
* காற்றை எதிர் கொள்ள முடியாத நிலை
* நீரை விழுங்க முடியாத நிலை
* தொடர்பற்ற செயற்பாடுகள்
* கோபமடைதல்
* தொண்டைப்பகுதியில் இறுக்கமடைதல்
* நரம்புத் தொகுதி செயலிழப்பதனால் மரணம் சம்பவிக்கும்.

**விலங்கினால் கடியுண்டால் செய்யவேண்டிய முதலுதவி:**

1) காயத்தை நீருற்றி 15 நிமிடங்கள் கழுவுதல்.

2) பின்னர் சவர்க்காரமிட்டு கழுவுதல்.

3) தொற்று நீக்கியைப் பாவித்துத் துடைத்தல்.

4) வைத்தியசாலைக்குச் செல்லும் போது கடித்த நாயின் ARV துண்டை (ARV Card) எடுத்துச் செல்லவும் (இருக்குமாயின்).

5) தெரு நாய்கள் அல்லது அவதானிக்க முடியாத நாய்கள் மற்றும் ஏனைய காட்டு விலங்குகளினால் கடியுண்டால் வைத்தியரின் ஆலோசனையுடன் ARV போடப்படல் வேண்டும்.

நாய்க்கடியின் பின்னால் தடுப்பு மருந்து வைத்தியரின் ஆலோசனையுடன்

**POST EXPOSURE**

* தசையினுள் அல்லது தோலின் கீழ் ARV போடப்படுகிறது.




* கடுமையான காயம் எனில் ARV போட வேண்டும்.
* ஏற்புத்தடை மருந்து தேவைப் படின் போடப்படல் வேண்டும்.
* கர்ப்பம் தரித்தவர்களும் ARV போடலாம்.
* வீட்டு எலி கடித்தால் ARV போடப்படவேண்டியது அவசியமல்ல ஆனால் மூஞ்சுறு, அகிளான் கடித்தால் ARV போடப்படவேண்டியது முக்கியமாகும்.

ARV தடை ஊசி ஏற்றப்பட்டோர் விவரம்: அட்டவணை 2

| | 2007 | 2008 | 2009 | 2010 இன்று வரை |
|---|---|---|---|---|
| ARV(Human ARV) | 9464 | 7264 | 6897 | 8411 |

1) ஒதுங்கியிருக்கும் தன்மையுள்ள விலங்கு விசர் நோய்:

* தொண்டையில் ஏதோ சிக்கியது போல் அவஸ்தைப்படும்.
* இருளான இடங்களில் மறைவாக இருக்கும்.
* உணவு, நீர் அருந்த மறுக்கும்.
* தொடைகள் பலமற்றவையாக தோற்றமளிக்கும்.

2) கடும் கோபம் கொண்ட விலங்கு விசர் நோய்:

* உரத்த குரலில் குரைக்கும்
* வழக்கத்திற்கு மாறான நடவடிக்கைகள் காணப்படும்.
* எல்லாப் பொருள்களையும் கடிக்கும்.
* கண் சிவந்து விசாலமாக இருக்கும்.
* வாயில் உமிழ் நீர் வழிந்தோடும்.
* வருவோர் போவோரைக் கடிக்கும்.
* தொடைகள் பலவீனமாகக் காணப்படும்.
* வால் கீழ் நோக்கி வளைந்திருக்கும்.

தேவையற்ற தெருநாய்களின் பெருக்கத்தைக்குறைப் பதற்காக வளர்ப்பு நாய்களுக்கும் தெரு நாய்களுக்கும் இலவச கருத்தடை சத்திரசிகிச்சை சுகாதாரத் திணைக்களத்தினால் செய்யப்பட்டு வருகிறது. (அட்டவணை 3ஐப் பார்க்கவும்)

அட்டவணை 3

| ஆண்டு | 2007 | 2008 | 2009 | 2010 இன்று வரை |
|---|---|---|---|---|
| ஆண் | | 332 | 989 | 108 |
| பெண் | | 146 | 470 | 3102 |

இத்திட்டத்தினால் தேவையற்ற நாய்களை அழிப்பதைவிட கூடுதலான தெரு நாய்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ளுவதோடு நாய்களின் பெருக்கத்தையும் குறைத்துக் கொள்ளலாம். இத்திட்டத்திற்கு பொது மக்களின் பங்களிப்பும் பொருத்தமான திணைக்களங்களும் ஒன்றிணைந்து செயற்படுத்தப்பட வேண்டும். தங்கள் பகுதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் தொடர்பு கொண்டு சத்திர சிகிற்சையினை இலவசமாகச் செய்யலாம். இதற்காக சுகாதாரத் திணைக்களம் நாய் ஒன்றிற்கு ரூபா 850 இனைச் செலவிடுகின்றது.

**கருத்தடை ஊசி (Depo Injection)**

இவ்வூசி நாய்களின் பெருக்கத்தைத் குறைப்பதற்காக வளர்ப்பு பெண் நாய்களுக்கு 06 மாதத்திற்கு ஒரு முறை இலவசமாகப் போடப்பட்டு வருகின்றது. (அட்டவணை 4ஐப் பார்க்கவும்)

அட்டவணை 4

| ஆண்டு | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|
| முதல் மருந்து (First Dose) | | 741 | 1638 | 984 |
| இரண்டாம் மருந்து (Second Dose) | | 109 | 336 | 163 |

இதற்காக சுகாதாரத் திணைக்களம் நாய் ஒன்றிற்கு மருந்துச் செலவாக ரூபா 75 இனைச் செலவு செய்கின்றது.

**வளர்ப்பு நாய்களுக்கான ARV தடை ஊசிஏற்றல்:**

சகல வளர்ப்பு நாய்களில் 90% நாய்களுக்கு ARV தடுப்பு ஊசி இலவசமாக ஏற்றுவதனால் நோயைப் பரப்பும் வைரஸ் சூழலில் பரவ முடியாமல் போகின்றது. இதனால் மக்கள் பாதுகாக்கப்படுகின்றனர். இதற்கான மருந்துச் செலவு ஒரு நாய்க்கு போடுவதற்கு ருபா 200 வரை செலவு செய்யப்படுகின்றது.

வருடந்தோறும் ARV போடுவதனால் வளர்ப்பு நாய்கள் இறப்பதில்லை. ஏற்கனவே வைரஸ் தொற்றுள்ள( இது மனிதருக்கு ஆபத்தானது) நாய் நோயை வெளிக்காட்டாமல் வைத்திருக்கும். இதற்கு ARV போடும் போது சில பகுதிகளில் மட்டும் ஒரு சில நாய்கள் இறக்க நேரிடலாம். இதனைத் தவிர்க்க முடியாது. எனவே வளர்ப்போர் ஒவ்வொருவரும் தமது வளர்ப்பு நாய்களுக்குத் தவறாது ARV போடுவதனால் மக்களையும் விலங்குகளையும் நோயிலிருந்து பாதுகாக்கக் கூடியதாக இருக்கிறது.

**விலங்கு விசர்நோய் தடுப்புச் செயற்பாட்டில் பின்னடைவை ஏற்படுத்துகின்ற காரணிகள்:**

ARV விவரம் அட்டவணை 5

| ஆண்டு | 2007 | 2008 | 2009 | 2010 இன்று வரை |
|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 59176 | 46769 | 47449 | 48110 |

ARV விவரம் இலங்கை அட்டவணை 6

| ஆண்டு | 2007 | 2008 | 2009 | 2010 இன்று வரை |
|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 1042726 | 1152802 | 1189157 | 4600896 |

1) இந்நோய் சார்பான சரியான விழிப்புணர்வு இல்லாமையினால் நோயாளிகள் அரச வைத்தியசாலையினை நாடுவதில்லை.

2) நோயாளிகள் சிகிச்சைக்காக வருகின்ற போதிலும் முழுமையான சிகிச்சையினைப் பெறுவதில்லை.

**சட்டவாக்கம்**

உள்ளுராட்சி மன்றங்களின் இவை சார்பான சட்டங்களுக்கு மதிப்பளித்து தவறாது பதிவு செய்து அவர்களுடன் ஒன்றிணைந்து அவர்களின் ஆலோசனைகளையும் அறிவுறுத்தல் களையும் தவறாது கடைப்பிடிப்போமாக.

ஒன்றிணைந்த செயற்பாட்டின் கீழ் 2012ல் விலங்கு விசர் நோயற்ற யாழ்ப்பாணத்தை உருவாக்குவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு எதிராகப் பாகிஸ்தானுக்கு ஆயுதம் வழங்குவதை அமெ. விரும்பவில்லை

## சர்தாரியிடம் ஒபாமா தெரிவிப்பு

வாஷிங்டன், செப். 29



''இந்தியாவுக்கு எதிராகப் பாகிஸ்தானுக்கு ஆயுதம் வழங்குவதை அமெரிக்கா விரும்பவில்லை'' என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரியிடம் உறுதியுடன் கூறினார் என 'ஒபாமா'ஸ் வோர்' என்ற புத்தகத்தில் அதன் ஆசிரியர் எழுதியுள்ளார்.

அமெரிக்கப் புலனாய்வு எழுத்தாளரான பாப் உட்வேர்ட் சமீபத்தில், அமெரிக்கா மேற்கொண்ட சமீபத்திய போர்களைப் பற்றி, 'ஒபாமா'ஸ் வோர்' என்ற புத்தகம் எழுதி வெளியிட்டுள்ளார்.

மொத்தம் 417 பக்கங்கள் கொண்ட இப்புத்தகத்தில், பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரியை ஒபாமா சந்தித்த போது நடந்த உரையாடல்களைப் பதிவுசெய்துள்ளார்.

அதில், பாகிஸ்தான் இந்தியாவை தன் பரம எதிரியாகக் கருதுவதால்தான், தீவிர வாதிகளை கடல் வழியாக மும்பையைத் தாக்க அனுப்பியது என உட்வேர்ட் தெரிவித்துள்ளார்.

அவர் எழுதியிருப்பவை வருமாறு:-

கடந்த 2009, மே 7ஆம் திகதி சர்தாரி ஒபாமாவைச் சந்தித்த போது அவரிடம், ''இந்தியாவுக்கு எதிராக உங்களுக்கு ஆயு தம் வழங்குவதை நாங்கள் விரும்பவில்லை'' என்று ஒபாமா கூறினார்.

அதற்குப் பதிலளித்த சர்தாரி, ''உலகத்தைப் பற்றிய எங்கள் பார்வையை நாங்கள் மாற்ற முயல்கிறோம். ஆனால், அந்த மாற்றம் ஒரே இரவில் நடக்காது'' என்றார்.

அந்த விவாதம் நடந்து கொண்டிருந்தபோது, ''அமெரிக்கா இந்தியாவுடன் நட்புறவு கொண்டிருக்கும் வேளையில் அது ஆப்கனில் தலையிட்டிருப்பது குறித்து பாகிஸ்தான் மிகவும் கவலைப்படுகிறது'' என்று அன்றைய அமெரிக்க புலனாய் வுத்துறை இயக்குநர் டென்னிஸ் பிளேர், ஒபாமாவிடம் கூறியுள்ளார்.

உடனே, அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜோ பிடென், ''பாகிஸ்தானுடனான நமது உறவில் அடிப்படையிலேயே முரண்பாடு உள்ளது. இந்திய ஆதரவு மனப்பான்மை கொண்ட ஹமீத் கர்சாய் போன்ற பஸ்தூன் இனத்தவர் தலைமையில் ஆப் கனில் அரசு அமைவதை பாக். விரும்பாது.

அதனால்தான், தலிபான்களைத் தனக்கு வேலியாக இருப்பதற்காக பாக். ஆதரவளித்தது. ஆனால், ஆப்கனில் தலிபான்களை ஒழித்துக் கட்டிவிட்டு அங்கு கர்சாய் தலைமையிலான அரசை உறுதிப்படுத்துவதுதான் நம் கொள்கை'' என்றார்.



அதே ஆண்டு, ஒக்ரோபர் 7ஆம் திகதி புலனாய்வு உயரதிகாரிகளுடன் ஒபாமா நடத்திய கூட்டத்தில், ''பாகிஸ்தான், இந்தியா இடையே நிலையான உறவு அமையும் வரை, ஆப்கனில் நிலையான அரசு சாத்தியமில்லை.

இருநாடுகளுக்குமிடையிலான பதற்றத் தைக் குறைப்பதற்கு நாம் முயல வேண்டும். நிலையான பாகிஸ்தான் அமைவது குறித்து இந்தியாவுடன் நாம் ஏன் பேச்சு நடத்தக் கூடாது? உலகின் முக்கிய இடத்துக்கு இந்தியா வளர்ந்துவரும் நிலையில், நிலையான பாகிஸ்தான் அதற்கு உதவும்'' என்று ஒபாமா கூறினார்.

இவ்வாறு பாப் உட்வேர்ட் தன் புத்தகத் தில் எழுதியுள்ளார். (சி)

# இந்திய இளைஞர் மீது ஆஸ்திரேலியாவில் தாக்குதல்

மெல்போர்ன், செப்.29

ஆஸ்திரேலியாவில் இந்திய இளைஞர் மீது இனவெறியர்கள் தாக்குதல் நடத்தி யுள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் ஒரு இலட்சம் இந்திய மாணவர்கள் படிக்கின்றனர். இவர்களில் பலர், பகுதி நேரமாக ஹோட்டல்கள், பெற்றோல் பங்குகளிலும், கார்ச் சாரதியாகவும் வேலை பார்க்கின்றனர்.

பகுதி நேர வேலையை முடித்து நள்ளிரவில் வீடு திரும்பும் இந்தியர்கள் மீது கடந்த ஓராண்டாகத் தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. இதற்கு மத்திய அரசு சார்பில் கண்டனம் தெரிவிக்கப் பட்டது. ஆஸ்திரேலிய வன்முறையாளர்களின் தாக்குதலில் சிலர் பலியாகியுள்ளனர்.

இந்நிலையில், மெல்போர்னிலுள்ள சேண்டவுன் பார்க் ரயில் நிலையத்தில் சென்றுகொண்டிருந்த 21 வயது இந்திய இளைஞரை, 15 வயதுடைய நபர்கள் சூழ்ந்து கொண்டு பேஸ்பால் மட்டையால் அடித்துள்ளனர்.

நீ இந்தியனா எனக் கேட்டுள்ளனர். கீழே விழுந்து கிடந்த இந்த இளைஞரை வழிபோக்கர்கள் இரண்டு பேர், வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். இந்த இளைஞனருக்கு மூக்கில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஸ்பிரங்வேல் என்ற இடத்தில் 39 வயது இந்தியர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ''இந்த தாக்குதல் இனவெறியோடு நடந்ததா என்பது தெரியவில்லை'' எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சி)

# அமெரிக்கர்களில் ஏழில் ஒருவர் வறுமையில் வாடுவதாகத் தகவல்

வாஷிங்டன், செப். 29

''அமெரிக்கர்களில் ஏழில் ஒருவர் வறுமையில் வாடுகிறார்'' என அந்நாட்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பு அலுவலகம் வெளியிட்ட புள்ளி விவரத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

உலகின் பணக்கார நாடாக அமெரிக்கா கருதப்படுகிறது. அங்கு சமீபத்தில் நடத்தப் பட்ட கணக்கெடுப்பில், 14.3 சதவீத ம்க்கள் வறுமையில் வாழ்வதாகவும், இது 2008 இல் இருந்த அளவான 13.2 சதவீதத்தை விட அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப் பட்ட புள்ளி விவரம் வருமாறு:-

சமீபத்திய கணக்கெடுப்பின் படி, அமெ ரிக்காவில் 4.36 கோடி மக்கள் வறுமையில் வாழ்கின்றனர். அதாவது, ஏழில் ஒரு அமெரிக்கர் வறுமையில் வாடுகிறார். கடந்த 2008 இல் நடந்த கணக்கெடுப்பில் 3.98 கோடி பேர் வறுமையில் வாழ்ந்தனர்.

தற்போது எண்ணிக்கை உயர்ந்துள்ளது. ஒபாமா ஜனாதிபதியாகப் பதவியேற்ற காலகட்டத்தில், பொருளாதார நெருக்கடி காரணமாக, மாதந்தோறும் 7 இலட்சம் பேர் வேலை இழந்தனர்.

இவர்களில் பெரும்பான்மையோர் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இதனால், அவர்கள் தங்கள் வீடுகளை விற்றுவிட்டு, கூடாரங்கள் அமைத்து தங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறு புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

உலக அரங்கில்

# 30 ஆயிரம் கணனிகளை முடக்கியது 'ஸ்டக்ஸ் நெற்'

## ஈரான் தொழில்நுட்பத்துறையில் பரபரப்பு

தெஹ்ரான், செப். 29

ஈரானில் 'ஸ்டக்ஸ்நெற்' எனும் வைரஸால் தொழிற்துறையில் பயன்படுத்தப்பட்டு வந்த 30 ஆயிரம் கணினிகள் திடீரென பழுதாகி நின்று போனதால் தகவல் தொழில் நுட்பத்துறையில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஆனாலும் முக்கிய அணு உலையான புஷ்ஹிஹர் எந்தவிதப் பாதிப்பும் ஏற்பட வில்லை என அரசு தெரிவித்துள்ளது.

ஈரானில் முக்கிய தொழிற்சாலைகள், அணு உலைகள் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், நீர்விநியோக மேலாண்மை மையங்கள் ஆகியவை உள்ளிட்ட நிறுவனங்களில் பெருமளவு கணினிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இவற்றில் திடீரென 'ஸ்டக்ஸ்நெற்' வைரஸ் பரவியுள்ளதையடுத்து அனைத்துத் துறைகளில் உள்ள சாப்ட்வேர்கள் முடங்கிப் போனது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஈரான் தகவல் தொடர்புத்துறை சபைத் தலைவர் முகமது லியாயி ஈரான் டெய்லி எனும் பத்திரிகைக்கு பேட்டியளிக்கையில் கூறியவை வருமாறு:-

'ஸ்டக்ஸ்நெற்' வைரஸ் பரவிவருவதை கடந்த ஜூன் மாதமே நாங்கள் கண்டுபிடித்து விட்டோம், தற்போது தொழிற்துறையில் மட்டுமே இதன் பாதிப்பு உள்ளது.

எனினும் அணுஉலைகள் பாதுகாப்பாக உள்ளன. இதனை ஜெர்மனைச் சேர்ந்த ரால்ஃப் லாங்ஜர் எனும் கணினி பாதுகாப்பு ஆராய்ச்சியாளர் தெரிவித்தார். ஆதலால் நாட்டின் முக்கிய அணு உலையான புஷ்ஹிஹர் அணு மின்நிலையம் எந்த பாதிப்பும் அடையவில்லை என்றார்.

# சர்வதேச விவகாரங்களில் ஒத்துழைப்பு; ரஷ்யாவும் சீனாவும் முக்கிய ஒப்பந்தம்

பீஜிங், செப். 29

பிராந்திய, சர்வதேச விவகாரங்களில் ஒத்துழைப்பை வலுப்படுத்த ரஷ்யாவும், சீனாவும் ஒப்பந்தம் செய்து கொண்டுள் ளன.

பீஜிங்கில் கடந்த திங்கட்கிழமை ரஷ்ய ஜனாதிபதி திமித்ரி மெத்வதேவும், சீன ஜனாதிபதி ஹூ ஜிந்தாவோவும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

ஜி-20, ஷாங்காய் ஒத்துழைப்பு, பிரிக் ஆகிய அமைப்புகளின் விதி முறைகளைக் கடைப்பிடிப்பதில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் இரு நாடுகளும் உடன்பாட்டை மேற்கொண்டுள்ளன.

இதுதவிர, வர்த்தகம், பொருளாதாரம், பயங்கரவாத எதிர்ப்பு, பிரிவினைவாத எதிர்ப்பு, அணு சக்தி, வங்கி, நிதி, கல்வி, மருத்துவம், கலாசாரம், விளையாட்டு, ஊடகம், சுற்றுலா உள்ளிட்ட துறைகளில் உறவை மேலும் விரிவுபடுத்திக் கொள்வது என இரு தலைவர்களும் முடிவெடுத்தனர்.

இரு நாடுகளுக்கிடையே 999 கிலோ மீற்றர் தூர எரிவாயு குழாய்த் திட்டத்தை அமைப்பதற்கான ஒப்பந்தம் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் திட்டப்பணி தாமதம் அடைந்து வருகிறது. இந்தத் திட்டப் பணியைவிரைந்து நிறைவேற்றுவது என இரு தலைவர்களும் முடிவெடுத்தனர்.

மெத்வதேவும், ஹூ ஜிந்தாவோவும் பீஜிங்கில் சந்தித்துப் பேசிய பின்னர், இரண்டாம் உலகப் போரின் 65ஆம் ஆண்டு நிறைவு விழா அறிக்கையை வெளியிட்டனர்.

அதில் கூறியிருப்பவை வருமாறு:- ரஷ்யாவுக்கும், சீனாவுக்குமிடையே நெருங்கிய தொடர்புண்டு. இரு நாடுகளுக்கு இடையே நீண்டகாலமாக அனைத்துவிதத்திலும் நட்புறவு நீடித்து வருகிறது.

இதை இரு நாடுகளும் மேலும் வலுப் படுத்திக் கொள்ள விரும்புகின்றன. இதைக் கருத்தில் கொண்டே பல்வேறு உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

இந்நிலையில் வர்த்தகம் தொடர்பாகக் கையெழுத்தாகியுள்ள ஒப்பந்தங்கள் இரு நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகத்தை அளிக்கும். இந்த ஒப்பந்தங்கள் மூலம் இரு நாடுகளின் உறவில் புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளது என நினைக்கிறோம்.

இதற்குத் தங்களால் இயன்ற அளவு இரு நாடுகளும் ஒத்துழைப்பை நல்கி வருகின்றன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)



சீனாவின் பீஜிங்கில் கடந்த திங்கட்கிழமை அந்நாட்டு அரசு சார்பில் அளிக்கப்பட்ட இராணுவ மரியாதையை ஏற்றுக் கொள்கிறார் ரஷ்ய அதிபர் திமித்ரி மெத்வதேவ். அருகில் சீன அதிபர் ஹூ ஜிந்தாவோ.

# அமெரிக்கா ஏவுகணை தாக்குதல்: பாகிஸ்தானில் 12 தீவிரவாதிகள் சாவு

இஸ்லாமாபாத், செப். 29

பாகிஸ்தானில் பழங்குடியினர் அதிகம் வசிக்கும் வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் அமெரிக்கப் படை கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடர் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது.

இதில் 12 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

தீவிரவாதிகளுடனான மோதலில் அமெரிக்க வீரர்கள் சிலரும் இருந்திருக்க வாய்ப்புள்ளது எனத் தெரியவந்துள்ளது. ஆனால், இது குறித்து அமெரிக்கப் படை அதிகாரபூர்வ தகவல் ஏதும் தெரிவிக்கவில்லை.

லோவர் மந்தாய் பகுதியில் மூன்று ஏவுகணைகள் சீறிச் சென்று லொறிமீதும், தீவிரவாதிகள் பதுங்கியிருந்த வீட்டின் மீதும் தாக்கின. இதில் வீடு இடிந்து தரை மட்டமாகியது. அதில் பதுங்கியிருந்த தீவிர வாதிகள் 4 பேர் கொல்லப்பட்டனர்.

தந்த் காளி பகுதியில் சீறிச் சென்ற இரு ஏவுகணைகள் ஜீப் ஒன்றை தாக்கியது. இதில் தீவிர வாதிகள் 5 பேர் கொல்லப்பட்டனர். அதேபோல, ஷெரணி பகுதியில் கார் ஒன்றை குறிவைத்து அமெரிக்கப் படை நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 3 தீவிர வாதிகள் கொல்லப்பட்டனர்.

பயங்கரவாதிகள் ஆதிக்கம் நிறைந்த வடக்கு வசிரிஸ்தான் பகுதியில் அவர்களின் கொட்டத்தை ஒடுக்க அமெரிக்கப் படை கடந்த சில மாதங்களாக கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்பகுதியில் விமானத் தாக்குதலையும், ஏவுகணைத் தாக்குதலையும் மாறி மாறி நடத்தி வருகிறது. இந்த மாதம் மட்டும் இதுவரை 19 ஏவுகணைத் தாக்குதல் நிகழ்த்தியுள்ளது.

பாகிஸ்தானின் ஸ்வாத் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினருக்கும், தீவிரவாதிகளுக்குமிடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் தேடப்பட்டு வந்த இரு முக்கிய தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

தீவிரவாதிகள் பொலிஸ் சோதனைச் சாவடி வழியே தப்பிக்க முயன்றபோது அவர்களை பாதுகாப்புப் படை வீரர்கள் சுட்டு வீழ்த்தினர். (சி)

## பயங்கரவாத முகாம்களை தகர்க்க அமெரிக்கா தயார்

வாஷிங்டன், செப். 29

பாகிஸ்தானில் இருக்கும் 150 இற்கும் மேற்பட்ட பயங்கரவாத முகாம்களை குண்டு போட்டு தகர்க்க அமெரிக்கா தயாராக இருக்கிறது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான் மண்ணிலிருந்து செயற்படும் பயங்கரவாத அமைப்புகளால் மீண்டும் ஒரு முறை பெரிய அளவிலான தாக்குதல் நடத்தப்படும். ஆனால், உடனடியாக பாகிஸ் தானில் இருக்கும் 150 பயங்கரவாத முகாம்கள் குண்டு போட்டு தகர்க்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16.05.1994

✱முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் படுகொலை குறித்து விசாரணை செய்ய ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு அவரது உறவினர்கள் விடுத்த வேண்டுகோளை சாதகமாக பரிசீலிக்க ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா முடிவு செய்துள்ளதாக ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் காமினி விஜேசேகர தெரிவிப்பு.

✱ முன்னாள் அமைச்சர் லலித் அதுலத் முதலியின் படுகொலை குறித்து விசாரணை செய்ய விசாரணை ஆணைக் குழுவொன்றை நியமிக்குமாறு லலித்தின் மனைவி சிறிமானி அரசிடம் கோரிக்கை விடுத்திருப்பதாகத் தெரிவிப்பு.

17.05.1994

✱காமினி திஸநாயக்காவை எம்.பி ஆக்கி அமைச்சர் பதவியொன்றை வழங்க வசதியாக ஐ.தே.கட்சியின் தேசியப் பட்டியல் எம்.பிக்களின் ஒருவராவது தமது பதவியை இராஜினாமாச் செய்ய முன்வராவிட்டால் ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைக்கவும் தயங்கப்போவது இல்லை என கொழும்புச் செய்திகள் ஊகம் தெரிவிப்பு.

✱தென்னாபிரிக்கத் தலைவர்களைப் பின்பற்றி நாமும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா கருத்துத் தெரிவிப்பு.

18.05.1994

✱தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களை நியமிக்கும் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என நாடாளுமன்ற சபாநாயகர் எம்.எச்.முகம்மது யோசணை தெரிவிப்பு.

✱ஐ.தே.கட்சி தேசியப் பட்டியல் எம்.பி, அமிட் தமது பதவியை இராஜினாமாச் செய்ய முன்வந்துள்ளமைக்கு ஜனாதிபதி விஜேதுங்கா பாராட்டுத் தெரிவிப்பு.

19.05.1994

✱ இன்று தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்கும் காமினி திஸநாயக்கா அடுத்த சில தினங்களில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிப்பு.

✱இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு உதவுவதற்கு தென்னாசிய நாடு ஒன்று விருப்பம் கொண்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிப்பு.

20.05.1994

✱ வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அமைதியை ஏற்படுத்துவதில் அரசு உறுதியாக உள்ளது. அதற்காக பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்வதற்காக கதவுகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

✱அரசாங்கத்தின் தேசிய புலனாய்வுப் பணியகத்தினர் தம்மைப் பின்தொடர்ந்து உழவு பார்த்து வருவதாக ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவர் ஒஸி குணசேகர குற்றச்சாட்டு.

21.05.1994

✱ இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை மீண்டும் அமுல் செய்வதற்கு உதவுமாறு இலங்கை அரசு இந்திய அரசிடம் கோரிக்கை விடுக்கும் எனவும் அதற் காகவே இந்திய ஆதரவாளரான காமினி திசநாயக்காவை மீண்டும் ஐ.தே.கட் சியில் அரசு இணைத்துக் கொண்டுள்ள தாக "யுக்திய" பத் திரிகை தெரிவிப்பு.

✱தமிழீழ மக்களின் பெரும் சமுகப் பிரச்சினையான சீதனக் கொடுமையை ஒழித்துக் கட்ட சட்டமொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தப் போவதாக தமிழீழ விடுதலை இயக்கம் தெரிவிப்பு.

22.05.1994

✱இரு போக்குவரத்து விமானங்களை அரசு கொள்வனவு செய்யவுள்ளதை நிறுத்துமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கு மாறு எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோவை இராணுவ அதிகாரிகள் குழுவொன்று கேட்டுக் கொண்டுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ஐ.நா.படைகள் இலங்கை வரமாட்டா. அது தொடர்பான வேண்டுகோள் எதுவும் அரசினால் விடுக்கப்படவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.

23.05.1994

✱இலங்கை விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்கள் இரண்டு நேற்று நீர்வேலிப் பகுதியில் மேற்கொண்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.

✱ ஐ.தே.கட்சியில் உள்ள எவரினதும் எதிர்பார்ப்புகளுக்குக் குந்தகமாக இருந்து பிரச்சினைக்கு உரியவனாக மாறிவிட நான் தயாராக இல்லை என கடந்த வாரம் எம்.பி.யாகப் பதவியேற்ற காமினி திஸநாயக்கா தெரிவிப்பு.

24.05.1994

✱தமிழீழத்தின் முதலாவது "வைப்பகம்" நேற்று யாழ்ப்பாணத்தில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைப்பு.

✱எட்டு ஆண்டு கால இடைவெளியின் பின்னர் கூடிய சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுக்குழு, நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி யின் வேட்பாளராக சுதந்திரக் கட்சியின் தலைவி சிறிமாவோவை தேர்ந்தெடுத்துள்ளதாகத் தெரிவிப்பு.

25.05.1994

✱எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண புதிய யோசனைகள் அடங்கிய திட்டமொன்றை அரசு முன்வைக்கவுள்ளதாகத் தெரிவிப்பு.

✱ வவுனியா - மன்னார் வீதியை இராணுவத்தினர் போக்குவரத்துக்கு தடை விதித்துள்ளதால் மன்னார் பெருநிலப் பரப்பிலும், மடுவிலும் உணவுப் பொருள்களுக்கும் அத்தியாவசியப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

26.05.1994

✱வடக்கு - கிழக்கு யுத்தமுனைகளில் இருந்து ஆயுதங்கள், வெடிபொருள்களை ஆயுதப் படையினர் கடத்துவதில் ஈடுபட்டிருப்பதாகவும் அவை கொழும்பு "ஆயுத சந்தையில்" விற்பனைக்கு விடப்படுவதாகவும் பொலிஸ் தரப்பு தெரிவிப்பு.

✱ ஆளும் ஐ.தே.கட்சியின் தற்போது இடம் பெற்று வரும் பாரிய மாற்றங்கள் காரணமாக ரணில் விக்கிரமசிங்க அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்ள எண்ணியுள்ளதாக தெரியவருகிறது என "ராவய" பத்திரிகை தெரிவிப்பு.

27.05.1994

✱அனுராதபுர மாவட்டம் - புல்மோட்டையில் விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதலொன்றில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக இராணுவத் தரப்பு தெரிவிப்பு.

✱கடந்த இரு நாள்களாக குடாநாட்டில் உள்ள அனைத்து படைமுகாம்களில் இருந்தும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் தொடர்ந்து ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக குற்றச் சாட்டு.

28.05.1994

✱வடக்கில் உள்ள இராணுவ முகாம்களில் பணிபுரிய இந்தியாவில் விசேட பயிற்சி பெற்ற இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் ஜெரி டி சில்வா தெரிவிப்பு.

✱ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் ஐ.தே.கட்சி சார்பில் எவர் போட்டியிட்டாலும் வெற்றி பெறப் போவது நாமே என சுதந்திரக்கட்சியின் தலைவி சிறிமாவோ தெரிவிப்பு.

29.05.1994

✱ மேல்மாகாண சபை நிர்வாகத்தை சந்திரிகாவிடமிருந்து பறிப்பதற்கு ஐ.தே.கட்சி தலைமைப்பீடமும், காமினி திஸநாயக்காவும் சூட்சி செய்வதாக குற்றச்சாட்டு.

✱ஐ.தே.கட்சியில் மீண்டும் இணைவதானால் றொனி டி மெல்லுக்கு திட்டமிடல் அமைச்சர் பதவி வழங்க ஜனாதிபதி முடிவு செய்துள்ளதாகத் தெரிவிப்பு.

30.05.1994

✱தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கு இலங்கைக்கு இந்திய அரசு பூரண ஒத்துழைப்பு வழங்கும் என இந்தியப் பிரதமர் பி.வி.நரசிம்மராவ் தெரிவிப்பு.

31.05.1994

✱ சமீபத்தில் அறுவைச் சிகிச்சைக்கு ஆளான சிறிமாவோவின் உடல் நிலை திருப்திகரமாக இருந்தால் மாத்திரமே அவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் எனவும் இல்லையேல் சந்திரிகாவே சுதந்திரக் கட்சி சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் எனவும் "வெரித்தாஸ்" வானொலி தெரிவிப்பு.



மக்கள் வங்கியின் 49 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, யாழ்.போதனா வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி 'பிளாஸ்ரிக்' குப்பைத்தொட்டிகள் கையளிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் சி.பத்மநாதன், யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜாவிடம் அவற்றைக் கையளிப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர்கள் க.சுசீந்திரன், நா.நாகேஸ்வரன் மற்றும் உதவி முகாமையாளர் ப.உதயணன் வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஸ்ரீ பவானந்தன், கணக்காளர் விஜயரகுநாதன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## வாசகர் திருமுகம்

### கொட்டடி சிவன் பண்ணை வீதியின் சுகாதார சீர்கேடுகள்

நாங்கள் வாழும் பிரதேசமாகிய கொட்டடி, சிவன்பண்ணை வீதிப்பகுதியில் பாரிய சுகாதாரச் சீர்கேடு நிலவுகின்றது. தற்பொழுது நுளம்புத்தொல்லை கூடுதலாக உள்ளது. உதாரணங்கள் சில பின்வருமாறு:-

✱இவ்வீதியின் நடுப்பகுதியின் கிழக்குப் பக்கத்தில் மூன்று வீடுகள் இரவு நேரங்களில் இலங்கையின் பிற பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தருபவர்களால் தங்கும் இடங்களாகப் பாவிக்கப்படுகின்றன. இப்பகுதியின் வீதியோரங்களில் காலை வேளைகளில் வெற்றுச் சொப்பிங்பைகளும் , வெற்றுப் போத்தல்களும், இளநீர்க் கோம்பைகளும் காணப்படுகின்றன. அண்மைக் காலமாக யாழ்.மாநகரசபை ஊழியர்கள் இவ்விடத்திலுள்ள கழிவுகளை அகற்றுவதற்காக வருவதில்லை.

✱இவ்வீதியின் கிழக்குப் பக்கக் கழிவு நீர் ஓடும் வடிகால்களிலும், 161,165 ஆம் இலக்க வளவுகளுக்கு இடையிலுள்ள (மேலதிக மழைநீர் அப்பகுதியிலுள்ள தாமரைக் குளத்துக்கு வழிந்தோடும்) வடிகாலிலும் புல்பூண்டுகள் வளர்ந்தும், துப்பரவு செய்யப்படாமலும் உள்ளது. இப்பகுதிக்கு வடிகால்களைத் துப்பரவு செய்யும் ஊழியர்கள் வருவதேயில்லை. இதன் காரணமாக குப்பை கூழங்களும், உயரமாக வளர்ந்த புல் பூண்டுகளும் காணப்படுகின்றன.

✱இவ்வீதியின் கிழக்கு மேற்குப் பகுதியில் வீதிக்குப் பக்கத்திலுள்ள பகுதிகளிலும் புற்கள் வளர்ந்து காணப்படுகின்றன.

✱வீதியோரங்களில் இடையிடையே மண்பிட்டிகள் காணப்படுகின்றன.

✱வெள்ளாந்தெருவில் இருந்து கற்குளம் செல்லும் பாதையில் குறுக்காக ஒரு (கழிவு நீர் வழிந்து தாமரைக்குளத்துக்குச் செல்லும்) வடிகால் உள்ளது. இவ்வடிகாலைத் துப்பரவு செய்வதற்கு மாநகரசபை ஊழியர்கள் வருகை தருவதேயில்லை.

✱இவ்வீதியின் நடுப்பகுதியில் கழிவுநீர் மேற்குப்பக்கத்துக்குத் திரும்பிச் செல்லும் இடத்தில், கிழக்குப் பக்கத்து மதகு உடைந்து காணப்படுகின்றது. இதற்குப் பக்கத்தில் பாரிய மதகு இடிபாடுகள் காணப்படுகின்றன. இவ் இடிபாடுகள் காரணமாக மழை நீர் இவ்விடத்தில் தேங்கி நின்று, அக்கம் பக்கத்தில் உள்ள வளவுகளுக்குள் செல்கிறது. சரிவர தாமரைக் குளத்துக்கு வழக்கம் போல வழிந்து ஓடாது, குறிப்பிட்ட மதகு இடிபாடுகள் அகற்றப்பட வேண்டும். மதகும் முறையாக சிமெந்து பாவித்து திருத்தப்பட வேண்டும். இவ் வீதியின் எதிர்ப்புறமுள்ள மதகும், வீதியோரமாக நிறுத்தப்படும் பாரிய வாகனங்களின் பாரம் காரணமாக சரிந்து விழும் தறுவாயில் உள்ளது. இம்மதகு தற்பொழுது சரிந்து காணப்படுகிறது. மழை காலத்தில் குறைந்த அழுத்தம் காரணமாக கட்டுமானம் இடிந்து உட்புறத்தில் விழுந்துவிடும். அப்படி நேர்ந்தால் மழை வெள்ளம் தடைப்பட்டு, தொடர்ந்து குளத்துக்குச் செல்லாது.

✱இப்பகுதிக்கு மாநகரசபை ஊழியர்கள் வருகை தருவதேயில்லை. நாங்கள் இரவு, பகல் என்நேரமும் நுளம்புத் தொல்லையால் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றோம். வீட்டுக்கு வருகை தருபவர்கள் 'என்ன, உங்கள் வீட்டில் நுளம்புக்கடி இவ்வளவு மோசமாக இருக்கிறது' என்று வினவுகிறார்கள். வீட்டுக்கு வருபவர்கள் இவ்வாறு பல தடவை கேட்டிருக்கிறார்கள்.

✱உங்கள் சுகாதார உத்தியோகத்தர்களை இப்பகுதிக்கு வருகை தரச்செய்து இப்பகுதியைச் சோதனையிடச் செய்யுங்கள். நாங்கள் மேலே கூறியிருப்பவற்றிலுள்ள உண்மைத் தன்மையை உணர்ந்து ஆகவேண்டிய நடவடிக்கைகளைத் துரிதமாக அவர்களை மேற்கொள்ளச் செய்யுங்கள் என யாழ்.மாநகர சபை முதல்வருக்கு மகஜர் அனுப்பியுள்ளோம். அத்தடன் அதன் பிரதிகளை இவ்விடயத்துடன் தொடர்புடைய ஏனைய அதிகாரிகளுக்கும் அனுப்பியுள்ளோம்.

✱டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வு பற்றிய கருத்துக்கள் நிலவும் இந்த நாள்களில் எங்கள் பகுதியில் நிலைமை இவ்வளவு சீர்கேடடைந்து காணப்படுகின் றது. மழை காலம் அண்மித்து உள்ளது. மேலும் தாமதித்தால் இவ்விடத்தை வெள் ளம் மூடிவிடும்.

✱எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய விரைவான நடவடிக்கை மேற்கொள்ளத் தூண்டும் பொருட்டு எமது இந்தச் சிரமநிலை குறித்து தங்கள் பத்திரிகையூடாக வெளிப்படுத்தி உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*யாழ்.கொட்டடி சுகாதாரக்குழு சார்பில்*
*வே.குமாரசாமி தலைவர்.*

### ஆசிரிய உதவியாளர்கள் முன்வைக்கும் பிரச்சினை

கடந்த வருடம் 12.11.2009ஆம் திகதியன்று ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்கப்பட்டு உதவு தொகையாக 3000/= வழங்கப்படும் இந்த ஆசிரியர்கள் 25.09.2010 அன்றும் 26.09.2010இலும் தொலைக்கல்வி ஆசிரிய வாண்மை விருத்திக்கான சனி, ஞாயிறு தினங்களில் சமுகமளிக்கக் கோரப்பட்டுள்ளனர். இப்பயிற்சி நெறிக்கான காலம் போதியதல்ல. 03.10.2010 இந்நெறி ஆரம்பமாகின்றது. இந்த ஆசிரிய உதவியாளர்கள் 3000/= வேதனத்துடன் யாழ்., வடமராட்சி, தென்மராட்சி ஆகிய இடங்களில் இருந்து நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு ஆகிய தூர தீவகப் பிரதேசங்களுக்குச் சென்று கடமையாற்றுகின்றனர். கல்வி அமைச்சு கடந்த மாதம் இவ்வாசிரியர்கள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு உள்வாங்கப்படுவார்கள் என தெரிவித்திருந்தார்கள். கடந்த கால தொண்டராசிரியர்கள் 3 - II சேவைக்குள் நேரடியாக உள்வாங்கப்பட்டு ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்குள்வாங்கப்பட்டனர். ஏன் இவ்வாறான மாற்றந்தாய் மனப்பாங்கு. இந்த ஆசிரிய உதவியாளர்கள் சுகவீனத்திற்காக கூட லீவு பெற முடியாதவாறு நிர்ப்பந்திக்கப்படும் இவர்கள் என்ன ஓய்வில்லா எந்திரர்களா? ஆசிரிய பயிற்சி கலாசாலைகளில் யாழில் போதிய இட ஆளணி வசதி இருக்கும்போது ஏன் இந்தப் பாராமுகம்.

ஏனைய பிரதேச ஆசிரிய உதவியாளர்கள் ஆசிரிய பயிற்சி கலாசாலைகளுக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். ஆசிரியர்களுக்கிடையே ஏன் இந்த வேறுபாடு. இவ் விடயம் சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரிகள், பணிப்பாளர்கள் கவனத்திற்காய் முன்னிலைப் படுத்துகிறோம்.

*ஆசிரிய உதவியாளர் சமூகம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விளையும் புலமையை முளையிலே வாழ்த்துவோம்

சுன்னாகம் புளியந்தோட்டத்தை சேர்ந்த
மகேந்திரம் சுதனி தம்பதிகளின் செல்வப் புதல்வி

**மகேந்திரம் கலைவிழி**

(மாணவி,சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்ததையிட்டு பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் கல்வித் துறையில் தொடர்ந்து பல சாதனைகள் புரிய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்: அப்பம்மா, சந்திர பெரியப்பா குடும்பம் (மில் ), மதி சித்தப்பா குடும்பம், ஆனந்தி சித்தப்பா குடும்பம், சிலன் சித்தப்பா குடும்பம் (கனடா), சிறி மாமா குடும்பம், பரமேஸ் மாமா குடும்பம்

கந்தரோடை ,
சுன்னாகம்.

(சி-571507)

## சேவை நலன் பாராட்டு



யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் 9 வருடங்களாகப் பணியாற்றி 19.09.2010 அன்று தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்ற

திருமதி
**வள்ளிப்பிள்ளை புஷ்பலிங்கம்**
[ஆசிரியர் , தரம்-1]

அவர்கள் எமது பாடசாலைக்கு ஆற்றிய சேவையினைப் பாராட்டுவதோடு, அவரது ஓய்வுக் காலத்தில்அவர் தமது குடும்பத்தோடு சகல சௌபாக்கியத்துடன் இனிதே வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

(101773)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அண்மையில் யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்ற

**சி.ரமணராசா**

அவர்களை மென்மேலும் பல பட்டங்களும் பதவிகளும் பெற்று வாழ்வில் உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
நண்பன் தி.பிரபாவும் குடும்பத்தினரும்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில்162 புள்ளிகளைப் பெற்று சித்தி அடைந்த எமது அருமைச் செல்வம்

**கௌதம்**

அவர்களைத் தொடர்ந்தும் பல கலைகளையும் கற்றுச்சிறந்த கல்விமானாக வரவேண்டும் என எல்லாம்வல்ல குலதெய்வங்கள் துணையோடு நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

வாழ்த்துவோர் :-
அப்பு அம்மா, அருமைத் தங்கை பிரியங்கா, தாத்தா, அம்மம்மா, சுமி அன்ரா, சிவா மாமா, அத்தை குடும்பத்தினர், பெரியப்பாமார், பெரியம்மாமார் குடும்பத்தினர், ஐயாபாட்டி குடும்பத்தினர்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(103928)

## வாழ்த்துகின்றோம்



நல்லாசிரியனாக, கொத்தணி அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக, வலயக் கல்விப் பணிப்பாளராக சிறப்புடன் பணியாற்றி கல்விச் சமூகத்தின் பெரும் கனவை நனவாக்கி வலிகாமம் கல்வி வலயத்தில் இருந்து மாகாணக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்ற உயர்திரு.

**ப.விக்னேஸ்வரன்**

அவர்களுக்கு நன்றியுடனான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் கல்வித்தாய்க்கு மேலும் சீரிய பணியைச் சிறப்புடன் செயலாற்றுவதற்கு இறை அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/சுழிபுரம் கிழக்கு, அ.மி.த.க. பாடசாலை,
சுழிபுரம்.

## பாராட்டி வாழ்த்து



யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் மாணவரான

**அன்ரனி கீர்த்தீபன்**

அவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையை யிட்டுப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் அவர் சித்திபெற உதவியளித்த எல்லாம் வல்ல இறைவனாகிய இயேசுவுக்கும் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் திருச்சபையின் ஊழியர் களுக்கும் கல்வி நிறுவனத்துக்கும் எமது நன்றிகளைத் தெரிவித் துக் கொள்கிறோம்.

309, மணியம் கபே,
கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

(103941)

குடும்பத்தினர்,
உறவினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இணுவிலைச் சேர்ந்த
செல்வி
**மகாலிங்கசிவம் நிவேதா**
(உடுவில் மகளிர் கல்லூரி)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகளைப் பெற்ற இவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர் கல்வி கற்ற கல்லூரி அதிபர், வகுப் பாசிரியர் திருமதி திலகவதி சண்முகம், ஏனைய ஆசிரி யர்கள், அன்பொளி கல்வி நிறுவனத்தினர் ஆகியோ ருக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அம்மப்பா, அம்மம்மா,
பெரியம்மா குடும்பம்,
மாமா குடும்பம், மகி அன்ரி.

றொறன்றோ,
கனடா.

(சி/571424)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினரும் ஓய்வுபெற்ற அதிபரும் ஒடையம்பதி கற்பக விநாயகர் ஆலய உப தலைவரும் உரும்பிராய் தெற்கு கிராம முன்னேற்றச் சங்கத் தலைவரும் ஆகிய

**திரு. தம்பிராசா திருநாவுக்கரசு**

அவர்கள் 14.09.2010இல் யாழ். மாவட்ட நீதிபதி அ.பிறேம்சங்கர் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் நலமுடன் வாழ்ந்து பணிகளைத் தொடர மனமார வாழ்த்துகிறோம்.

சிவசம்பு கமலநாதன் குடும்பம்,
உரும்பிராய் கிழக்கு.

(103918)


## கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்
**774**
சீட்டிழுப்பு திகதி
**27.09.2010**

எழுத்து: **R**

வெற்றி இலக்கங்கள்: **12 44 69 70**

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 24,337,248.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 12 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 325 |
| 4ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 646 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 15882 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 9044 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 226026 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 35533 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,717,140.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 24,875,949.60

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6மாதங்களுக்குள் மீட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவுதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**தேசிய லொத்தர் சபை**

கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360

இணையதளம்: www.nlb.lk


## அரியாலைப் பிரதேச முதியோர் கௌரவிப்பு

நாவற்குழி, செப். 29

அரியாலை அபிவிருத்திச் சங்கம் அரியாலைப் பிரதேசத்தினைச் சேர்ந்த 65 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வை அடுத்த மாத முற்பகுதியில் நடத்தவுள்ளது.

அரியாலைப் பிரதேசத்தினுள் வசித்து வருவோரும் வெளிப் பிரதேசங்களில் வசிக்கும் அரியாலைப் பிரதேசத்தைச் சேர்ந்தோரும் இந்தக் கௌரவிப்பைப் பெறவுள்ளனர்.

இதற்கான பதிவுகளும் விவரம் திரட்டல் நிகழ்வுகளும் அண்மையில் நடைபெற் றுள்ளன. (த-121)

## வாதரவத்தையில் நாளை ஆயுர்வேத மருத்துவமுகாம்

கோப்பாய், செப். 29

வலி.கிழக்குப் பிரதேச சபை அனுசர ணையுடன் வலி.கிழக்கு ஆயுர்வேத பாது காப்புச் சபையின் நடமாடும் ஆயுர்வேத இலவச மருத்துவ முகாம் நாளை வியாழக் கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற் பகல் 2 மணிவரை வாதரவத்தை சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பொது வைத்தியம், முறிவுநெரிவுகளுக் கான மருத்துவம், சித்த ஆயுள்வேத, யுனானி, அக்குபஞ்சர் முறைகளில் சிகிச் சை அளிக்கப்படும்.

மருத்துவ முகாமில் கலந்துகொள்பவர் களுக்கு விசேட முறையில் தயாரிக்கப் பட்ட சத்துணவாக இலைக்கஞ்சி வழங்கப் படும் என்றும் மருந்துகள் பெற மூன்று போத்தல்கள்களை எடுத்துவாருங்கள் என்றும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள் ளனர். (ஒ-72)

## கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம், செப். 29

அடையாள அட்டைகள்சில கண்டெடுக் கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியர்வகள் தகுந்த ஆதாரத்துடன் வந்து பெற்றுக்கொள்ளுமாறு வைத்தியசாலை யின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிறிபவா னந்தராஜா கேட்டுள்ளார்.

புலோலி வடக்கு, சுந்தரம் சண்முக நாதன், கோப்பாய் தெற்கு, பழைய வீதி, சிவபாதம் சிவதர்சினி ஆகியோரது அடை யாள அட்டைகளே கண்டெடுக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப் பாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-16)

## முன்பள்ளி மழலைகள் விளையாட்டு விழா

கோப்பாய், செப். 29

வலி.கிழக்குப் பிரதேச முன்பள்ளி மழலைகளின் விளையாட்டு விழா கோப்பாய், அச்சுவேலி லயன்ஸ் கழக அனுசரணை யுடன் இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி, அத்தியார் இந்துக் கல்லூரியில் நடை பெறவுள்ளது.

பிரதேச சபைச் செயலாளர் த.நட ராஜா தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினர்களாக யாழ். பிரதேச செய லகக் கணக்காளர் லயன் வேலாயுதம் வேல்நிதி, லயன் சீமாட்டி புவனேஸ் வரி வேல்நிதி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

இந்த விளை யாட்டு விழாவில் வலி. கிழக்குப் பகுதியிலுள்ள முன் பள்ளிகள் அனைத் தும் கலந்துகொள் ளவுள்ளதாக ஏற் பாட்டாளர்கள் தெரி வித்துள்ளார்கள். (ஒ-72)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹற்றன் லீக் அணியுடனான ஆட்டம்; 3 கோல்களைப் போட்டது பருத்தித்துறை

யாழ்ப்பாணம்,செப்.29

ஹற்றன் உதைபந்தாட்ட லீக் அணியுடனான ஆட்டத்தில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி வெற்றிபெற்றது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் லீக்குகளுக்கு இடையில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் ஹற்றன் உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பமானது முதல் இரண்டு அணியினரும் கோல்களைப் பெறும் முயற்சியில் தமது ஆட்டத்தினை வேகப்படுத்திக் கொண்டனர்.

இதன் பயனாக 33 ஆவது நிமிடத்தில் பருத்தித்துறை லீக் அணியின் வீரன் பிறேம்குமார் தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

ஹற்றன் அணியினர் தமது ஆட்டத்தினை வேகப்படுத்தி எதிர் அணியினரின் கோல் பரப்பை ஆக்கிரமித்தபோதும் பருத்தித்துறை அணியின் களத்தடுப்பினால் கோல் அடிக்கும் முயற்சி தடுக்கப்பட்டது.

ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டபோது 1:0 என்ற கோல் கணக்கில் பருத்தித்துறை லீக் அணி முன்னிலையில் இருந்தது.

புதிய உத்வேகத்துடன் ஆரம்பமான இரண்டாவது பாதியாட்டத்தில் இரு அணிகளும் ஆக்ரோஷமாக மோதிக்கொண்டன.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியின் வீரன் கே.அரவிந்தன் இரண்டாவது பாதியாட்டத்தில் 22 ஆவது நிமிடத்தில் தனது அணிக்கான இரண்டாவது கோலினை அடித்தார்.

இதனைத் தொடர்ந்து 32ஆவது நிமிடத்தில் பருத்தித்துறை லீக் வீரன் பிறேம்குமார் மூன்றாவது கோலைப் போட்டார்.

ஆட்டம் முடிவிற்கு இரண்டு நிமிடங்கள் இருக்கையில் ஹற்றன் லீக் அணி வீரன் நாணயக்கார தனது அணிக்கான முதலாவது கோலினைப் பெற்றுக் கொடுத்தார்.

ஆட்டம் முடிந்தபோது 3:1 என்ற கோல் கணக்கில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணி ஹற்றன் உதைபந்தாட்ட லீக் அணியை வெற்றி கொண்டது. (த-23)

# ஆண்களுக்கான தட்டெறிதலில் ஹரிகரனின் சாதனை பதிவு

வலி.வடக்கு,செப்.29

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வ.ஹரிகரனின் பெறுபேறு சிறந்த சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் தட்டெறிதலுக்கான சாதனைப் பட்டியலைத் தயாரிக்கும் நடவடிக்கையை வட மாகாண விளையாட்டுத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

கடந்த 2007ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த இ.உதயகுமார் 34.55 மீற்றர் தூரமும், 2009ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பார்த்தீபன் 35.89 மீற்றர் தூரமும், 2010ஆம் ஆண்டு வ.ஹரிகரன் 36.37 மீற்றர் தூரமும் தட்டெறிந்துள்ளனர்.

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் புதிய சாதனையாக 2010ஆம் ஆண்டின் சிறந்த பெறுபேறான வ.ஹரிகரனின் 36.37 மீற்றர் தூரம் புதிய சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது. (த-86)

# யாழ்.பல்கலை அணி இன்று கொழும்புக்கு

யாழ்ப்பாணம்,செப்.29

இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான 10 ஆவது விளையாட்டு விழாவை முன்னிட்டு இடம்பெறவுள்ள உதைபந்தாட்டம், கராத்தே போட்டிகளில் பங்கு பற்றுவதற்காக யாழ்.பல்கலைக் கழக அணி இன்று புதன்கிழமை கொழும்பு செல்கிறது. (த-23)

# நாவாந்துறை கலைவாணிக்கு எதிராக பாடும்மீன் 6 கோல்களைப் போட்டது

யாழ்ப்பாணம்,செப்.29

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணியுடனான ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று கடந்த வாரம் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக அணியை 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (த-23)

# யாழ். வீராங்கனை தர்சினிக்கு விளையாட்டு அமைச்சு உதவி



உதவித்தொகை வழங்கும் நிகழ்வில் விளையாட்டுத்துறை அமைச்சருடன் தர்சினி.

யாழ்ப்பாணம், செப்.29

இலங்கை தேசிய வலைப்பந்தாட்ட அணியில் இடம்பெற்றுள்ள செல்வி சிவலிங்கம் தர்சினிக்கு விளையாட்டுத்துறை அமைச்சினால் உதவுதொகை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் முதல் விளையாட்டுத்துறை அமைச்சர் சி.பி.ரத்நாயக்கா எடுத்த முயற் சியைத் தொடர்ந்து இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

கடந்த நான்கு வருடங்களாக இவர் கொழும்பில் வாடகை வீட்டில் குடியிருந்து வருகின்றார்.

விளையாட்டு அமைச்சின் உதவி மூலம் சிவலிங்கம் தர்சினி தனது விளை யாட்டுத் தரத்தை மேலும் உயர்த்துவதற்கான பயிற்சிகளை மேற்கொள்ளப் பயன்படுத்தப் போவதாகத் தெரிவித்தார். (த-86)

## கிரிக்கெட் பயிற்சி முகாம் வெள்ளியன்று

யாழ்ப்பாணம், செப்.29

யாழ்.மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த 15 வயதுப் பிரிவுத் துடுப்பாட்ட வீரர்களுக்கான பயிற்சி முகாம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகின்றது.

இதில் வடமாகாணக் கிரிக்கெட் பயிற்றுநர் ரவீந்திர புஸ்பகுமார தலைமையிலான குழுவினர் வீரர்களுக்கு பயிற்சிகளை வழங்கவுள்ளனர் (த-23)

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, செப்.29

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக அமரர் சுப்பிரமணியம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக நடத்தும் 16 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய 11 பேர் பங்குபற்றும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆட்டத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயத்திற்கு அருகில் உள்ள பூமா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் திருநெல்வேலி முத்துத்தம்பி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தெல்லிப்பழை பூமா விளையாட்டுக் கழகம் மோதும். (த-86)

யாழ்ப்பாணம், செப்.29

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் பருத்தித்துறை லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான 7பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி எதிர் சென்.தோமஸ் விளையாட்டுக் கழக அணி (மாலை 4மணி).
* பருத்தித்துறை றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி எதிர் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி (மாலை 5மணி). (த-28)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## றோட்டறக்ட் கழகத்தின் சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.29

யாழ்.நகர் மையறோட்டறக்ட் கழகம் நடத்தும் சதுரங்கப் போட்டி எதிர்வரும் ஐப்பசி மாதம் 3ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

போட்டிகள் யாவும் திறந்த நிலைப் போட்டிகளாக நடைபெறவுள்ளதாகவும், ஒவ்வொரு வயதுப் பிரிவினருக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் போட்டிச் செயற்திட்ட இயக்குநர் எஸ். வல்லவக்குமரன் தெரிவித்துள்ளார். (த-23)

# விளையாட்டு அலுவலர் பதவி போட்டிப் பரீட்சை ஞாயிறன்று

வலி.வடக்கு,செப்.29

வடமாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டு அமைச்சினால் விளையாட்டு அலுவலர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வடமாகாணத்தில் உள்ள மாவட்டங்களில் நடைபெறவுள்ளது.

வடமாகாண பொது சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்படும் இப்பரீட்சைக்கு ஆயிரக் கணக்கானவர்கள் வடமாகாணத்தில் தோற்றவுள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றும் அனுமதி அட்டைகள் வடமாகாண பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சினால் உரிய விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த பத்து வருட கால இடைவெளியின் பின்னர் இப்பரீட்சை நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாணத்தில் விளையாட்டு அலுவலர்கள் பதவிக்கு உள்ள வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்காக இப் பரீட்சை நடைபெறுகின்றது. (த-86)

# தேசிய தடகளப் போட்டிகள் சுகததாஸவில் இன்று ஆரம்பம்

வலி.வடக்கு, செப்.29

அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான தேசிய மட்ட தடகளப் போட்டிகள் இன்று புதன்கிழமை காலை கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து ஐந்து நாள்கள் நடைபெறவுள்ள இப் போட்டிகளில் வட மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 275இற்கும் மேற்பட்ட வீரர்கள், வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர்.

கடந்த ஆண்டு வடமாகாணம் இந்தப் போட்டிகளில் 13 பதக்கங்களைப் பெற்றது. இவ்வாண்டு 20 இற்கும் மேற்பட்ட பதக்கங்களைப் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் வடமாகாண வீரர்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றுகின்றனர். இப்போட்டிகளுக்கான பயிற்சிகளும் அண்மையில் வடமாகாண வீரர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்தத் தடகளப் போட்டிகளில் கலந்துகொள்ளும் வீரர்கள், வீராங்கனைகளுக்கான விசேடமாகத் தயாரிக்கப்பட்ட சீருடைகளைச் சேவாலங்கா நிறுவனம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-86-23)





இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை உரையாற்றுவதை முதல் படத்திலும் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தேசமான்ய இம்மானுவல் [illegible] வெற்றிக்கிண்ணம் வழங்குவதை இரண்டாவது படத்திலும் போட்டியில் கலந்து கொண்ட வீரர்களை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: தமிழினியன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசைகாட்டி சூதாட்டத்தில் சிக்கவைத்துவிட்டார் பட் இஜாட் பட்டிடம் முகமது அமீர் பரபரப்புத் தகவல்

## பாகிஸ்தான் அணியின் மேலாளர் திடீர் ராஜினாமா



கராச்சி, செப் 29

பாகிஸ்தான் டெஸ்ட் அணியின் தலைவர் சல்மான் பட் ஆசைகாட்டித் தம்மை சூதாட்டத்தில் சிக்க வைத்து விட்டார் என சகவீரரான முகமது அமீர் பரபரப்பு வாக்குமூலம் அளித்துள்ளார். அதேவேளை, அணியின் மேல்ாளரான யாவர் சயீத் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிராக லோர்ட்ஜில் கடந்த மாதம் நடந்த டெஸ்ட் போட்டியின் போது வேண்டுமென்றே 'நோ-போல்' வீசுவதற்காக பாகிஸ்தான் வேகப் பந்து வீச்சாளர்களான முகமது அமீர், முகமது ஆஸிப் ஆகியோர் சூதாட்டத் தரகரான மஜீத்திடம் கோடிக்கணக்கான பணத்தை லஞ்சமாக பெற்றதும், இதற்கு டெஸ்ட் அணித்தலைவரான சல்மான் பட் மூளையாகச் செயல் பட்டமையும் இங்கிலாந்துப் பத்திரிகை ஒன்றின் புலனாய்வின் மூலம் அம்பலப்படுத்தப்பட்டது.

இதையடுத்து மூன்று வீரர்களும் சர்வதேசப் போட்டிகளிலிருந்து இடைநிறுத்தப்பட்டனர். இது தொடர்பாக ஸ்கொட்லாந்துப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமது வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபடவில்லை. குற்றம் நிரூபிக்கப்படாத வரை அவர்கள் அப்பாவிகள் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வாதிட்டு வருகிறது.

இந்நிலையில், சூதாட்டத்தில் சிக்கிய 18 வயதான - இளம் வீரரான முகமது அமீர், அணித்தலைவர் சல்மான்பட்டின் வஞ்சகத்தால்தான் இந்த ஊழலில் ஈடுபட்டார் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் இஜாட் பட்டிடம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். இது கிரிக்கெட்ட வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

''எனக்கு ஒருபோதும் சூதாட்டத்தில் ஈடுபடும் எண்ணம் இருந்ததில்லை. சல்மான் பட்டும், முகமது ஆஸிப்பும்தான் கட்டாயப்படுத்தி சூதாட்டத்தில் ஈடுபட வைத்துவிட்டனர். அவர்கள் என்ன சொன்னார்களோ அதைத்தான் நான் செய்தேன்.

சூழ்நிலையின் தீவிரம் எனக்குத் தெரியவில்லை. நான் ஓர் அப்பாவி. சல்மான்பட்டும், ஆஸிப்பும் அறிமுகப்படுத்தும் வரை சூதாட்டத் தரகரான மஸார் மஜீத் யார் என்று கூட எனக்குத் தெரியாது. அணியின் மூத்த வீரர்கள் மூலம் நான் வஞ்சிக்கப்பட்டு விட்டேன்.''

- இவ்வாறு அமீர் வாக்கு மூலம் கொடுத்திருக்கிறார் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் ஒரு நாள் கிரிக்கெட் அணியின் தலைவரான அப்ரிடியையும் கண்ணீர் மல்க சந்தித்து முகமது அமீர் முறையிட்டார் எனவும், பின்னர் மேலாளர் யாவர் சயீத்துடன் சேர்ந்து இது குறித்து விரிவாக விவாதித்தார் எனவும் தெரியவருகிறது.

''ஆனால், குறைந்த வயது என்று காரணம் காட்டி அமீருக்கு கருணை காட்டக்கூடாது என்று பாகிஸ்தான் அணியின் தலைமைத் தேர்வாளரான மொசின் கான் வலியுறுத்தியுள்ளார்.

''மூன்று பேரும் குற்றவாளிகள் என்பது உறுதி செய்யப்பட்டால், அமீர் உட்பட மூவரும் தண்டிக்கப்பட வேண்டும்'' - என்று அவர் கூறியிருக்கிறார்.

இதற்கிடையே, இங்கிலாந்துத் தொடருக்கான பாகிஸ்தான் அணியின் மேலாளராக இருந்த யாவர் சயீத் நேற்று முன்தினம் மாலை திடீரென தமது பொறுப்பை ராஜினாமாச் செய்துள்ளார். பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் இஜாஸ்பட்டைச் சந்தித்த யாவர் சயீத் தம்மை அப்பொறுப்பிலிருந்து விடுவிக்கும்படி கேட்டுக் கொண்டார். அதனை இஜாஸ் அகமட் மட்டும் ஏற்றுக்கொண்டார்.

# கொமன்வெல்த் போட்டியில் பங்கேற்க டில்லி வந்தனர் ஆஸ்திரேலிய வீரர்கள்

## பாம்புச் சர்ச்சையைக் கிளப்பிய தென்னாபிரிக்காவும் திருப்தி

புதுடில்லி, செப்.29

கொமன்வெல்த் போட்டியில் பங்கேற்பதற்காக ஆஸ்திரேலிய அணியினர் நேற்றுமுன்தினம் டில்லி வந்தனர்.

இந்தியத் தலைநகர் டில்லியில் எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 14ஆம் திகதிவரை கொமன்வெல்த் விளையாட்டு போட்டிகள் நடைபெளவுள்ளன.



கொமன்வெல்த் போட்டிகள் தொடர்பாகப் பல்வேறு குற்றச்சாட்டுகள் காரசாரமாக விவாதிக்கப்பட்டாலும், மறுபுறம் வெளிநாட்டு அணி வீரர்கள் தொடர்ந்து டில்லிக்கு வந்தவண்ணம் உள்ளனர்.

ஆஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, ஸ்கொட்லாந்து உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த சுமார் 550 வீரர், வீராங்கனைகள், அதிகாரிகள் கொமன்வெல்த் போட்டியில் பங்கேற்பதற்காக நேற்றுமுன்தினம் டில்லி வந்தடைந்தனர்.

இதில் தென்னாபிரிக்கத் தரப்பில் 113 பேரும், ஆஸ்திரேலியத் தரப்பில் 59 பேரும், இங்கிலாந்து அணியில் 61 பேரும் இடம்பெற்றிருக்கின்றனர்.

அண்மையில் கொமன்வெல்த் குடியிருப்புக் கிராமத்தில் தங்கள் நாட்டு வீரர்களுக்கென ஒதுக்கப்பட்ட அறை ஒன்றில் பாம்பைக் கண்டதாகப் பரபரப்பை ஏற்படுத்திய, இந்தியாவுக்கான தென்னாபிரிக்கத் தூதர் ஹரிஸ் மெபுல்லோ மெஜகி, இப்போது திருப்தி தெரிவித்துள்ளார்.

அவர் இதுகுறித்து செய்தியாளர்களிடம் கூறுகையில்,

''எங்களுக்கென ஒதுக்கப்பட்ட அறை ஒன்றிலிருந்து பாம்பு வெளிப்பட்டதைப் பார்த்தேன். இதன் மூலம் எங்களது வீரர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருந்ததால் ஏமாற்றமடைந்தேன்.

விடுதியின் அடித்தளம் மற்றும் படிக்கட்டுகள் முழுவதும் தண்ணீரில் மூழ்கிக் கிடந்தன.

எங்களது மனக்குறையை போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் தீவிர கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளனர். எங்களது வீரர்கள் தங்கும் இடத்தைத் தயார் செய்து வரும் பணியாளர்கள் மிகச்சிறப்பாகச் செய்து வருகிறார்கள். இதனால் மகிழ்ச்சியடைந்துள்ளேன். நேற்றுமுன்தினம் பார்த்ததை விட இப்போது நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளது. பணிகளைத் துரிதமாக முடித்து வருகிறார்கள். விரைவில் எல்லாம் சரியாகிவிடும். அதன் பிறகு எங்களது வீரர்கள் கொமன்வெல்த் கிராமத்தில் தங்குவார்கள்'' - என்றார்.

# பான் பசுபிக் டென்னிஸ்: மரியா வெளியேற்றம்!



ஜப்பானில் நடைபெற்றுவரும் பான் பசுபிபக் ஓபன் டென்னிஸ் போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா தோல்வியடைந்து வெளியேறினார்.

நேற்றுமுன்தினம் நடந்த முதல் சுற்று ஆட்டத்தில் ஜப்பானின் கிமிகோ டேட் க்ரம் - ரஷ்யாவின் மரியா ஷரபோவா ஆகியோர் களம் கண்டனர்.

இதில், கிமிகோ 7-5, 3-6, 6-3 என்ற செற் கணக்கில் நடப்புச் சம்பியனான மரியா ஷரபோவாவை வீழ்த்தினார்.

இதன் மூலம் அவர் அடுத்த சுற்றுக்கு முன்னேற, மரியா ஷரபோவா ஏமாற்றதுடன் தொடரை விட்டு வெளியேறினார்.

40 வயதாகும் கிமிகோ, 12 ஆண்டுகள் டென்னிஸ் போட்டிகளில் விளையாடாமல் இருந்தார். 2008ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்று விளையாடி வருகிறார்.

மற்றொரு ஆட்டத்தில் கஜகஸ்தான் வீராங்கனையான எரோஸ்லவா ஷ்வெடோவா 4-6, 6-1, 6-1 என்ற செற் கணக்கில் ஜப்பானின் க்ரமி நாராவை வீழ்த்தினார்.

# முதல் டெஸ்டில் ஹர்பஜன் விளையாடுவது சந்தேகம்

மொகாலி, செப். 29

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக எதிர்வரும் முதலாம் திகதி மொகாலியில் ஆரம்பமாகவுள்ள முதலாவது டெஸ்ட் போட்டியில் ஹர்பஜன் சிங் விளையாடுவது சந்தேகமாகியுள்ளது.

அவருக்கு இடுப்புப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளதால் 'ஸ்கான்' செய்யப்பட்டுள்ளது. இதனால் அவரை ஓய்வு எடுத்துக்கொள்ளும்படி பரிந்துரை செய்யப்படலாம் எனத் தெரிய வருகிறது.

இதேவேளை,

ஷேவாக்கும், காம்பீரும் காயமடைந்துள்ளனர். எனினும், அவர்களுக்கு ஏற்பட்ட காயம் தீவிரமானதல்ல என்று கூறப்படுகிறது.

இதனால் அவர்கள் இருவரும் முதலாவது டெஸ்டில் விளையாடுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

# நாம் கடைசியாக இணைந்திருக்கும் இந்தத் தருணம் உணர்வுபூர்வமானது

## கிண்ணம் வென்ற பின்னர் டோனி உருக்கம்

ஜோகனஸ்பேர்க், செப். 29

''நான்காவது ஐ.பி.எல். தொடருக்காக அனைத்து அணிகளின் வீரர்களும் ஏலம் விடப்படுவதால், கடைசியாக இணைந்திருக்கும் இந்தத் தருணம் உணர்ச்சிமயமானது'' என டோனி உருக்கமாகத் தெரிவித்துள்ளார்.

சம்பியன்ஸ் லீக் கிரிக்கெட்டில் சம்பியன் பட்டம் வென்ற பிறகு பேட்டி அளித்தபோதே சென்னை அணித்தலைவரான டோனி மேற்கண்டாவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



இது எங்களுக்கு மகிழ்ச்சி மயமான மிகப்பெரிய தருணம். ஒரு குழுவாக நாங்கள் விளையாடிய கடைசிப் போட்டி இதுவாகும். துரதிர்ஷ்டவசமாக அடுத்த முறை அனைத்து ஐ.பி.எல். வீரர்களும் ஏலத்தில் விடப்படவிருக்கிறார்கள். எனவே, சில வீரர்கள் எங்களுடன் நீண்ட காலம் இருக்கமாட்டார்கள் என்பது தெரியும். நாங்கள் இணைந்திருக்கும் கடைசிப் போட்டி இது என்பதால் உண்மையிலேயே இது எங்களுக்கு உணர்ச்சிமயமான தருணமாகும்.

இந்த முறை ஐ.பி.எல். கிண்ணத்தை வென்றோம். அதன் தொடர்ச்சியாக இப்போது 'சம்பியன்ஸ் லீக்' கிரிக்கெட் தொடரிலும் சம்பியனாகியிருக்கிறோம். இதைவிட சிறப்பான தருணம் அமையமுடியாது.

அதிர்ஷ்டவசமாக நாங்கள் எங்கள் அணியில் சில வெளிநாட்டு வீரர்களைப் பெற்றோம். பிளமிங், சூப்பர் பயிற்சியாளராகச் செயற்பட்டுள்ளார். ஹைடன் மற்றும் மைக் ஹஸி இருவரும் இளம் வீரர்களுக்குத் தொடர்ந்து உதவிகரமாக இருந்தனர்.

இந்தத் தொடரின் ஆரம்பச் சுற்றிலிருந்து வீரர்களின் செயற்பாடு மிகவும் மகிழ்ச்சியளித்தது. பந்துவீச்சாளர்கள் அபாரமாகப் பந்து வீசினார்கள். குறிப்பாக சுழற்பந்து வீச்சாளரான முரளிதரனுடன் இணைந்து அஷ்வின் பந்துவீசிய விதம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. பாலாஜியின் பந்து வீச்சும் அருமையாக இருந்தது.

இந்தத் தொடர் முழுவதும் நாங்கள் சுழற்பந்து வீச்சாளர்களையே அதிகமாக நம்பிருந்தோம். அவர்கள்(சுழற்பந்து வீச்சாளர்கள்) ஒவ்வொரு சமயமும் என்ன நினைத்து களமிறங்கினார்களோ அதைச் செய்து முடித்தனர்.

தொடர் தொடங்கும்போது சில வீரர்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர். ஆனால், அவற்றை எல்லாம் சமாளித்து கிண்ணத்தைக் கைப்பற்றியிருக்கிறோம். இது உண்மையிலேயே திருப்தியளிக்கிறது.

அதுமட்டுமின்றி, இங்குள்ள சூழ்நிலையும் மிகச்சிறப்பாக இருந்தது. டர்பனில் நாங்கள் விளையாடியபோது, எங்களுக்கும் நிறைய ஆதரவு இருந்தது. இரு அணிகளுக்கும் சரிசமமான ஆதரவு காணப்பட்டது.

- இவ்வாறு டோனி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.நகரில் மீண்டும்

சிறந்த முறையில் லயின் போறிங், கிறாங்சாப், சிலிண்டர் போறிங் செய்து கொடுக்கப்படும்.

எந்திரம்ஸ்

395, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.

T.P. 021 222 4540


## மயான அபிவிருத்தி குறித்த கலந்துரையாடல்

கோப்பாய், செப். 29

கோப்பாய் வடக்கு, கந்தன்காட்டு மயான அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் கந்தசுவாமி கோயிலுக்கு அருகிலுள்ள சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மயான அபிவிருத்திச் சபையினர், சனசமூக நிலைய அனைத்து அங்கத்தவர்கள், மயானத்தைப் பயன்படுத்தும் பொதுமக்கள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு வலி. கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் த.நடராஜா கேட்டுள்ளார்.

(ஒ-72)




## தேவை

1. கணனி விரிவுரையாளர்கள் (முழு நேரம்)
2. கணனி போதனாசிரியர்கள் (முழுநேரம்)

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ஆற்றல், அனுபவம் மற்றும் தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கவும்.

**Gateway Centre for Information Technology,**
347, Kasthuriyar Road, Jaffna.


## மாநகரசபை யாழ்ப்பாணம்

### கட்டட நிர்மாண வேலைகளுக்கான பொருள்களுக்கு கூறுவிலை கோரல்

மாநகரசபையின் வேலைத்திட்டங்களுக்கு வேண்டிய கீழ்க்காணும் மூலப்பொருள்களை விரைவாக வழங்கக்கூடியவர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

**1. கருங்கற்களுக்கான கூறுவிலை கோரல்**

| இல | கருங்கற்களின் அளவுகள் | மாநகரசபை எல்லைக்குள் கொண்டுவந்து வழங்குவதற்கான 1 கியூப்பின் விலை |
|---|---|---|
| 01 | ½" அளவுள்ள கருங்கல் | ................................ |
| 02 | ¾" அளவுள்ள கருங்கல் | ................................ |
| 03 | 1" அளவுள்ள கருங்கல் | ................................ |
| 04 | 1½" அளவுள்ள கருங்கல் | ................................ |
| 05 | 2" அளவுள்ள கருங்கல் | ................................ |
| 06 | 4" அளவுள்ள கருங்கல் | ................................ |
| 07 | 6" 9" அளவுள்ள கருங்கல் | ................................ |
| 08 | கருங்கல் கிறேசர் தூள் | ................................ |

குறிப்பு: வற்வரி (12%) செலுத்துபவராயின் 1 கியூப்பின் விலையுடன் வற்வரியையும் உள்ளடக்கி விலையைக் குறிப்பிடுக.

**11. கொங்கிறீற் குழாய்களுக்கான கூறுவிலை**

| இல | வலுவூட்டிய சிமெந்துக் குழாய்களின் விவரம் (RCC குழாய்கள்) | நீளம் | தடிப்பு | உள் விட்டம் | ஒன்றின் விலை |
|---|---|---|---|---|---|
| 01 | கொங்கிறீற் குழாய் | 8' | 3" | 6" | ........ |
| 02 | கொங்கிறீற் குழாய் | 4' | 3" | 6" | ........ |
| 03 | கொங்கிறீற் குழாய் | 8' | 3" | 9" | ........ |
| 04 | கொங்கிறீற் குழாய் | 4' | 3" | 9" | ........ |
| 05 | கொங்கிறீற் குழாய் | 8' | 3" | 12" | ........ |
| 06 | கொங்கிறீற் குழாய் | 4' | 3" | 12" | ........ |
| 07 | கொங்கிறீற் குழாய் | 8' | 3" | 18" | ........ |
| 08 | கொங்கிறீற் குழாய் | 4' | 3" | 18" | ........ |
| 09 | கொங்கிறீற் குழாய் | 8' | 3" | 24" | ........ |
| 10 | கொங்கிறீற் குழாய் | 4' | 3" | 24" | ........ |
| 11 | கொங்கிறீற் குழாய் | 8' | 3" | 36" | ........ |
| 12 | கொங்கிறீற் குழாய் | 4' | 3" | 36" | ........ |

குறிப்பு: வற்வரி (12%) செலுத்துபவராயின் விலையுடன் வற்வரியையும் உள்ளடக்கி விலையைக்குறிப்பிடுக.

குறிப்பு:1 மேற்குறித்த குழாய்கள் உருக்குக்கம்பியில் நியமவிதிகளின் பிரகாரம் படல் அமைத்து 1:2:4 (¾") சிமெந்துக் கொங்கிறீற்றினால் உருவாக்கப்பட்டமை உறுதிப்படுத்த வேண்டும்.

குறிப்பு:2 மேற்குறித்த குழாய்கள் ஒவ்வொன்றுக்குமான பொருத்து குழாய் Collar களின் விலைகளையும் தனித்தனி குறிப்பிடவேண்டும்.

முடிவுத்திகதி: 13.10.2010 ந.ப. 12 மணிக்குப் பிந்தாமல் மேற்காட்டப்பட்ட வடிவில் படிவம் தயாரித்து பூர்த்தி செய்து மாநகரசபையின் செயலாளர் பகுதியில் அதற்கென ஒதுக்கப்பட்ட பெட்டியில் கூறுவிலைகளைச் சேர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**திருமதி யோ.பற்குணராசா,**
மாநகர முதல்வர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம். (சி/571419)

## பாராட்டும் நன்றி நவிலலும்

தரம்– 5 புலமை பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் மாணவர்களான..



| | | |
|---|---|---|
| (1) | நி. மனிமோகன் | 167 |
| (2) | த. ரேணுஜன் | 167 |
| (3) | பா. சானு | 167 |
| (4) | க. கேதுசன் | 164 |
| (5) | க. கஜித் | 164 |
| (6) | செ.நிருபா | 163 |
| (7) | த. ரேணுஜா | 157 |
| (8) | ஸ்ரீ. திலக்ஷி | 156 |
| (9) | உ. மோவிதா | 151 |
| (10) | க. திலக்ஷன் | 150 |
| (11) | சி. யதுர்ஷன் | 146 |
| (12) | வே. லதீபா | 144 |
| (13) | வ. கம்சிகா | 142 |
| (14) | த.பவீனா | 142 |

எமது பிள்ளைகளையும், கல்லூரியில் சித்தியடைந்த ஏனைய மாணவர்களையும் பாராட்டுவதோடு, எமது பிள்ளைகளின் வெற்றிக்கு வழிகாட்டிய ஆசிரியர்களுக்கும், குறிப்பாக எம் இனிய ஆசான் திரு.த. தயானந்தன் (ஆசிரியர், யா/ மாகாஜனக்கல்லூரி) அவர்களுக்கு எமது அன்பு கலந்த நன்றியை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெற்றோர்.

(சி/571415)



25 ஆவது வருடம் உதயன் வெள்ளிவிழாவை முன்னிட்டு

## மின்னல் வேக கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

உதயன் நிறுவனம் தனது வெள்ளிவிழாவையொட்டி யாழ்.மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையே ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது. இதில் பங்குகொள்ள விரும்பும் கழகங்கள் தமது அணியில் கலந்துகொள்ளும் வீரர்களின்/ வீராங்கனைகளின் பெயர்களைக் குறிப்பிட்டு 07.10.2010 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்களை உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

## மரண அறிவித்தல்

### விசாகப்பெருமான் நாகம்மா (அம்மாச்சி)

சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட விசாகப்பெருமான் நாகம்மா நேற்று (28.09.2010) செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு விசாகப்பெருமானின் அன்பு மனைவியும் கமலாம்பிகை, விஜயசுந்தரி, உமாபதி, சிவராமன் ஆகியோரின் அன்புத் தாயாரும் அமரர் சோ.வித்துவசிங்கம் மற்றும் பொ.கார்த்திகேசு, உ.ஞானேஸ்வரி, சி.தவமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் சோ.கலாவதி, வி.சோமசேகரம், க.மாலதி, சி.ரூபவதி, வ.சித்திராதேவி, செ.பத்மினி, வி.சாந்தினி, வி.நந்தினி, அ.மிருணாளினி, சு.நிதர்சனி, உ.சயந்தன், கு.ஜெயந்தினி, அ.வாசுகி, இ.யோகசக்தினி, சி.சற்குரு ஆகியோரின் அன்பு பேர்த்தியும் சோ.வேணுதாஸ், சோ.ரூபதாஸ், சோ.சிவதாஸ், சோ.கஜன், சோ.புஸ்பதாஸ், ப.ரமணி, வ.அரவிந்தன், ம.சிவரூபினி, சோ.சரவணன், சோ.தயாளினி, வே.நாகநந்தினி, சி.பிரசாந், சி.கிரிஷாந், சி.திவ்யா, செ.அலெக்ஸ், செ.ஹென்றி, வி.பானுரேகா, வி.கிருஷிகா, வி.மிருத்திகா, சு.சாஜினி, சு.சாஜனா, சு.சாஜனன், அ.அட்சரன், அ.கவின்மலர், கு.துஷாந், கு.கஸ்தூரி, ச.ரேஷிகா, ச.ஜதுரிஷன், இ.சாகித்தியன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ப.விதுஷன், க.வினோத், ம.பரிதி, ம.வழுதி, ம.ஏந்தி, அ.தமிரா, வே.ஜனுபா ஆகியோரின் அன்பு கொப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2010) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு. (103942)

## எமது நன்றிகள்

Asian Alliance காப்புறுதி நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளையின் முதலாம் ஆண்டு நிறைவில் எங்களை வாழ்த்திய அனைத்து அன்பான நெஞ்சங்களுக்கும் எங்கள் வியாபார முன்னேற்றத்துக்கு உறுதுணையாக இருக்கின்ற எங்கள் வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது நிறுவனத்தின் காப்புறுதிக் கொள்கைகளை மனமுவந்து பாராட்டும் அனைத்து நலன் விரும்பிகளுக்கும் நாம் இத்தருணத்தில் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். நேற்றைய தினம் எமது கிளையை வாழ்த்தி உதயன் தினசரி நாளிதழில் சிறப்பு மலர் வெளியிட்ட மாண்புமிகு அமைச்சர் திரு.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் யாழ்.மாநகர முதல்வர் மதிப்பிற்குரிய திருமதி யோ.பற்குணராசா அவர்களுக்கும் யாழ். அரச அதிபர் மதிப்பிற்குரிய திருமதி இமெல்டா சுகுமார் அவர்களுக்கும் மகப்பேற்று நிபுணர் வைத்திய கலாநிதி Dr.சிறிதரன், பேராசிரியர் மற்றும் பீடாதிபதி திரு.க.தேவராஜா, IIS நிறுவன முதல்வர் திரு.விக்னேஸ், பிரம்மஸ்ரீ ஸ்ரீசந்தனக்குருக்கள், சிவஸ்ரீ விநாயகமூர்த்தி குருக்கள், கிருபா லேணேர்ஸ் உரிமையாளர் திரு.கிருபாகரன், திரு.வை.சந்திரசேகரம், திரு.செல்வராஜா ஈசன் இவர்களுடன் மானிப்பாய் சுந்தர்ஷன் ஸ்தாபனத்தாரையும் இத்தருணத்தில் எமது இதயக் கமலங்களில் இருந்து வரும் இனிய நன்றிகளை மிகப்பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம். அனைவரது எதிர்பார்ப்பிற்கமைய எங்கள் நிறுவனத்தின் காப்புறுதிச் சேவையானது மிகவும் திறம்படவும் அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் நியாயமாகவும் கொண்டு செல்ல நாம் திடசங்கற்பம் பூண்டுள்ளோம் என்பதனை இத்தருணத்தில் கூறி அமைகின்றோம்.

முகாமையாளரும், ஊழியர்களும்,
**ஏசியன் அலையன்ஸ் காப்புறுதி நிறுவனத்தினர்,**
**யாழ்.கிளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நல்லிணக்கம் மலர்வதற்கு சர்வதேச சமூகம் உதவிசெய்ய வேண்டும்

## ஐ.நா. சபையில் மாலைதீவு கோரிக்கை

கொழும்பு, செப். 29

இலங்கையில் தேசிய நல்லிணக்கம் மலர்வதற்கு சர்வதேச சமூகம் உதவி செய்ய வேண்டும் - என்று ஐ.நா. சபையில் மாலைதீவு அரசு கோரி உள்ளது.

ஐ.நாவின் 65ஆவது பொதுக் கூட்டத்தொடர் நியூயோர்க் அலுவலகத்தில் இடம்பெற்று வருகின்றது.

இதில் கலந்துகொண்டு மாலைதீவின் உப ஜனாதிபதி உரையாற்றினார். அப்போதே அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

அவர் மாலைதீவின் அரசியல் நெருக்கடியைத் தீர்த்து வைப்பதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பெரும் பங்காற்றினார் என்றும் பாராட்டினார்.

அவர் தனதுரையில் தெரிவித்தவை வருமாறு -

மாலைதீவின் அரசியல் நெருக்கடிக்கு அமைதியான முறையில் தீர்வு காண உதவி செய்த சர்வதேச சமூகத்துக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். குறிப்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எனது நன்றிகள்.

அவர் மாலைதீவின் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண்கின்றமையில் மிகவும் காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ளார். கடந்த 25 வருட கால யுத்தத்தில் இருந்து இலங்கை மீண்டிருக்கின்றது. எனவே அதன் தேசிய நல்லிணக்கம், மறுமலர்ச்சி ஆகியவற்றுக்கு சர்வதேச சமூகம்தான் உதவி செய்ய வேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.

## வடக்கு புனர்வாழ்வு அதிகார சபையின் பிராந்திய அலுவலகம் வவுனியாவில்

### செயலகத்தில் இன்று முதல் செயற்படும்

யாழ்ப்பாணம், செப்.29

வடக்கு மாகாண புனர்வாழ்வு அதிகார சபையின் பிராந்திய அலுவலகம் இன்று புதன்கிழமை வவுனியா செயலகத்தில் திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வதியும் மக்கள் தமது புனர்வாழ்வு நஷ்டஈடு தொடர்பான தேவைகளை இங்கு உடனுக்குடன் பூர்த்தி செய்து கொள்ள முடியும்.

இதுவரை காலமும் புனர்வாழ்வு-சிறைச்சாலைகள் அமைச்சின் கீழ் புனர்வாழ்வு அதிகார சபை செயற்பட்டு வந்தது. குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வடக்கின் 5 மாவட்டங்களுக்கும் உதவிப்பணிப்பாளர்கள் நியமனம் பெற்றுள்ளனர். (ஒ-302)


LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
www.lavahospitals.com/blog
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
Basic Body Checkup
அடிப்படை உடற் பரிசோதனைகள்
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=



A/L 2010 பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு.
இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
DMI COMPUTER EDUCATION
Real Offer 75% for All
உண்மைக் கட்டணக்கழிவு
DIPLOMA IN PC APPLICATION
DIPLOMA IN MICROSOFT OFFICE
ADV. DIP. IN HARDWARE & NETWORKING
DIPLOMA IN PRE-PRESS DESKTOP PUBLISHING
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
DIP. IN WEB PAGE DESIGNING AND DEVELOPMENT
TALLY FINANCIAL ACCOUNTING TRAINING
ICDL AutoCAD INTERNET E-MAIL
மல்ரிமீடியா கற்கைநெறிகள்.
DIP. IN VIDEO PRODUCTION AND MULTIMEDIA
MASTERS DIPLOMA IN DIGITAL ANIMATION
MASTERS DIP. IN MULTIMEDIA & ANIMATION
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
1/10/2010 9.00 a.m.
2/10/2010 10.00 a.m.
4/10/2010 9.00 a.m.
சர்வதேச அங்கீகாரத்துடன்.
veta Experts in English Training An ISO 9001:2008 Company
IAB
ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்
Spoken English பயிற்சி மையம்
ஆங்கிலம் பேசலாம் வாங்க
Come, let's speak fluent English
veta® Experts in English Training
An ISO 9001:2000 Company
veta ஆசியாவில் 140 நகரங்களில் 250 கிளைகள் மூலம் ஆங்கிலத்தைப் பயிற்றுவிப்பதில் வல்லுநர்கள், 25 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களின் பேச்சுத் திறமைக்கு ஒளி விளக்காக விளங்கியவர்கள்.
Foundation English — For beginners who want to read and write English.
Fluent English First Step — For people who are doubtful about their English and want to speak English fluently.
Fluent English Next Step — For sperkers of English who want to master diction and style.
For whom ?
உயர் கல்விகற்போர், பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்லவுள்ளோர், Student Visa க்கு விண்ணப்பிக்க இருப்போர்க்கு.
யாழில் முதன்முறையாக Online பயிற்சி பாடங்கள். (கணினி ஊடான ஒலி - ஒளி வாயிலான பயிற்சிகள்.)
சிங்கப்பூரில் இருந்து பாடப்புத்தகங்கள் மற்றும் சான்றிதழ்கள்.
veta புதிய பிரிவுகள் ஆரம்பம்.
1/10/2010 7.30 a.m. &10.30 a.m.
2/10/2010 8.30 a.m. &10.00 a.m. புதிய பிரிவுகள் ஆரம்பம்
IELTS
நவீன நுட்பங்களுடன் இலகுவான முறையில் ஆங்கிலம் பேசப் பயிலலாம்.
மேலதிக விபரங்களுக்கு
DMI COMPUTER EDUCATION
No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403
M. M. V. வீதி, நெல்லியடி. Tel. : 021-320 7700


## அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப்-29

யாழ்மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றின் தலைவர், பொது முகாமையாளர் ஆகியோருக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகளுடன் மக்கள் வங்கியின் உயர் அதிகாரிகள் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதால், கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் தெரிவித்துள்ளார். (எ)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை

தென்மராட்சி, செப்.29

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளின் ஆசிரியைகளுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு சாவகச்சேரி நகரசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென முன்பள்ளி ஆசிரியர் ஒன்றியச் செயலாளர் திருமதி க.சாந்தகுமாரி அறிவித்துள்ளார். (எ-207)

## சுழிபுரம் பிரதேச சபைக்கு இரு மாடிக் கட்டடம்

மானிப்பாய், செப்.29

வலி மேற்கு, சுழிபுரம் பிரதேச சபைக்கு இரு மாடிகளைக் கொண்ட பலநோக்கு கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

3 கோடியே 50 லட்சம் ரூபா செலவில் மேற்படி நவீன மாடிக்கட்டடம் அமைத்து விரைவில் வழங்கப்படும்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி இவ்வாறு தெரிவித்தார்.

சுழிபுரம் பிரதேச சபை தற்போது மிகவும் வசதிகுறைந்த சிறு கடைத்தொகுதியிலேயே செயற்பட்டு வருகின்றது.

அராலி, சுழிபுரம், வட்டுக்கோட்டை, சங்கானை ஆகிய நான்கு உப அலுவலகங்களைக் கொண்ட பரந்த பிரதேசம் சுழிபுரம் பிரதேச சபை.

இப்பிரதேச மக்களின் தேவைகளையும் சேவைகளையும் நிறைவேற்றவே உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் இரு மாடிகளைக் கொண்ட இந்தக் கட்டடத்தை 2011 இல் கட்டி வழங்கவுள்ளோம். என்றும் பிரதம செயலாளர் மேலும் தெரிவித்தார். (ஓ-302)


VACANCIES in IT Field
யாழ் முன்னணி கணனி நிறுவனத்துக்கு பின்வரும் பதவி நிலைகளுக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
(யாழ்ப்பாணம், நெல்லியடி, அச்சுவேலி, சாவகச்சேரி, மானிப்பாய், சுன்னாகம் ஆகிய இடங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
● கிளை முகாமையாளர்
குறைந்தது 2 வருட அனுபவம்.
● கணனிப் போதனாசிரியர் - முழுநேரம்.
MS Office, DTP ,- தெரிந்தவர்கள் - கணனி நிறுவனத்தில் வேலைசெய்த அனுபவம் உள்ளவர்கள் - பயில விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
● வரவேற்பாளர் (Receptionist) ● சந்தைப்படுத்தல் உத்தியோகஸ்தர்
மேற்குறித்த பதவிகளில் பணியாற்ற விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை (Bio Data) 7 நாட்களுக்குள் அனுப்பிவைக்கவும்.
விளம்பர இலக்கம். 4077
மே/பா உதயன் No.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## வையகம் உள்ளவரை உமை மறவோம்



### துரைசிங்கம் விஜயமனோகர்

(அபிவிருத்தி உதவியாளர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி)

ஆழியவளை பெற்றெடுத்த
அழியாச் சொத்தே!
எமக்கு வந்தாய் மாமாவாய்
நாட்டின் துன்பத்தால் வாடியபோது
கல்வி கற்க எம்மை
உரமூட்டி விழுதுவிடச் செய்தவரே!
உன் கச்சேரி உறவுகளும்
என்னை அத்தான் என அழைத்தபோது
பூரித்தேன் உன் பாசத்தைக் கண்டு
உன் கழுத்தில் மணமாலை ஏறியபோது
பெருமகிழ்வு அடைந்த எமக்கு
மணமாலை காயமுன்பு
பேரிடியாய் வந்ததே உன் துயரச் செய்தி
பொய்க்காதோ எனக் கடவுளை வேண்டினோம்,
ஏமாற்றமே,
உன் பிரிவை எண்ணி நாம் மட்டுமல்ல
கச்சேரியே திணறுகின்றது.
காலத்தால் நீ விண்ணுலகம் சென்றாலும்
உன் உதவியால் இளஞ்சிட்டுக்கள் பலர்
உன் பெயர் சொல்லி வாழ்வார்கள்
வையகம் உள்ளவரை....

உன் பிரிவால் துயருறும்
இளையத்தான் குடும்பம்,
நிகல்யா வாணிபம், கிளிநொச்சி, விசுவமடு.
(103944)

## மரண அறிவித்தல்

### செல்லையா சிவனேசன்



(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்)

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, இடைக்காட்டை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவனேசன் நேற்றுமுன்தினம் (27.09.2010) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இரத்தினம்மா தம்பதியினரின் அன்பு மகனும் செல்லப்பாக்கியம் (ஓய்வுபெற்ற லிகிதர் - வடமராட்சி கல்வி வலயம்) அன்புக் கணவரும் பவதாரணி, தாஸ்ரதன், திவ்யா (மாணவி, யா/இடைக்காடு மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் க.சுதாஸ்குமாரின் (ஆசிரியர், யா/கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயம்) பாசமிகு மாமனாரும் இந்திராணி பாலசுப்பிரமணியம், மகேஸ்வரமூர்த்தி, கங்காதரன், அசோகவதி பாலச்சந்திரன் (U.K), பிறேமா வெற்றிவேல், குகனேசன் (டென்மார்க்), றஞ்சன் (ரவி U.K) அகியோரின் பாசமிகு சகோதரரும் துளசிதனின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2010) புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இடைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலை வீதி,*
*இடைக்காடு, அச்சுவேலி.* (சி/571442)

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

### செல்லத்துரை ஜெகன்

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீர் அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்
கரன், நிக்ஷென்.
உடுப்பிட்டிராய் வடக்கு. (103944)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்சேகாவின் சகாவான சேனகவுக்கு பிணை வழங்க சட்டமா அதிபர் எதிர்ப்பு


கொழும்பு, செப். 29

சரத் பொன்சேகா எம்.பியுடன் சேர்ந்து அரசைக் கவிழ்க்கும் சதியில் கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் சேனக டீ சில்வாவுக்கு பிணை வழங்குகின்றமையை சட்டமா அதிபர் திணைக்களம் கடுமையாக ஆட்சேபித்தது.

இவர் பிணை அனுமதி கோரி கொழும்பு மேல்நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இம்மனு மீதான விசாரணை நேற்று இடம்பெற்றபோதே சட்டமா அதிபர் திணைக்களம் இவர் வெளியில் வருகின்றமையைக் கடுமையாக எதிர்த்தது.

இவரைப் பிணையில் வெளியில் விடலாமா? இல்லையா? என்கிற தீர்மானத்தை எதிர்வரும் டிசம்பர் 13 ஆம் திகதி வழங்குவதாக நீதிமன்றம் அறிவித்தது.



சுகயீனமுற்ற நிலையிலும் கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு சரத் பொன்சேகா நேற்று வருகை தந்திருந்தார்.

## பொன்சேகாவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளானார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இந்தக் குற்றப்பத்திரிகைக்கு அமைய விசாரணைகள் எதிர்வரும் டிசம்பர் 13ஆம் திகதி ஆரம்பமாகும் என மேல்நீதிமன்ற நீதிவான் தீபாலி விஜயசுந்தர அறிவித்துள்ளார். (ஓ-சி)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் தீர்வுக்கான தேவை இப்போது இல்லை என ஐ.தே.கட்சி தெரிவித்திருப்பது அதன் சுயரூபத்தை தமிழ் மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது என ஈ.பி.டி.பி. தெரிவித்துள்ளது.

ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான எம்.சந்திரகுமார் தெரிவிக்கையில்,

"புலிகள் வன்முறையை மேற் கொண்டனர். இப்போது தமிழ் மக்கள் ஜனநாயகக் காற்றை சுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். ஏனைய மக்களைப் போல் தமிழ் மக்களும் சரி சமமாக வாழவேண்டும். அதற்கு அரசியல் தீர்வு அவசியமானது.

அரசியல் தீர்வுக்கான தேவை இப்போது இல்லை என ஐ.தே.கட்சி கூறியிருப்பது முட்டாள்தனமானது - என்றார்.

மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கருத்துத் தெரிவிக்கையில்;

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு தேவை என்பதை ஜனாதிபதியே ஏற்றுக் கொண்டுள்ளார். நாங்கள் இப்போது எந்த மாதிரியான தீர்வு தேவை என்பது குறித்து ஆராய்ந்து வருகின்றோம். வெளிநாடுகளிலுள்ள தீர்வு மாதிரிகள் குறித்து வெளிநாட்டுத் தூதரகங்களுடன் பேசி வருகின்றோம்.

சமீபத்தில் அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்து இனப் பிரச்சினைத் தீர்வுக்காக அமெரிக்கா மேற்கொண்ட வழிமுறைகள், மாதிரிகள் குறித்து பேச்சு நடத்தினோம்.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் ஆகியோரும் கலந்துகொண்டனர். இதற்கு முன்னர் இதேமாதிரியான சந்திப்பொன்று இத்தாலி தூதுவருடனும் இடம் பெற்றது - என்றார். (அ-சி)

# கனடாவில் புலிகளின் செயற்பாடுகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு பீரிஸ் கோரிக்கை

கொழும்பு, செப். 29

கனடாவில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கு எதிராகச் செயல்வலுமிக்க நடவடிக்கை எடுக்குமாறு அந்நாட்டு அரசிடம் இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

நியூயோர்க்கில் நடைபெற்ற 65 ஆவது ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத் தொடரில் பங்குபற்றுவதற்காக அமெரிக்கா சென்ற அமைச்சர், கடந்த சனிக்கிழமை கனடா, ஸ்பெயின் மற்றும் கொரிய நாட்டு வெளிவிவகார அமைச்சர்களை சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது நாட்டின் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள், சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் தொடர்பாக அமைச்சர் பிரீஸ், குறித்த மூன்று நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்கும் எடுத்துக் கூறியுள்ளார்.

கனேடிய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்தபோது, இலங்கையில் நம்பிக்கை மனப்பான்மை ஏற்பட்டுள்ளமையை கனேடிய வெளிவிவகார அமைச்சருக்கு ஜி.எல்.பீரிஸ் விளக்கிக் கூறினார்.

இதேவேளை, இடம் பெயர்ந்தோரை மீள்குடியேற்றம் செய்தல் மற்றும் சமரச் செயற்பாடுகளுக்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றில் இலங்கையின் செயற்பாடுகள் திருப்தி அளிக்கின்றன என்று கனேடிய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்போது குறிப்பிடத்தக்களவு விடுதலைப் புலி உறுப்பினர்கள் கனடா உட்பட தமது செயலாக்கத் தளங்களை வெளிநாடுகளிற்கு மாற்றியுள்ளனர் என அமைச்சர் பீரிஸ், குறித்த நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

கனடாவில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கெதிராகச் செயல்வலுமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கனேடிய அரசை அமைச்சர் பீரிஸ் கோரினார். அத்துடன் இச்செயலின் பிரகாரம் கனேடிய மண்ணில் இலங்கையின் பாதுகாப்பு மற்றும் இறைமைக்கு எதிரான செயற்பாடுகள் நடைபெறா எனவும் அவர் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் மற்றும் அதன் முன்னணி ஒழுங்கமைப்புகளினால் நிதி சேர்க்கப்படுவதைத் தடுப்பதற்கு கனடா மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக கனேடிய அமைச்சர் விளக்க மளித் துள்ளார்.

'ஓசியன் லேடி' மற்றும் 'சன் சீ' கப்பல்கள் மூலம் இலங்கையிலிருந்து கனடாவிற்கு மேற்கொள்ளப்பட்ட ஆட்கடத்தலை குறித்தும் இரு அமைச்சர்களும் கலந்துரையாடினர்.


## இணைந்த கணிதம்

திரு.P.விமலநாதன் B.Sc. (Hons)
2012 A/L, 2011 A/L, DAY
(ஆங்கிலம், தமிழ்மொழிமூலம்)
ஆரம்பம்: 03.10.2010 ஞாயிறு - 12
நேர அட்டவணை அலுவலகத்தில்

புதிய பிரிவுகள் ஆரம்பம்

SPOKEN ENGLISH By: Mr.Britto
புதன், வெள்ளி 4 pm
சிங்களம் திரு.K.கார்த்திகேசன்
செவ்வாய், வியாழன் 5 pm
ஆரம்பம்: 29.09.2010
பௌதிகவியல் By.M.கருணாநிதி
2012 A/L அலைகளும் அதிர்வுகளும்
8 a.m (ஆங்கில மூலம்) 12 (தமிழ்மூலம்)
2011 A/L பின்னியல் 9.30 a.m (ஆங்கிலம்)
ஆரம்பம்: 02.10.2010 சனி

NEW Education WORLD,
ஆனைப்பந்தி.



## வீடு தேவை

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் நிறுவனம் ஒன்றிற்கு வாடகைக்கு வீடு தேவை.
தொடர்பு : கிரான் பீற்றர்
0773427843


## 450 ஏக்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாயத் திணைக்கள யாழ். மாவட்ட பிரதிப் பணிப்பாளர் ரி.சிவகுமார், வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்தி ரசிறி, யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார், மு.சந்திரகுமார் எம்.பி. ஆகியோர் உட்பட யாழ்.மாவட்ட விவசாய சம்மேளனங்களின் பிரதிநிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் விவசாயிகள் 17 பேருக்கு மானிய அடிப்படையில் லான்ட் மாஸ்ரர்களும் 13 விவசாய சம்மேளனங்களுக்கு இலவசமாக லான்ட் மாஸ்ரர்க ளும் வழங்கப்பட்டன.

அத்துடன் விவ்சாயிகள் 21 பேருக்கு மானிய அடிப்படை யில் விதை நெல்லும் 13 விவ சாய சம்மேளனங்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும் வழங்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து ஏர்பூட் டும் விழாவில் கலந்துகொண்ட பிரமுகர்கள் திருநெல்வேலியில் உள்ள விவசாயத் திணைக்களத்துக்கு சென்று அங்கு விவசாயிகளை சந்தித்துக் கலந்துரையாடினர். (ஓ-9)


## ஆசிரியர் வே. அன்பழகன் அவர்கள்

தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை- 2010 வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணத்தில்
அன்பொளி கல்வியகம்
யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

சாவகச்சேரியில்
அன்பொளி கல்விநிலையம்
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

வகுப்புக்கள் 03.10.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பம்.

குறிப்பு:- பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விபரங்கள், நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

சின்ன விழி அசைத்துச் சிரித்துவரும் சித்திரங்களை அள்ளி அணைத்து அரிய கல்வியினை மகிழ்வுடனே ஊட்டுவோம்.

இயக்குனர்கள்.


## கண்ணீர் அஞ்சலி

*முருகேசு சத்தியநாதன்*

(முன்னாள் இ.மின்சார சபை ஊழியர் சுன்னாகம்)

எமது குடும்ப நண்பரான முருகேசு சத்தியநாதன் அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயறுரும் அவரது குடும்பத்திற்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

*தவம் ஸ்ரோர்ஸ்*
*அம்பலவாணர் வீதி, உடுவில்.*

தயா குடும்பம்.

## அமைச்சரவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியஸ்தர்கள் இருவருக்கு அமைச் சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் மேலும் ஐந்துபேர் பிரதியமைச்சர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

அநேகமாக ஏ ஆர்.எம்.ஏ. காதர், லக்ஷ்மன் செனவிரத்ன, ஏர்ள் குணசேகர ஆகியோருக்குப் பதவி வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-சி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு/ஸ்ரீ/சுப்பிரமணிய வித்தியாசாலை புதுக்குடியிருப்பு மாணவன்

செல்வன் அ.சுஜீவன்

2010 புலமைப்பரிசில் பரீட்சையில் 175 புள்ளிகள் பெற்று முல்லை மாவட்டத்தில் 2ஆம் இடத்தைப் பெற்றுள்ள இவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இவரை வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் நலன் விரும்பிகளுக்கும் எமது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறோம். இன்னும் இடர்மிகு நேரத்திலும் ஓடோடி வந்து எம்மைத் தாங்கி ஆக்கமும் ஊக்கமும் அளித்த அன்பு இனிய இதயங்களே உங்கள் எல்லோரையும் இவ்வேளை நன்றியோடு நினைக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
குடும்பத்தினர்.

சிகரம் மருந்துக்கடை
முல்லை வீதி,
புதுக்குடியிருப்பு.

சிகரம் மருந்துக்கடை
131,ஸ்ரேசன் றோட், வவுனியா.

## மரண அறிவித்தல்



முருகேசு சத்தியநாதன் (C.E.B., Chunnakam)

வாரியப்புலத்தை பிறப்பிடமாகவும் அம்பலவாணர் வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சத்தியநாதன் நேற்று (28.09.2010)செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசமலரின் அன்புக் கணவரும் மதிவதனி நவநீதன் (C.E.B., Chunnakam) ஆகியோரின் அன்புத் தந்தையும் தனபாலசிங்கத்தின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.09.2010) புதன்கிழமை பி.ப 3 மணிக்கு நடைபெறும்.

அம்பலவாணர் வீதி, உடுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.


## வீடு விற்பனைக்கு

கரவெட்டி பிரதேச வைத்திய சாலைக்கு அருகில் 2½ பரப்புக்காணியில் நல்ல தண்ணீர் கிணற்றுடன் புதிதாகக் கட்டப்பட்ட வீடு உடன் விற்பனைக்கு.

தொடர்புக்கு:
0715397117


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லீரலைப் பாதுகாப்போம்!

நமது உடலில் நடைபெறும் இரசாயன மாற்றங்கள் அனைத்திற்கும் அடிப்படையாகத் திகழ்கிறது கல்லீரல். கல்லீரல் பாதிக்கப்படும் போதுதான் மஞ்சள் காமாலையில் இருந்து நமது உடலைப் பெரிதும் பாதிக்கும் பல நோய்கள் ஏற்படுகின்றன.

நமது நாட்டைப் பொறுத்தவரை கல்லீரல் தொடர்பான நோய்கள் ஏற்படுவதற்கு இரண்டு காரணிகளே முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒன்று, மதுப் பழக்கம். இரண்டாவதாக, கொழுப்பு நிறைந்த உணவுகள்.

அளவிற்கு அதிகமாகக் மது அருந்துவதால் கல்லீரலிற்கு சாதாரண மஞ்சள் காமாலை நோய், நீரிழிவு ஆகிய நோய்களும் ஏற்படுகின்றன. இவற்றை அற்கஹோல் தொடர்பான கல்லீரல் நோய்கள் என்று மருத்துவம் கூறுகிறது.

மற்றொரு வகையான பாதிப்பு, கல்லீரலில் கொழுப்பு அதிகமாகச் சேர்வதால் உண்டாகிறது. இதனை அற்கஹோல் அல்லாத கல்லீரல் கொழுப்பு நோய்கள் என்று மருத்துவம் வகைப்படுத்துகிறது.

இந்த இரண்டாவது வகை - அதாவது கொழுப்பு சேகரிப்பால் கல்லீரல் பாதிக்கப்படுவது - ஒருவருக்கு 35 வயதில் ஏற்படுகிறது என்று வைத்துக் கொண்டால், அவர் 55 வயதை அடையும்போது, கல்லீரல் வீக்கம் ஏற்பட்டு, அதனை மாற்றுக் கல்லீரல் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டிய நிலையேற்படுகின்றது. கல்லீரல் வீங்கி அதைச் சிகிச்சையால் குணப்படுத்த முடியாத நிலையைத்தான் 'லிவர் சிர்ரோசிஸ்' என்றழைக்கின்றனர்.

நமது நாட்டைப் பொறுத்தவரை பலரும் மதுவினாலும், கொழுப்பு உணவுகளாலும் கல்லீரல் பாதிப்பற்குள்ளானவர்களாக உள்ளனர். மது அருந்துபவர்கள், சாப்பிடும் உணவு வகைகளில் பொதுவாக எண்ணெய் கலந்து தயாரிக்கப்படும் உடனடி உணவுகளாகவும் கொழுப்புச் சத்து அதிகம் கொண்ட உணவுகளாகவும் இருப்பதால் கல்லீரலிற்கு பாதிப்பு அதிகமாகிறது. இதுவே கல்லீரலைப் பலவீனப்படுத்தி, அது தொடர்பான எல்லா நோய்களுக்கும் மூல காரணிகளாக அமைகிறது.

அள்வான மதுப் பழக்கம், முறையான உணவுப் பழக்கம், காலையில் உடற்பயிற்சி ஆகியன கல்லீரலைப் பாதுகாக்கும் மிகச் சாதாரண வழிகளாகும். பாதிக்கப்பட்டாலும் மருத்துவத்தின் உதவியால் மீண்டும் பழைய நிலைக்கு வந்து செயற்படும் திறன் பெற்ற உடலின் ஒரே உறுப்பு கல்லீரல் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கதாகும். எனவே, அதிகமாக மரு அருந்தல், கொழுப்பு உணவுகளை அதிகம் சாப்பிடுதல் ஆகியவற்றை தவிர்த்தால் சிறந்தது. ஆரோக்கியமான கல்லீரலுடன் வாழ்நாள் முழுவதும் நன்றாக வாழலாம்.

நமது உடலில் கல்லீரல் தான் மிகவும் உதவும் உறுப்பு. நமது உடலில் ஏற்படும் பல இரசாயன மாற்றங்களுக்கு அதுவே அடிப்படையாக உள்ளது. காயப்பட்டாலும் மீண்டும் பழைய நிலைக்கு வரும் திறன் கொண்டது. ஆனால் மதுப்பழக்கம், கொழுப்புணவுகள் மூலம் அதனை அதிகமாக பாதிப்படையச் செய்வீர்களானால், அது செயலற்றுப் போய்விடும். அதன் விளைவாக மற்ற உறுப்புகளும் பாதிக்கப்படும் என்று எச்சரிக்கிறனர் மருத்துவர்கள்.

மதுப்பழக்கத்தால் கல்லீரல் பாதிக்கப்பட்டவர்களிடம் களைப்பு, மலச்சிக்கல், மஞ்சள் காமாலை ஆகிய நோய்களுக்கான இலகுவான அறிகுறிகள் காணப்படும். இதனைக் கண்டவுடன் உடனடியாக மருத்துவரை அணுகி, குருதிப் பரிசோதனை உள்ளிட்ட உடல் சோதனைகளைச் செய்து, உடல் நிலையை அறிந்து, உரிய சிகிச்சை பெற வேண்டும். அதனைச் செய்யத் தவறினால் அது கல்லீரல் வீக்கத்தில் (லிவர் சிர்ரோசிஸ்) சென்று முடியும். அந்த நிலையில் கல்லீரல் மாற்றுச் சிகிச்சை தவிர வேறு வழி இல்லை.

எனவே, வெளியிடங்களில் உணவு அருந்தும் போதும், நண்பர்களுடன் வாழ்வின் ஆனந்தமான அந்தப் பொழுதை மதுபானத்துடன் கழிக்கும்போதும் மேற்கூறிய விடயங்களை நினைவில் நிறுத்தினால் கல்லீரலைப் பாதுகாக்கலாம்.

TOSHIBA
Leading Innovation >>>
e-STUDIO

வேகத்திலும் செயற்றிறனிலும் முதன்மை வகிக்கும் டொஷிபா இயந்திரங்கள் இப்பொழுது உங்கள் செலவைக் குறைப்பதற்கும் வழிகாட்டுகின்றன

அதிவேகமாக அச்சிடக்கூடிய e-studio 255/305/355/455 இயந்திரங்கள், இந்த வகையைச் சேர்ந்த அதிசிறந்த பிரின்டர்கள், கொப்பியர்கள் மற்றும் ஸ்கேனர்களாக முன்னணி வகிக்கின்றன.

e-BRIDGE தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவதால், user interface மற்றும் முன்னேற்றகரமான சிஸ்டம் Software மூலம் இயந்திரத்தின் செயற்றிறன் உச்ச நிலைக்கு அதிகரிக்கப்படுகின்றது.



e-STUDIO255
e-STUDIO305
e-STUDIO355
e-STUDIO455



Print Copy Scan Fax

மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்:
அஷோக் - 0777 725241/ அலீம் - 0777 278472/ சஞ்ஜீவ - 0777 386909

அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்:
JKOA
இணையத்தளம்: www.jkoa.com

'எனது தேவைகளை நன்கறிந்த
செலான் வங்கி எப்போதும் நம்பிக்கையானது'

24k 30,250/-
22k 27,200/-
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.



ரூபா 1000/- க்கு மாதாந்த வட்டி ரூபா 11.25 மட்டுமே*
குறைந்த வட்டி நிறைந்த தொகை
• உங்கள் விருப்பத்திற்கேற்ப 3, 6 அல்லது 12 மாத தவணைகளில் கட்டணம் செலுத்துதல்
• முத்திரைக் கட்டணம் இல்லை
• தெரிவுசெய்யப்பட்ட வங்கிக் கிளைகளில் வார இறுதி நாட்களில் அடகுச் சேவை
மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும் 2456927, 077 2092837
செலான் தங்க நகை அடகுச் சேவை
செலான் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன் முதலாக வேலைக்குச் செல்லும்போது...

எல்லோரும் வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் இன்றைய காலகட்டத்தில் தோன்றியுள்ளது. ஒவ்வொரு மனிதனும் தமது கல்லூரி வாழ்க்கையை முடித்துவிட்டு அடுத்த படியாக ஒரு வேலையைத் தேட முயல்கின்றார்கள். ஆனால் அவ்வளவு சுலபமாக வேலை கிடைத்து விடுவதில்லை. அவ்வாறு கிடைத்தாலும் தான் கண்ட கனவுகளுக்கு எதிர்மாறாகக் குறைந்த சம்பளம், குறைந்த சலுகை குறைவான வசதியுடன் தான் ஒரு வேலை கிடைகிறது. அதனால் அவனது கனவுகள் தகர்கின்றன.எவ்வாறாயினும் உங்களது கடின உழைப்பையும் முழுத்திறமையையும் காட்ட முயற்சி செய்தால் உங்கள் எதிர்காலம் நிச்சயம் பிரகாசமாக இருக்கும். தமது கல்வியை முடித்து விட்டு முதன் முதலாக வேலைக்குச் செல்லும் போது இருக்கவேண்டிய முதல் தகுதி அது எப்படிப்பட்ட கடினமான வேலையாக இருந்தாலும் சரி அவ்வேலையைத் திறமையாகச் செய்ய முடியுமென்ற நல்லதொரு மனோபலம்.

வேலை கொடுக்கும் நிறுவனங்கள் புதிதாக வேலைக்குச் சேர்பவர்களின் எதிர்பார்ப்புகளை உணர்ந்து மதித்தாலும் பெரும்பாலும் அந்நிறுவனங்கள் அவர்களது விருப்பங்களை முற்று முழுதாக நிறைவேற்றுவதில்லை. முதன் முதலில் வேலையில் சேர்பவர்களிடம் நிறுவனம் எதிர்பார்ப்பது என்னவென்றால் நேரம் பார்க்காமல் கொடுத்த வேலையை முடிக்க விரும்பமுள்ளவரா, தேவைப்படும் போது அதிக வேலை செய்யத் தயாராக உள்ளவரா என்பதுதான். இதனால் ஆரம்பகட்ட வேலைகளில் சேருபவர்கள் பரந்த மனப்பான்மையுள்ளவராக இருத்தல் அவசியம். இம் மனப்பாங்கு நீங்கள் வேலை செய்யவுள்ள கம்பனி பற்றியும் அதில் வேலையை பளுவாகக் கருதாமல் அதை உங்கள் திறமையை வெளிப்படுத்தக் கிடைத்தவொரு சந்தர்ப்பமாகக் கருதுங்கள்.முதல் வேலையே ஒருவர் எந்த வேலைகளையும் சிறப்பாகச் செய்ய பயிற்சியளிக்கிறது. எனவே அதில் உண்மையாகவும் திறமையாகவும் உழைத்தால் பின் எந்த நிறுவனத்திலும் எளிதாக வேலை கிடைக்கும். ஆரம்ப கட்ட வேலையிலேயே நீங்கள் மற்றவரின் மதிப்பையும், நம்பிக்கையையும் பெற்றால், முன்னேறுவது எளிதாகவிருக்கும்.

வேலையில் சேர்ந்த பின் அலுவலகம் உங்களுக்கு எல்லா வேலைகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்க்காமல் நீங்களே உங்களுக்குப் பயிற்சி கொடுப்பவராக எண்ணி வேலை நுணுக்கங்களைக் கற்றுக் கொள்ளுங்கள். பிரச்சினை என வரும்போது அதை அமைதியுடன் எதிர்கொள்ளுங்கள்.

எமது முயற்சியே எம்மை உயர்த்தும் படிக்கற்கள். எவ்வளவு தடைகள் எம் முயற்சிகளுக்கு இடையூறாக இருந்தாலும் அதையும் தாண்டி நாம் பாதம் பதித்தால் வெற்றி எமக்குக் கிடைப்பது நிச்சயம்!

# தெரிந்து கொள்ளுங்கள்

காடை இனம்
கருங்காடை
புதர்க்காடை
வர்ணக்காடை
காடை
மஞ்சல் கால்காடை
குறுங்காடை

கௌதாரி இனம்
வர்ணக் கௌதாரி
கௌதாரி

வல்லூறு இனம்
சிவப்பு வல்லூறு
பெரிய வல்லூறு
வல்லூறு
சிறிய வல்லூறு

உப்புக் கொத்தி இனம்
கல்பொறுக்கி உப்புக்கொத்தி
பட்டாணி உப்புக்கொத்தி
மணல் நிற உப்புக்கொத்தி

குருவி இனம்
தூக்கணாங்குருவி
சோளக்குருவி
கல்குருவி
கறுப்பு வெள்ளைக்குருவி

குயில் இனம்
செங்குயில்
சங்களத்திக்குயில்
களச்சான்குயில்

பசையெடுப்பான் இனம்
செம்பழுப்பு வயிற்றுப் பசையெடுப்பான்
ஷெல்வெட் நெற்றிப்பசையெடுப்பான்

சிலம்பன் இனம்
காட்டுச் சிலம்பன்
வெண்தலைச் சிலம்பன்
கலகலப்பான் சிலம்பன்
கருஞ்சிவப்புச் சிலம்பன்
பெரிய சாம்பல் சிலம்பன்
தவிட்டுச் சிலம்பன்
மஞ்சள் கண் சிலம்பன்
கருந்தலைச் சிலம்பன்
வெண்தொண்டைச் சிலம்பன்
வளைந்த அலகுச்சிலம்பன்
புள்ளிச்சிலம்பன்

சிரிப்பான் இனம்
வெண்மார்புச் சிரிப்பான்
நீலகிரிச் சிரிப்பான்
வய நாட்டுட்டுச் சிரிப்பான்

பூங்குருவி இனம்
நீலத்தலை பூங்குருவி
நீலப் பூங்குருவி
சிகாரப் பூங்குருவி
செந்தலைப் பூங்குருவி
நீலகிரிப் பூங்குருவி

பஞ்சுருட்டான் இனம்
காட்டுப்பஞ்சுருட்டான்
பச்சைப் பஞ்சுருட்டான்
நீலவால் பஞ்சுருட்டான்
செந்தலைப் பஞ்சுருட்டான்

மீன் கொத்தி இனம்
விரால் மீன் கொத்தி
சிறு மீன் கொத்தி
பெரிய அலகு மீன் கொத்தி
வெண்மார்பு மீன் கொத்தி
கருந்தலை மீன் கொத்தி
கறுப்பு வெள்ளை மீன் கொத்தி

ஆந்தை இனம்
உகை ஆந்தை
பட்டைக்கழுத்து சின்ன ஆந்தை
கொம்பன் ஆந்தை
பெரிய காட்டு ஆந்தை
பூமன் ஆந்தை
பெரிய புள்ளி ஆந்தை
சிறிய காட்டு ஆந்தை
புள்ளி ஆந்தை
வேட்டைக்கார ஆந்தை
குட்டைக்காது ஆந்தை

காக்கை இனம்
வால் காக்கை
வெள்ளை வயிற்று வால் காக்கை
அண்டங்காக்கை
காக்கை
தீக்காக்கை

கரிச்சான் இனம்
கருங்கரிச்சான்
வெள்ளை வயிற்றுக் கரிச்சான்
கரும்பச்சைக் கரிச்சான்
கொண்டைக் கரிச்சான்
துடுப்புவால் கரிச்சான்
கரிச்சான்

தோல்க்குருவி இனம்
கருவளையத் தோல்க்குருவி
சின்னத் தோல்க்குருவி

ஆலா இனம்
பருத்த அலகு ஆலா
ஆற்று ஆலா
கறுப்பு வயிற்று ஆலா
மீசை ஆலா

ஆள்க்காட்டி இனம்
மஞ்சல் மூக்கு ஆள்க்காட்டி
சிவப்பு ஆள்க்காட்டி

கிளி இனம்
குட்டைக்கிளி
பெரிய பச்சைக்கிளி
செந்தார்ப்பைங்கிளி
செந்தலைக்கிளி
நீல இறக்கைக்கிளி

புறா இனம்
மந்திப் புறா
பெரியபச்சைப் புறா
பச்சைப் புறா
சாம்பல் நெற்றிப் புறா
பஞ்சவர்ணப் புறா
கன்னிப் புறா, தவிட்டுப் புறா
மாடப் புறா, புள்ளிப் புறா
நீலகிரிகாட்டுப் புறா,
சிறிய தவிட்டுப்புறா

கழுகு இனம்
மஞ்சல் திருடிக் கழுகு
வெண் முதுகுக் கழுகு
செந்தலைக் கழுகு
ஒனான் கொத்திக் கழுகு

கோட்டான் இனம்
பெரிய கோட்டான்
கோட்டான்

காலி இனம்
பவளக்காலி
சின்னப்பச்சைக் காலி

கோழி இனம்
தாமரைப் பாலைக் கோழி
நீளலால் இலைக் கோழி
சுண்டலீக் கோழி
வர்ணச் அண்டலீக் கோழி
காட்டுக் கோழி
காணாங்கோழி
நீல மார்புச் சாம்பல் கோழி
கம்புள் கோழி
சிவப்புக் காளாங் கோழி
தண்ணீர்க் கோழி
நீலத்தாழைக் கோழி
தாழைக் கோழி
தாமக் கோழி
வரகுக் கோழி

தொகுப்பு: பா.கலைவாணி.

# வீட்டு மருத்துவக் குறிப்புகள்

**செரியாமை**

01) இலந்தைப் பழத்தின் விதையை நீக்கி விட்டு தசையுடன் மிளகாயும் உப்பும் சேர்த்தரைத்து உலர்த்தி வைத்துக் கொண்டு கடுக்காயளவு காலையில் கொடுத்து வரலாம்.

02) ஒரு அவுன்ஸ் நெல்லிக்காய் சாறும் 1/4 அவுன்ஸ் தேனும் கலந்து நாள் தோறும் அதிகாலையில் வெறும் வயிற்றில் பருகலாம்.

03) 2 அவுன்ஸ் தேனை தண்ணீரில் கலந்து பருகி வந்தால் நாள் பட்ட அஜீரணம் அகன்று விடும்.

04) புளியந் தளிரையும், புளியம்பூவையும் சேர்த்து துவையல் செய்து சாப்பிடுவது நன்று.

05) தோடம்பழத்தோலை சிறு சிறு துண்டுகளாக நறுக்கித் தண்ணீரில், ஊறவைத்துப் பிசைந்து வடிகட்டி அந்தச் சாறுடன் தோடம்பழச் சாற்றையும் கலந்து வெறும் வயிற்றில் பருக நல்ல ஜீரண சக்தி உண்டாகும்.

06) கொய்யா மரத்தின் கொழுந்தை பறித்து அதை வெறும் வயிற்றில் மென்று தின்ன வேண்டும்.

07) காலையும் மாலையும் புதிதாக கறந்த பசுவின் பாலைக்காய்ச்சி 2 அவுன்ஸ் தேன் கலந்து வெறும் வயிற்றில் பருகி வரலாம்.

08) நற்சீரகத்தை இலேசாக வறுத்து பொடி செய்து அதனுடன் பனை வெல்லம் சேர்த்து சாப்பிடலாம்.

09) பலாப்பழத்தினால் ஏற்பட்ட அஜீரணம் குணமாக நன்கு கனிந்த ஒரு வாழைப்பழத்தைச் சாப்பிட்டால் குணமாகும்.

10) வாழைப்பழத்தினால் ஏற்பட்ட அஜீரணத்திற்கு ஏலக்காய் அல்லது சிறிது நெய்யினை சாப்பிட்டால் குணமடையும்.

11) வெந்தயக் கீரையுடன் பருப்பு சேர்த்துக் கடைந்து சாப்பிட்டால் அஜீரணக் கோளாறுகள் தீரும்.

12) அரைக் கீரையுடன் பூண்டு, மிளகு, சீரகம் சேர்த்து புளி சேர்க்காமல் கடைந்து பக்குவப்படுத்தி உண்ணலாம்.

13) சுக்குத்தூளை கரும்பு இரசத்தில் சேர்த்து காலையில் சாப்பிட்டால் வயிறு இரைச்சல் இல்லாமல் போகும்.

14) சுக்கு தூள் 1 கிராமும், உடன் கறந்த பசுப்பால் 100 மி.லீ சேர்த்து சாப்பிட்டால் பசி உண்டாகும்.

ஸ்ரீ.திட்சிகா.

# மூலிகைகளும் நோய்களும்

**துளசி:**
மார்புச்சளி, மூக்கடைப்பு, வயிற்றுப்போக்கு, காதுவலி போன்ற நோய்களுக்கு இதன் இலைகளின் சாறு சிறந்த நிவாரணி ஆகும்.

**கொய்யா:**
வயிற்றுப்போக்கு இது பயன்தரும். மலமிளக்கியாகவும் பயன்படுத்தலாம்.

**மாதுளை:**
கண்நோய்க்கு இதன் இலைகள் பயன்படுத்தப்படுகின்றது. வயிற்றுப் போக்கு, வயிற்றுவலி போன்ற நோய்களுக்கு இதன் பழம் சிறந்தது.

**வெற்றிலை:**
மூச்சுக்குழல் நோய்களுக்குச் சிறந்தது. இதன் வேர்ப்பகுதி மலட்டுத் தன்மையை ஏற்படுத்தவல்லது.

**மிளகு:**
பசியின்மை, மலச்சிக்கல், பக்கவாதம், மூட்டுவலி, மூலநோய் போன்றவற்றுக்கு இதன் கசாயம் செய்து பருகிவரக் குணமாகும்.

**ரோஜாப்பூ:**
இதயத்துக்கு நன்மருந்தாகவும் கபத்தை வெளியேற்றவும் பயன்படுத்தலாம்.

**ஆமணக்கு:**
இதன் எண்ணெயைப் பூசினால் தோல் வியாதிக்கும், தாய்ப்பால் சுரப்பு அதிகரிப்புக்கும் சிறந்தது.

**கத்தரிக்காய்:**
மூச்சுக்குழல் நோய், சிறுநீர்க் கழிப்பின்போது ஏற்படும் வலி, கல்லீரல் நோய் போன்றவற்றுக்கு நன்மை தரும்.

**தூதுவளை:**
நுரையீரல் நோய், இருமல், காய்ச்சல், மூச்சுக்குழல் அழற்ச்சி போன்ற நோய்களுக்கு இதன் இலைகள் சிறந்தது.

**அகத்தி:**
மூக்கடைப்பு, தலைவலி, காயங்களுக்கும் இதன் இலைகளை அரைத்துப் பயன்படுத்தலாம். கபத்தை வெளியேற்றவும் பயன்படுத்தப்படுகிறது.

**பசலைக்கீரை:**
சிறுநீர்க்கல், நுரையீரல் வீக்கம் போன்றவற்றுக்கு குளிர்ச்சி தரும். மலமிளக்கி, மூச்சுத் தொல்லை, கல்லீரல் வீக்கம் போன்ற நோய்களுக்கும் பயன்படுத்தலாம்.

க.நிலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org